# குடியியற் கல்வி

## தரம்

# 8



**கல்வி வெளியீட்டுத் திணைக்களம்**



சகல பாட நூல்களையும் இலத்திரனியல் ஊடாகப் பெற்றுக் கொள்வதற்கு
www.edupub.gov.lk வலைத்தளத்தை நாடுங்கள்.

முதலாம் பதிப்பு - 2016
இரண்டாம் பதிப்பு - 2017
மூன்றாம் பதிப்பு - 2018
நான்காம் பதிப்பு - 2019

முழுப் பதிப்புரிமையுடையது.

ISBN 978-955-25-0137-1

இந்நூல் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால்
இல 105 - 1 லேக் வீதி, அம்பன்தல, முல்லேரியா புதிய நகரத்தில்
அமைந்துள்ள பராமவுன்ட் சொலூசன்ஸ் பிரைவட் லிமிடெட்
அச்சகத்தில் அச்சிடப்பட்டு, வெளியிடப்பட்டது.

# தேசிய கீதம்

சிறீ லங்கா தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நல்லெழில் பொலி சீரணி
நலங்கள் யாவும் நிறை வான்மணி லங்கா
ஞாலம் புகழ் வள வயல் நதி மலை மலர்
நறுஞ்சோலை கொள் லங்கா
நமதுறு புகலிடம் என ஒளிர்வாய்
நமதுதி ஏல் தாயே
நம தலை நினதடி மேல் வைத்தோமே
நமதுயிரே தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதாரருள் ஆனாய்
நவை தவிர் உணர்வானாய்
நமதேர் வலியானாய்
நவில் சுதந்திரம் ஆனாய்
நமதிளமையை நாட்டே
நகு மடி தனையோட்டே
அமைவுறும் அறிவுடனே
அடல் செறி துணிவருளே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதார் ஒளி வளமே
நறிய மலர் என நிலவும் தாயே
யாமெலாம் ஒரு கருணை அனைபயந்த
எழில்கொள் சேய்கள் எனவே
இயலுறு பிளவுகள் தமை அறவே
இழிவென நீக்கிடுவோம்
ஈழ சிரோமணி வாழ்வுறு பூமணி
நமோ நமோ தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

ஒரு தாய் மக்கள் நாமாவோம்
ஒன்றே நாம் வாழும் இல்லம்
நன்றே உடலில் ஓடும்
ஒன்றே நம் குருதி நிறம்

அதனால் சகோதரர் நாமாவோம்
ஒன்றாய் வாழும் வளரும் நாம்
நன்றாய் இவ் இல்லினிலே
நலமே வாழ்தல் வேண்டுமன்றோ

யாவரும் அன்பு கருணையுடன்
ஒற்றுமை சிறக்க வாழ்ந்திடுதல்
பொன்னும் மணியும் முத்துமல்ல - அதுவே
யான்று மழியாச் செல்வமன்றோ.

**ஆனந்த சமரக்கோன்**
கவிதையின் பெயர்ப்பு.



*''புதிதாகி, மாற்றமடைந்து சரியான அறிவின் மூலம்*
*நாட்டுக்கும் முழு உலகிற்கும் அறிவுச் சுடராகுங்கள்''*

## கௌரவ கல்வி அமைச்சரின் செய்தி

கடந்து சென்ற இரு தசாப்தங்களுக்கு அண்மிய காலமானது உலக வரலாற்றில் விசேட தொழினுட்ப மாற்றங்கள் நிகழ்ந்ததொரு காலமாகும். தகவல் தொழினுட்பம் மற்றும் ஊடகங்களை முன்னணியாகக் கொண்ட பல்வேறு துறைகளில் ஏற்பட்ட துரித வளர்ச்சியுடன் இணைந்து மாணவர் மத்தியில் பல்வேறு சவால்கள் தோன்றியுள்ளன. இன்று சமுகத்தில் காணப்படும் தொழில்வாய்ப்பின் இயல்பானது மிக விரைவில் சிறப்பான மாற்றங்களுக்கு உட்படலாம். இத்தகைய சூழலில் புதிய தொழினுட்ப அறிவையும் திறனையும் அடிப்படையாகக் கொண்டதொரு சமுகத்தில் வெவ்வேறு விதமான இலட்சக்கணக்கான தொழில்வாய்ப்புகள் உருவாகின்றன. எதிர்கால சவால்களை வெற்றிகொள்ளுவதற்கு நீங்கள் பலம்பெற வேண்டும் என்பது கல்வி அமைச்சரென்ற வகையில் எனதும் எமது அரசினதும் பிரதான நோக்கமாகும்.

இலவசக் கல்வியின் சிறப்புமிக்கதொரு பிரதிபலனாக உங்களுக்கு இலவசமாகக் கிடைத்துள்ள இந்நூலை சீராகப் பயன்படுத்துவதும் அதன் மூலம் தேவையான அறிவைப் பெற்றுக்கொள்வதுமே உங்களது ஒரே குறிக்கோளாக இருக்க வேண்டும். அத்துடன் உங்கள் பெற்றோர்களுட்பட மூத்தோரின் சிரமத்தினதும் தியாகத்தினதும் பிரதிபலனாகவே இலவசப் பாடநூல்களை உங்களுக்கு அரசினால் பெற்றுத்தர முடிகிறது என்பதையும் நீங்கள் நன்கு விளங்கிக்கொள்ள வேண்டும்.

ஓர் அரசாக நாம், மிக வேகமாக மாறிவரும் உலக மாற்றத்திற்குப் பொருந்தும் விதத்தில் புதிய பாடத்திட்டத்தை அமைப்பதும் கல்வித் துறையில் தீர்க்கமான மாற்றங்களை மேற்கொள்வதும் ஒரு நாட்டின் எதிர்காலம் கல்வி மூலமே சிறப்படையும் என்பதை மிக நன்றாகப் புரிந்து வைத்துள்ளதனாலேயாகும். இலவசக் கல்வியின் உச்சப் பயனை அனுபவித்து நாட்டிற்கு மாத்திரமன்றி உலகிற்கும் செயற்றிறன் மிக்க ஓர் இலங்கைப் பிரசையாக நீங்களும் வளர்ந்து நிற்பதற்கு தீர்மானிக்க வேண்டியுள்ளது. இதற்காக இந்நூலைப் பயன்படுத்தி நீங்கள் பெற்றுக்கொள்ளும் அறிவு உங்களுக்கு உதவுமென்பது எனது நம்பிக்கையாகும்.

அரசு உங்கள் கல்வியின் நிமித்தம் செலவிடுகின்ற மிகக்கூடிய நிதிக்குப் பெறுமதியொன்றைச் சேர்ப்பது உங்கள் கடமையாவதுடன் பாடசாலைக் கல்வியூடாக நீங்கள் பெற்றுக்கொள்ளும் அறிவு மற்றும் திறன்கள் போன்றவையே உங்கள் எதிர்காலத்தைத் தீர்மானிக்கின்றன என்பதையும் நீங்கள் நன்கு கவனத்திற்கொள்ள வேண்டும். நீங்கள் சமூகத்தில் எந்த நிலையிலிருந்தபோதும் சகல தடைகளையும் தாண்டி சமூகத்தில் மிக உயர்ந்ததொரு இடத்திற்குப் பயணிக்கும் ஆற்றல் கல்வி மூலமாகவே உங்களுக்குக் கிடைக்கின்றது என்பதை நீங்கள் நன்கு விளங்கிக்கொள்ள வேண்டும்.

எனவே இலவசக் கல்வியின் சிறந்த பிரதிபலனைப் பெற்று, மதிப்பு மிக்கதொரு பிரசையாக நாளைய உலகை நீங்கள் வெற்றி கொள்வதற்கும் இந்நாட்டில் மட்டுமன்றி வெளிநாடுகளிலும் இலங்கையின் நாமத்தை இலங்கச் செய்வதற்கும் உங்களால் இயலுமாகட்டும் என கல்வி அமைச்சர் என்ற வகையில் நான் பிரார்த்திக்கின்றேன்.

**அகில விராஜ் காரியவசம்**
***கல்வி அமைச்சர்***

## முன்னுரை

உலகின் சமூக, பொருளாதார, தொழினுட்ப, கலாசார விருத்தியுடன் சேர்ந்து கல்வியின் நோக்கங்கள் மிக விரிந்த தோற்றமொன்றைப் பெற்றுள்ளன. மானிட அனுபவங்கள், தொழினுட்ப மாற்றங்கள் ஆராய்ச்சி மற்றும் புதிய குறிகாட்டிகளின்படி கற்றல் கற்பித்தல் செயற்பாடும் நவீன மயமாக்கப்பட்டுள்ளது. அதன்போது மாணவர் தேவைக்குப் பொருந்தும் விதமான கற்றல் அனுபவத்தை ஒழுங்கமைத்து கற்பித்தல் செயற்பாட்டை நடைமுறைப்படுத்திச் செல்வதற்கு பாடத்திட்டத்தில் காணப்படுகின்ற நோக்கங்களிற்கிணங்க பாடம் தொடர்பான விடயங்களை உள்ளடக்கிப் பாடநூல்களை ஆக்குவது அவசியமாகும். பாடநூல் என்பது மாணவரின் கற்றல் சாதனம் மாத்திரமல்ல. அது கற்றல் அனுபவங்களைப் பெறுவதற்கும் அறிவு, பண்பு விருத்திக்கும் நடத்தை மற்றும் மனப்பாங்கு வளர்ச்சியுடன் உயர்ந்த கல்வியொன்றை பெற்றுக் கொள்வதற்கும் மிகவும் உதவக்கூடியதுமாகும்.

இலவசக் கல்விக் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் நோக்கிலேயே தரம் 1 முதல் தரம் 11 வரையிலான சகல பாடநூல்களும் அரசினால் உங்களுக்கு வழங்கப்படுகின்றன. அந்நூல்களிலிருந்து உயர்ந்தபட்சப் பயன்களைப் பெற்றுக்கொள்வதுடன், அவற்றைப் பாதுகாப்பதும் உங்களது கடமையாகும் என்பதையும் நினைவூட்டுகின்றேன். பூரண ஆளுமைகொண்ட நாட்டிற்குப் பயனுள்ள சிறந்ததொரு பிரசையாகுவதற்கான பயிற்சியைப் பெற்றுக் கொள்வதற்கு இப்பாடநூல் உங்களுக்குக் கைகொடுக்கும் என நான் எண்ணுகிறேன்.

இப்பாடநூலாக்கத்தில் பங்களிப்புச் செய்த எழுத்தாளர், பதிப்பாசிரியர் குழு உறுப்பினர்களுக்கும் கல்வி வெளியீட்டுத் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும்.

**டபிள்யூ. எம். ஜயந்த விக்கிரமநாயக்க**
கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்
இசுருபாய
பத்தரமுல்ல.
2019.04.10

## கண்காணிப்பும் மேற்பார்வையும்

டபிள்யூ. எம். ஜயந்த விக்கிரமநாயக்க : கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்,
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

## வழிகாட்டல்

டபிள்யூ. ஏ. நிர்மலா பியசீலி : கல்வி வெளியீட்டு ஆணையாளர் (அபிவிருத்தி),
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

## இணைப்பாக்கம்

யூ. எல். உவைஸ் : உதவி ஆணையாளர்,
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

## பதிப்பாசிரியர் குழு

பேராசிரியர் ஜயந்த உயன்கொட : பேராசிரியர்,
அரச கொள்கைகள் திணைக்களம்,
கொழும்பு பல்கலைக்கழகம்.

தம்ம திஸாசாயக : சிரேஷ்ட விரிவுரையாளர்,
கொழும்பு பல்கலைக்கழகம்.

சட்டத்தரணி வசந்தா செனவிரத்ன : துறைத் தலைவர்,
சட்ட பீடம்,
கொழும்பு பல்கலைக்கழகம்.

ஏ. எல். எஸ். அபேவிக்கிரம : சிரேஷ்ட விரிவுரையாளர்,
தேசிய கல்வி நிறுவகம் மஹரகம.

எஸ். கருணாகரன் : விரிவுரையாளர்,
தேசிய கல்வி நிறுவகம், மஹரகம.

ஆர். எம். டீ. றொஹான் : விரிவுரையாளர்,
தேசிய கல்வியியற் கல்லூரி, பஸ்துன்றட்ட.

ஜே. ஏ. பீ. எஸ். ஜயவீர : ஆசிரியர்,
சாந்த ஜோசப் மகா வித்தியாலயம், குளியாப்பிட்டி

யூ. எல். உவைஸ் : உதவி ஆணையாளர்,
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

## எழுத்தாளர் குழு

எம். எப். முஹம்மட் றியாஸ் : விரிவுரையாளர்,
தேசிய கல்வியியற் கல்லூரி, தர்கா நகர்.

யூ. எல். சிபார்தீன் மரிக்கார் : ஆசிரிய ஆலோசகர்,
வலயக் கல்விப் பணிமனை, வத்தேகம.

எம். ஏ. எம். ஹூவைஸ் : ஆசிரியர், அல் - சபா மகா வித்தியாலயம்,
வத்தேகெதர, பொல்கொல்ல.

| | | |
|---|---|---|
| **கலாநிதி. டபிள்யூ. எம். சாமிந்த வனசிங்க** | : | சிரேஷ்ட விரிவுரையாளர்,<br>திறந்த பல்கலைக்கழகம், நாவல. |
| **எம். கே. கிங்ஸ்லி பிரியந்த** | : | விரிவுரையாளர்,<br>றுகுணு கல்வியியற் கல்லூரி, வலஹந்துவ. |
| **எச். எச். அருண இந்திரசேன** | : | ஆசிரிய ஆலோசகர்,<br>வலயக் கல்விப் பணிமனை, பலாங்கொட. |
| **சீ. எஸ். ஜயசிங்க** | : | ஆசிரிய வள முகாமையாளர் (ஓய்வு),<br>ஹொரண. |
| **கே. ஏ. நிலந்த புஸ்பகுமார** | : | அதிபர்,<br>வித்தியார்த்த கனிஷ்ட வித்தியாலயம், மஹரகம. |
| **டபிள்யூ. எச். நாமல் றேணுகா** | : | ஆசிரியர்,<br>எஹலியகொட மத்திய மகா வித்தியாலயம். |
| **ஏ. எம். எஸ். பீ. அலஹகோன்** | : | ஆசிரியர்,<br>தர்மராஜா வித்தியாலயம், கண்டி. |
| **டீ. எம். ஜயலத் பண்டாரா** | : | ஆசிரியர்,<br>சாறனாத் மகா வித்தியாலயம், குளியாப்பிட்டி. |
| **ஜீ. ஜீ. அர். என். சோமவீர** | : | ஆசிரியர்,<br>உயர் மகளீர் கல்லூரி, கண்டி. |

## மொழிப் பதிப்பாசிரியர்

| | | |
|---|---|---|
| **நாராயணன் மல்லிகாதேவி** | : | விரிவுரையாளர்,<br>பௌத்த பாளி பல்கலைக்கழகம், ஹோமாகம. |

## சரவை நோக்கு

| | | |
|---|---|---|
| **ரி. மதிவதனன்** | : | ஆசிரிய ஆலோசகர், வலயக் கல்விப் பணிமனை,<br>பிலியந்தல. |

## இறுதி மதிப்பீடு

| | | |
|---|---|---|
| **முபிஸால் அபூபக்கர்** | : | முதுநிலை விரிவுரையாளர், மெய்யியல் மற்றும்<br>உளவியல் துறை, கலைப் பீடம்,<br>பேராதனைப் பல்கலைக்கழகம். |
| **அருட் சகோதரி மேரி டொனேட்டா** | : | அதிபர், (ஓய்வு). |

## கணினி வடிவமைப்பு

| | | |
|---|---|---|
| **எஸ். ஐஸ்வர்யா** | : | கணனி உதவியாளர்,<br>கல்வி வெளியீட்டுத் திணைக்களம். |

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 01 | பொதுச் சேவைகள் | 01 |
| 02 | ஜனநாயக மக்கள் சமூகம் | 36 |
| 03 | பல்பண்பாட்டு மக்கள் சமூகம் | 59 |
| 04 | சமகாலப் பிரச்சினைகள் | 78 |
| 05 | பிரச்சினைகளைத் தீர்த்து சவால்களை வெற்றி கொள்வோம் | 115 |
| 06 | வேலை உலகிற்குப் பிரவேசிப்போம் | 130 |

# 1 பொதுச் சேவைகள்

## அறிமுகம்

பொதுச் சேவைகள் வழங்கப்படுவதன் நோக்கம் மக்களின் வாழ்க்கைத் தரத்தை பண்புரீதியாக அபிவிருத்தி செய்வதற்கேயாகும். அரசு மற்றும் தனியார் துறையினரால் பொதுச் சேவைகள் வழங்கப்படுகின்றன.

**இந்த அத்தியாயத்தைக் கற்பதனால் உங்களால்,**

- பொதுச் சேவைகள் பற்றி அறிந்து கொள்ளவும்
- அத்தகைய சேவைகள் மக்களின் வாழ்க்கையைச் சிறப்பிக்க பங்களிப்புச் செய்யும் விதத்தை அறிந்து கொள்ளவும்
- பொதுச் சேவைகளை வழங்கும் நிறுவனங்களையும் அவற்றின் பொறுப்புக் களையும் ஆராய்வதற்கும்
- பொதுச் சேவைகளைப் பயன்படுத்துவது தொடர்பாக நீங்கள் செய்ய வேண்டிய கடமைகளை நிறைவேற்றுதல் தொடர்பான தேர்ச்சிகளை விருத்தி செய்துகொள்ளவும்

**முடியுமாக இருக்கும்.**

## பொதுச் சேவைகளை அறிந்துகொள்வோம்

நாளாந்தம் எமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு நாம் பல்வேறு சேவைகளைப் பயன்படுத்துகிறோம். குடும்ப உறுப்பினர் என்ற வகையிலும் பாடசாலை உறுப்பினர் என்ற வகையிலும் நீங்கள் பயன்படுத்தும் சேவைகள் தொடர்பாக சிந்தித்துப் பாருங்கள்.

மக்களின் வாழ்க்கை நிலையில் பண்பு ரீதியான அபிவிருத்தியை ஏற்படுத்தும் நோக்கில், அரசு மற்றும் தனியார் துறை ஆகியவற்றால் அனைத்து மக்களும் பயன்பெறும் வகையில் வழங்கப்படும் சேவைகள் பொதுச் சேவைகள் எனப்படும்.

## நாம் பயன்படுத்தும் பொதுச் சேவைகள்


உரு 1.1 நீர் வழங்கல்


உரு 1.2 சுகாதாரம்


உரு 1.3 கல்வி


உரு 1.4 போக்குவரத்து


உரு 1.5 மின்சாரம்



உரு 1.6 கூட்டுறவுச் சேவை


உரு 1.7 தகவல் பரிமாற்றம்


உரு 1.8 பாதுகாப்புச் சேவை


உரு 1.9 அஞ்சற்சேவை

மக்களுக்குப் பொதுச் சேவைகள் வழங்கப்படும் தன்மையினை அடிப்படையாகக் கொண்டு அவற்றை பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

பொதுச் சேவைகள்

- இலவசமாக வழங்கப்படும் பொதுச் சேவைகள்
- சலுகைக் கட்டண அடிப்படையில் வழங்கப்படும் பொதுச் சேவைகள்
- கட்டணம் அறவிடப்பட்டு வழங்கப்படும் பொதுச் சேவைகள்

சமகால மக்கள் சமூகத்தில் பொதுச் சேவைகள் அத்தியாவசிய சேவைகளாக மாற்ற மடைந்துள்ளன. அதிகமான பொதுச் சேவைகளை அரசு இலவசமாக வழங்குகிறது. குறிப்பிட்ட சில சேவைகள் சலுகைக் கட்டண அடிப்படையில் வழங்கப்படுகின்றன. வேறு சில சேவைகள் கட்டணம் அறவிடப்பட்டு வழங்கப்படுகின்றன. பொதுச் சேவைகளை வழங்குவதற்காக அரசு வருடாந்தம் பெருந்தொகைப் பணத்தைச் செலவு செய்கின்றது. அரசு, மக்களிடமிருந்து சேகரிக்கும் வரி வருமானம் மற்றும் வேறு வருமானங்கள் ஆகியவற்றை மக்களுக்கு இத்தகைய சேவைகளை வழங்குவதற்காகப் பயன்படுத்துகிறது.

### பொதுச் சேவைகளின் முக்கியத்துவம்

- மக்களின் நாளாந்த வாழ்க்கை நடவடிக்கைகளை இலகுபடுத்துதல்
- மக்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றுதல்
- தனித்தனியே பெற்றுக்கொள்ள முடியாத சேவைகளைப் பெற்றுக் கொடுத்தல் (உ+ம்: மின்சாரம், பொதுப் போக்குவரத்து)
- மக்களிடையேயும் பிரதேசங்களுக்கிடையேயும் தொடர்பை ஏற்படுத் துதல்
- பொருட்களின் உற்பத்தி, பங்கீடு மற்றும் சந்தைப்படுத்தல் போன்ற பொருளாதார நடவடிக்கைகளுக்கான வசதிகளை வழங்குதல்
- சமூகத் தேவைகளை நிறைவேற்றுவதன் மூலம் மனித உரிமைகளைப் பாதுகாத்தல்
- சமூக நீதியை நிலைநாட்டுதல்
- குறைந்த வருமானம் பெறுவோருக்கு உதவுதல்

### செயற்பாடு 1.1

- நீங்கள் பயன்படுத்தும் பொதுச் சேவைகளைப் பட்டியறப்படுத்துக.
- இத்தகைய சேவைகளுள், அரசு உமக்கு இலவசமாக வழங்கும் சேவைகள் இரண்டினைப் பெயரிடுக.
- உமது வாழ்வினை சிறப்பாக்கிக் கொள்வதற்கு இச்சேவைகள் உதவுகின்ற விதத்தை விளக்குக.

## பொதுச் சேவைகளின் வளர்ச்சி


உரு 1.10 குளம்

புராதன வரலாற்றில் அனுராதபுரம், பொலன்னறுவை இராசதானிக் காலங்களி லிருந்து அக்கால ஆட்சியாளர்கள் குளங்கள், கால் வாய்கள், வைத்தியசாலைகள், மூலிகைப் பூங்காக்கள் போன்ற மக்கள் பயன்பாட் டிற்கான அம்சங்களை நிறுவுவதற்கு அனுசர ணைகளை வழங்கியுள்ளனர்.

அனுராதபுர யுகத்தைச் சேர்ந்த புத்ததாச மன்னனின் காலத்தில் 10 கிராமங்களுக்கு ஒரு வைத்தியர் வீதம் நியமிக்கப்பட்டிருந்ததாக அறிய முடிகின்றது. வைத்தியசா லைகளை நிறுவி அவற்றுக்குத் தேவையான மூலிகைப் பூங்காக்கள் போன்றவற்றை அமைப்பதற்கும் அரசர்கள் பங்களிப்புச் செய்துள்ளனர்.

அதேபோன்று அனுராதபுர காலந்தொட்டு சமய நிலையங்களை மையமாகக் கொண்டு கல்வி நிறுவனங்கள் செயற்பட்டமை தொடர்பான சான்றுகளும் கிடைக்கப் பெற்றுள்ளன.

இலங்கையில் கி.பி 1815 - 1948 காலப் பகுதியில் பிரித்தானியர் ஆட்சியின் போது பெருந்தோட்டச் செய்கைக்குத் தேவையான வசதிகளை வழங்குவதை நோக்காகக் கொண்டும் நிர்வாக நடவடிக்கைகளை இலகுப டுத்துவதற்காகவும் பாதுகாப்புத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும் நோக்கத்திற்காகவும் சில சேவைகள் ஆரம்பிக் கப்பட்டன.


உரு 1.11 புரதான வைத்தியசாலை ஒன்றினது சிதைவுகள்

## பிரித்தானிய ஆட்சியில் ஆரம்பிக்கப்பட்ட சேவைகள்

- போக்குவரத்து
- அஞ்சல் மற்றும் தந்திச் சேவை
- வங்கிச் சேவை


உரு 1.12 நீராவிப் புகையிரதம்

கி.பி 1945 ஆம் ஆண்டில் இலவசக் கல்விச் சட்டம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் இலவசக் கல்விப் பொதுச் சேவையாக இலங்கையில் நடைமுறைக்கு வந்தது. இலவசக் கல்வி முறையை இலங்கைக்கு அறிமுகம் செய்த பெருமை கலாநிதி C.W.W கன்னங்கரா அவர்களைச் சாரும்.



உரு 1.13 கலாநிதி C.W.W கன்னங்கரா அவர்கள்

கி.பி 1948 இல் இலங்கை சுதந்திரமடைந்ததன் பின்னர், மக்களின் வசதிகளை அல்லது பொதுநலனை நோக்காகக் கொண்டு பொதுச் சேவைகள் பல ஆரம்பிக்கப் பட்டன. அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு அப்போதைய அதிகாரத்திற்கு வந்த அரசாங்கங்கள் அனைத்தும் பல்வேறு செயற்பாடுகளை மேற்கொண்டன.

**செயற்பாடு 1.2**

- புராதன காலத்தில் நிலவிய பொதுச் சேவைகள் தொடர்பாக கீழே தரப்பட்டுள்ள தலைப்புகளுக்கு அமைய தகவற் கோவையைத் தயாரிக்குக.
    - புராதன காலத்தில் இருந்த பொதுச் சேவைகள்
    - அவற்றுக்கு அனுசரணை வழங்கிய ஆட்சியாளர்கள்

## பொதுச் சேவைகளின் சமகால முக்கியத்துவம்

மக்களின்வாழ்க்கைநிலையைமுன்னேற்றுவதற்கு பொதுப் சேவைகளை வழங்குவது தற்காலத்தில் அவசியமானதாக விளங்குகின்றது. நலன்புரி அரசு என்ற வகையில் இவற்றை நிறைவேற் றுவதற்காக அரசினால் பல பெதுச்சேவைகள் செயற்படுத்தப்படுகின்றன. அரசு, இலாப நோக் கற்ற வகையில் இச்சேவைகளை வழங்குகிறது.



உரு 1.14 தகவற் பரிமாற்றக் கோபுரம்

தனியார் துறையினர் கட்டணம் அறவிடுதலை அடிப்படையாகக் கொண்டு இச்சேவைகளை வழங்குவதில் ஈடுபடு கின்றனர். மக்கள் தொகை அதிகரித்தமை மற்றும் தேவைகள் பெருகியமை ஆகியன பொதுச் சேவைகள் வழங்கப்படுவதன் இன்றியமையாமையை மேலும் அதிகரிக்கச் செய்துள்ளன.



உரு 1.15 தகவற் பரிமாற்றுச் செய்மதி

அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்குப் போதுமான வருமானத்தைக் கொண்டிராத மக்களுக்கு சலுகைகள் வழங்குவதற்காகவும் இப்பொதுச் சேவைகள் பயன்படுகின்றன. கல்வி, சுகாதாரம் போன்ற சேவைகள் அரசினால் இலவசமாக வழங்கப்படுவது இதற்கு உதாரணங்களாகும்.

கைத்தொழில் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாக அநேக பொதுச் சேவைகள் துரிதமாக வளர்ச்சியடைந்துள்ளன. தொலைத்தொடர்பாடல் சேவையை இதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம். இச்சேவைகளை வழங்குவதற்காக மிகக் கூடுதலான நிதிச் செலவு ஏற்படுகின்றது. இச்சேவைகள் மக்களுக்கு அத்தியாவசியமான சேவைகளாகும். எனவே, இத்தகைய சேவைகளை பொதுச் சேவைகள் என்ற ரீதியில் வழங்க நேரிடுகின்றது.

## பொதுச் சேவைகளின் பண்புகள்

- எவ்வித பாரபட்சமுமின்றி சகல பிரசைகளுக்கும் பொதுவாகப் பயன்படுத்தக் கூடியதாக விளங்குதல்
- இலாப நோக்கத்திற்கு அப்பால் மக்களின் நலனை நோக்காகக் கொண்டு நடைமுறைப்படுத்தப்படல்
- மக்களின் வாழ்க்கைத் தரத்தைப் பண்புரீதியில் விருத்தி செய்வதை நோக்கமாகக் கொண்டு நடைமுறைப்படுத்தப்படல்
- குறைந்த வருமானம் பெறுவோராலும் இலகுவாகப் பெற்றுகொள்ளக் கூடியதாக விளங்குதல்
- தனியாள் விருத்தியின் மூலம் சமூக அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்தல்
- அடிப்படைத் தேவைகளை நிறைவுசெய்ய உதவுதல்
- பொதுச்சேவைகளை நடைமுறைப்படுத்துவதற்கும் அவற்றைப் பாதுகாப்பதற்குமான சட்டதிட்டங்கள் மற்றும் விதிகள் பின்பற்றப்படல்

### செயற்பாடு 1.3

- மின்சாரம், போக்குவரத்து போன்ற வசதிகளை நீங்கள் தனித்துப் பெற்றுக் கொள்ளக் கூடிய நிலை ஏற்பட்டால் உமக்கு ஏற்படக்கூடிய வசதியீனங்களை வெவ்வேறாகக் குறிப்பிடுக.

## எமது பிரதேசத்திலுள்ள பொதுச் சேவைகள்

### நீர் வழங்கல்

*நீர், சகல உயிரிகளினதும் வாழ்க்கைக்கு அத்தியாவசியமானதொரு வளமாகும். அதேவேளை நீர் வரையறுக்கப்பட்ட வளமாகவும் உள்ளது. புவிமேற்பரப்பின் 70% நீரினால் சூழப்பட்டிருப்பினும், குடிநீர் என்ற வகையில் பயன்படுத்தக் கூடியது 1% இலும் குறைவான அளவினதாகும். இலங்கை இந்து சமுத்திரத்தினால் சூழப்பட்ட ஒரு தீவாகும். ஆறுகள், நீர்வீழ்ச்சிகள் மற்றும் நீர்நிலைகள் பல எமது நாட்டில் காணப்படுகின்ற போதும் குடிநீர் என்ற வகையில் பயன்படுத்தக்கூடிய நீரின் அளவு மிகவும் குறைவானதாகவே காணப்படுகின்றது. இதன் காரணமாக குடிப்பதற்கும் ஏனைய தேவைகளின் பொருட்டும் பயன்படும் நீரை, வழங்க வேண்டிய நிலை அரசிற்கு ஏற்பட்டுள்ளது.*

## பொதுச் சேவையென்ற வகையில் குடிநீர் வழங்கல் முக்கியத்துவம் பெறுவதற்கான காரணங்கள்

- *நாட்டின் சகல பிரதேசங்களிலும் தேவைகளை நிறைவு செய்வதற்குப் போதுமான அளவு நீர் காணப்படாமை*
- *நிலக்கீழ் நீர் மற்றும் ஆற்று நீர் என்பன பல்வேறு காரணிகளால் மாசடைதல்.*

*உதாரணம் :*

  - *விவசாய இராசயனப் பதார்த்தங்களின் பாவனை, இரசாயன உரப் பாவனை*
  - *தொழிற்சாலைக் கழிவுகள் நீருடன் கலத்தல்*

- *நகர்ப்புறப் பிரதேசங்களில் மக்கள் தொகைப் பெருக்கம்*
- *குடித்தொகை அதிகரிப்புக் காரணமாக அமைக்கப்படும் வீடுகளுக்காக நிலம் துண்டாடப்படுவதனால் தூய கிணற்று நீரைப் பெற்றுக்கொள்ள முடியாமை*
- *வரட்சிக் காலங்களில் பல்வேறு பிரதேசங்கள் நீர்ப் பற்றாக்குறையை எதிர்நோக்குதல்*

*தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை, நாட்டின் பல பிரதேச ங்களுக்கான நீர் வழங்கல் சேவையை மேற்கொள்கின்றது. இதன்மூலம் சலுகைக் கட்டண அடிப்படையில் பயனாளிகளுக்கு குடிநீர் வழங்கல் இடம்பெறுகிறது. மனிதப் பயன்பாட்டிற்குப் பொருத்தமான வகையில் நீரை மாற்றுவதற்கு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை பாரிய பணியினை மேற்கொள்கிறது. பல்வேறு தொழிற்சாலைகள் பூங்காக்கள் போன்றவற்றுக்கும் நீர் வழங்கல் மேற்கொள்ளப்படுகிறது.*

*அதேவேளை உள்ளூராட்சி மன்றங்களின் மூலமாகவும் அவற்றின் அதிகாரத்திற்குட் பட்ட பிரதேசங்களின் தேவைகளைக் கருத்திற்கொண்டு குடிநீர் விநியோகம் இடம் பெறுகிறது. தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் பிரதேச காரியாலங்கள் மூலம் நீர்வழங்கல், பராமரித்தல், புனரமைப்பு போன்றன மேற்கொள்ளப்படுகின்றன.*

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை

- பிரதேச பொறியியலாளர்
- பணிப் பொறுப்பதிகாரி
- மானி வாசிப்பாளர்கள்
- நீர்த்தொகுதி இணைப்பாளர்கள்
- தொழிலாளர்கள் போன்றோரை உள்ளடக்கியுள்ளது.



உரு 1.16 நீர் வழங்கற்தொகுதியின் திருத்த நடவடிக்கைகளில் ஈடுபடும் சேவையாளர்

**செயற்பாடு 1.4**

- குடிநீர் வழங்கல் தற்காலத்தில் முக்கியத்துவம் பெற்றுள்ளமைக்கான காரணங்களைச் சுருக்கமாக விளக்குக.

## சுகாதார சேவை

ஆரோக்கியம் மிக்க தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கு இலங்கை சுகாதார சேவை பங்களிப்புச் செய்கின்றது. நோய் நிவாரணம், மற்றும் நோய்களைக் குணப்படுத்துதல் என்பன சுகாதார சேவையின் அடிப்படைச் செயற்பாடுகளாகும். சுகாதார சேவை மக்களுக்கு அத்தியவசிய சேவையாகும். அதனை இலவசமாக வழங்குவதற்கு அரசு வசதிகளை ஏற்படுத்தியுள்ளது.



உரு 1.17 நோயாளிக்குச் சத்திர சிகிச்சையளிக்கும் சந்தர்ப்பமொன்று

இன்று இலங்கையில் சிசு மற்றும் தாய் மரண வீதங்களைக் குறைக்கக் கூடியதாக உள்ளன. அதேவேளை, ஆயுளையும் உயர் மட்டத்திற்கு கொண்டு செல்வதற்கும், தொழுநோய், மலேரியா, போலியோ, யானைக்கால் நோய், காச நோய் போன்றவற்றைப் பூரணமாகக் கட்டுப்படுத்தவும் முடிந்துள்ளது.



உரு 1.18 நோயாளிக்கு சிகிச்சையளிக்கும் வைத்தியரொருவர்

உலக சுகாதார தாபனம் (World Health Organization - WHO) மலேரியா நோயை முற்றாக ஒழித்த நாடாக இலங்கையைப் பிரகடனப்படுத்தியுள்ளமை எமக்குக் கிடைத்த மிகப் பெரிய கௌரவமாகும். இத்தகைய முன்னேற்றகரமான நிலையை அடைவதில் செல்வாக்குச் செலுத்திய காரணிகள் சில வருமாறு,

- சுகாதார சேவை அரசினால் இலவசமாக வழங்கப்படல்
- இலங்கையின் சுகாதார சேவையில் ஏற்பட்ட முன்னேற்றம்
- சுகாதார சேவை நாடு முழுவதும் வழங்கப் படல்
- பொது மக்களின் ஒத்துழைப்பு


உரு 1.19 வைத்திய சிகிச்சை

### சுகாதார சேவையின் செயற்பாடுகள்

- நோயாளர்களுக்குச் சிகிச்சையளித்தல்
- தொற்றா நோய்களை நீக்குவதற்கும் கட்டுப்படுத்துவதற்குமான வேலைத்திட்டங்களை மேற்கொள்ளல்
- நோய்த் தடுப்பு வேலைத்திட்டங்களை செயற்படுத்தல்
- வைத்திய சிகிச்சைகளை நடத்துதல்
- கர்ப்பிணித் தாய்மாருக்குச் சிகிச்சையளித்தல்
- நோய்களைக் கண்டறிவதற்காக ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல்
- சுகாதாரக் கல்வி வழங்கும் வேலைத்திட்டங்களைச் செயற்படுத்தல்
- பாடசாலை மாணவர்களுக்கான சிகிச்சை மற்றும் பற் சுகாதார சேவையை மேற்கொள்ளல்
- தாய், சேய் நல குடும்ப சுகாதார சேவை வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தல்
- திடீர் விபத்து சிகிச்சை வழங்கும் சேவையை நடைமுறைப்படுத்தல்

மேற்கத்தைய வைத்திய முறை, தேசிய ஆயுர்வேத வைத்திய முறை, சித்த, யூனானி மற்றும் ஹோமியோபதி போன்ற வைத்திய முறைகள் நாட்டில் நடைமுறையிலுள்ளன.

மேலைத்தேய வைத்திய முறையின் கீழ் நோயாளர்களுக்கு சிகிச்சையளிப்பதற்காக தாபிக்கப்பட்டுள்ள வைத்தியசாலைகள்.

- தேசிய வைத்தியசாலைகள்
- போதனா வைத்தியசாலைகள்
- மாகாண வைத்தியசாலைகள்
- மாவட்ட வைத்தியசாலைகள்
- ஆதார வைத்தியசாலைகள்
- பிரதேச வைத்தியசாலைகள்
- விசேட வைத்தியசாலைகள்
- ஆரம்ப சுகாதார சிகிச்சை நிலையங்கள்

மேலைத்தேய வைத்திய முறையின்கீழ் சுகாதார சேவை மூலம் நடைமுறைப்படுத்தப்படும் நோய் நிவாரண சேவைகள்

- யானைக்கால் நோய் ஒழிப்பு வேலைத் திட்டம்
- தொழுநோய் ஒழிப்பு வேலைத் திட்டம்
- மலேரியா ஒழிப்பு வேலைத்திட்டம்
- தொற்றுநோய் ஆராய்ச்சி அலகு
- குடும்ப சுகாதார செயலணி
- சுகாதாரக் கல்விச் செயற்பாட்டுப் பிரிவு
- புற்றுநோய்த்தடுப்பு வேலைத்திட்டம்
- டெங்கு நோய் ஒழிப்பு அலகு
- காச நோய் மற்றும் மார்பு நோய் தொடர்பான தேசிய வேலைத் திட்டம்.
- தேசிய பாலியல் நோய்கள் ஒழிப்பு வேலைத்திட்டம்
- எயிட்ஸ் (AIDS) நோய் ஒழிப்பு வேலைத் திட்டம்
- தொற்று நோய்கள் ஒழிப்புப் பிரிவு

தொற்றா நோய்களைத் தடுக்கும் நோக்கில் ஆரம்ப சுகாதார வசதிகளை வழங்கும் பொருட்டு நாடு முழுவதிலும் சுகவாழ்வு மத்திய நிலையங்கள் (2015 ஆம் ஆண்டில் 814 அளவில்) நிறுவப்பட்டு செயற்படுகின்றன.

- சகல பிரதேசங்களையும் உள்ளடக்கும் வகையில் சுகாதார சேவைகளை வழங்குவது தொடர்பாக சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகங்கள் உருவாக்கப் பட்டுள்ளன.

சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்கள் மூலம் உங்களது பிரதேசத்திற்கு வழங்கப் படக்கூடிய சேவைகளுக்கு உதாரணங்கள் சில வருமாறு,

- தொற்று நோய்கள் ஒழிப்பு வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தல்
- தொற்றா நோய்களை ஒழிப்பதற்கான வேலைத்திட்டத்தைச் செயற்படுத்தல்
- சுகாதாரக் கல்வி வேலைத்திட்டத்தை செயற்படுத்துதல்
- தாய், சேய் நலச் சிகிச்சைகளை நடத்துதல்
- நோய்த்தடுப்பூசி வேலைத்திட்டத்தைச் செயற்படுத்துதல்
- பாடசாலைச் சுகாதார வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்

ஆயுர்வேத வைத்தியசாலைகள் மற்றும் மருந்தகங்கள் மூலமும் உமது பிரதேசத்திற்கு சுகாதார சேவைகள் வழங்கப்படுகின்றன. நோய்களைக் குணப்படுத்துவதற்கான சிகிச்சைகளையளிப்பதற்கு இத்தகைய நிறுவனங்கள் செயற்படுகின்றன.

இத்தகைய சேவைகளை இலவசமாக வழங்குவதற்கு அரசு வசதிகளை ஏற்படுத்தி யுள்ளது. சமகால ஆயுர்வேத வைத்திய முறைமை வெளிநாட்டவர் மத்தியிலும் பிரபல்யமாக விளங்குகின்றது.

ஆயுர்வேத வைத்திய முறையின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் நிறுவனங்கள்

- ஆயுர்வேத போதனா வைத்தியசாலை
- ஆயுர்வேத ஆராய்ச்சி நிலையம்
- மாகாண சபைகள் மூலம் நிருவகிக்கப்படும் ஆயுர்வேத வைத்தியசாலை
- மாகாண சபைகள் மூலம் நிருவகிக்கப்படும் ஆயுர்வேத மருந்தகங்கள்
- உள்ளூராட்சி மன்றங்கள் மூலம் நிருவகிக்கப்படும் இலவச மருத்துவ நிலையங்கள்

இவற்றுக்கு மேலதிகமாக தேசிய பாரம்பரிய வைத்தியர்களின் சிகிச்சை போன்ற வற்றினாலும் மக்களுக்கு அதிக சேவைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

தனியார் துறையும் கூட சுகாதார சேவைகளை வழங்குவதில் பங்களிப்புச் செய்கின்ற அதேவேளை, அச்சேவைகள் கட்டணம் அறவிடுவதை அடிப்படையாகக் கொண்டு செயற்படுகின்றன.

இலங்கையின் சுகாதார சேவை பாரிய முன்னேற்றம் கண்டுள்ளது. எனினும், இருதய நோய், நீரிழிவு நோய், சிறுநீரக நோய், புற்றுநோய் போன்ற தொற்றா நோய்கள் சமகாலத்தில் அதிகரித்துள்ளன. அதேவேளை, அதிகளவானோர் புகைத்தல் மற்றும் மதுபானம் அருந்துவதன் காரணமாக நோய்களுக்குள்ளாகின்ற நிலையும் காணப்படுகிறது.

**மேற்படி நிலைமைகளைத் தடுப்பதற்காக மக்களால் பின்பற்றப்பட வேண்டிய வழிமுறைகள்**

- வைத்திய ஆலோசனைகளைப் பின்பற்றுதல்.
- சிறந்த சுகாதார பழக்கவழங்கங்களைக் கடைப்பிடித்தல்.
- சுகாதாரமான உணவு மற்றும் பானங்களை உட்கொள்ளல்.
- போதுமான அளவு உடற்பயிற்சி செய்தல்.
- புகைபிடித்தல் மற்றும் மதுப்பழக்கத்தைக் கைவிடல்.

### செயற்பாடு 1.5

- உமது பிரதேசத்தில் சேவைகளை வழங்கும் வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்களின் பணிக்குழுவினரைப் பதவிகளுக்கமைய பெயரிடுக.
- தொற்று நோய்கள் மற்றும் தொற்றா நோய்களைத் தடுப்பதற்கு உமது பிரதேசத்தின் வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்கள் மூலம் மேற்கொள்ளப்படும் சேவைகளைத் தனித் தனியே பட்டியற்படுத்துக.

## கல்வி

ஒரு நாட்டின் வளங்களுள் மிகவும் பெறுமதி வாய்ந்தது மனித வளமாகும். மனித வளத்தின் விருத்தி மற்றும் இருப்பு ஆகியவற்றின் மீது செல்வாக்குச் செலுத்தக்கூடிய பிரதான காரணியாக கல்வி விளங்குகின்றது. கல்வி பெறுவதற்கான உரிமை, மனித உரிமைகளுள் ஒன்றாகவும் சிறுவர் உரிமையாகவும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.



உரு 1.20 ஆரம்ப வகுப் பொன்றில் நடைபெறும் கல்விச் செயற்பாடு

கல்வியை பெறுவதற்கான உரிமையைப் பாதுகாப்பதற்காக அரசு மேற்கொள்ளும் முயற்சிகள் வருமாறு,

- அரசினால் ஆரம்பக் கல்வி முதல் உயர் கல்வி வரை இலவசமாக கல்வி வழங்கப்படுதல்
- 05 - 16 வயது வரை பிள்ளைகளுக்கு கல்வி பெறுவது கட்டாயமாக்கப்பட்டிருத்தல்
- வருடாந்த அரசாங்க வரவு - செலவுத் திட்டத்தில் பெருமளவு நிதி கல்விக்காக ஒதுக்கப்படல்



உரு 1.21 பல்கலைக்கழகக் கல்வி

- பாட நூல்கள், பாடசாலைச் சீருடை என்பன இலவசமாக வழங்கப்படல்
- ''அண்மைய பாடசாலை சிறந்த பாடசாலை'' என்ற கருப்பொருளுக்கமைய ஏறாத்தாழ 7000 பாடசாலைகளை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுத்தல்



உரு 1.22 பிரிவேனாக் கல்வி

- போஷாக்குத் தேவை இனங்காணப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு ஒரு வேளை இலவச உணவு வழங்குதல்

தனியார் துறையினரால் தனியார் பாடசாலைகள், உயர்கல்வி நிறுவனங்கள் மற்றும் தொழிற் பயிற்சி நிறுவனங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

முன்பள்ளி வயதையடைந்த பிள்ளைகளுக்காக

- உள்ளூராட்சி மன்றங்கள்
- தொண்டர் அமைப்புகள்
- சமய நிறுவனங்கள் மற்றும் தனியார் துறை ஆகியன மூலம் முன்பள்ளிப் பருவ விருத்தி நிலையங்கள் நடத்தப்படுகின்றன


உரு 1.23 தொழிற்பயிற்சி இடம்பெறும் சந்தர்ப்பம்

தமது கல்வியையும் தொழிலையும் பற்றி பின்வருவோர் கூறுவதில் கவனம் செலுத்துங்கள்.



நான் ஒரு சங்கீத ஆசிரியை. சிறு வயதிலிருந்தே கவிதை, மற்றும் பாட்டுப் பாடுவதில் ஆர்வம் காட்டினேன். எனினும், எனது திறன்களை முன்னேற்றியவர்கள் எனது ஆசிரியர்களாவர். கிரமத்துப் பாடசாலையில் உயர்தரம் சித்தியடைந்து பல்கலைக் கழகம் நுழைந்தேன். அங்கே சங்கீதத்துடன் தொடர்புடைய பட்டப் படிப்பை நிறைவு செய்ய எனக்கு வாய்ப்புக் கிடைத்தது. இலவசக் கல்விதான் எனக்குத் துணை புரிந்தது. தற்போது நான் மிகவும் மகிழ்ச்சியுடனும் அக்கறையுடனும் மாணவர்களுக்குக் கற்பிக்கின்றேன்.



நான் பிரதம பொலிஸ் பரிசோதகர் ஒருவர். எமது கிராமத்திலுள்ள மகாவித்தியாலயத்தில் உயர்தரம் சித்தி யடைந்து, உப பொலிஸ் பரிசோதகராக பொலிஸ் சேவையில் இணைந்தேன். பாடசாலையில் நான் சிறந்த விளையாட்டு வீரன். மாகாண மட்டப் போட்டிகளிலும் பல தடவைகள் வெற்றி பெற்றுள்ளேன். அந்தத் திறன்களை வளர்த்துக் கொள்ள எனக்கு உதவியது எனது பாடசாலை, எனது ஆசிரியர்கள் மற்றும் இலவசக் கல்வி ஆகியன ஆகும். எனது தாய் நாட்டுக்காக அர்ப்பணிப்புடன் சேவை செய்வதை எனது கடமையாகக் கொண்டுள்ளேன்.



நான் எனது கிராம வைத்தியசாலையில் ஒரு வைத்தியராகச் சேவை செய்கிறேன். சிறு வயது முதற்கொண்டே வைத்தியராக வரவேண்டும் என்பது எனது இலட்சியமாகும். நான் ஆரம்பக் கல்வியை எனது கிராமப் பாடசாலையில் கற்றேன். 5 ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து மத்திய கல்லூரியில் சேர்ந்தேன். உயர் தரப் பரீட்சையில் சிறப்பாகச் சித்தியடைந்து நான் வைத்திய பீடம் சென்றேன். எனக்குத் தொடர்ந்தும் புலமைப் பரிசில் உதவி கிடைத்தது. இலவசக் கல்வியே எனது எதிர்பார்ப்புகளை நிறைவேற்றியது. அதனால் எனது தாய் நாட்டிற்கே சேவை செய்வது எனது எதிர்பார்ப்பாகும். நான் எனது பாடசாலையையும் ஆசிரியர்களையும் மிகவும் மதிக்கின்றேன்.

**கல்வி மூலம் ஆற்றப்படும் பணிகள்**

- அறிவை வழங்குதல்
- சமூகமயமாக்கத்தை ஏற்படுத்தல்
- நற்பிரசைகளை உருவாக்கல்
- தேசிய ஐக்கியத்தை விருத்தி செய்தல்
- தேசிய தேவைகளுக்குப் பொருத்தமானவர்களைச் சமூகத்திற்கு வழங்குதல்
- தொழில் உலகிலும் பொருளாதாரத்திலும் திறமைமிகு செயற்பாட்டாளராக்குதல்
- உரிமைகளை அனுபவித்து, கடமைகளைச் செய்தல் தொடர்பான தேர்ச்சியை விருத்தி செய்தல்

உமது பாடசாலை, பிரதேசத்தில் பொதுச் சேவை என்ற வகையில் கல்வியை வழங்குகின்ற பிரதான நிறுவனமாக விளங்குகின்றது. உமது பாடசாலையின் பணிக்குழுவினர் மற்றும் ஒழுங்கமைப்புக் கட்டமைப்பு தொடர்பாக நீங்கள் தரம் 06 குடியியற் கல்வி பாடத்தில் கற்றுள்ளீர்கள்.

உமது பிரதேசத்திலுள்ள பாடசாலைகளது நடவடிக்கைகள் சீராக நடைபெறத் தேவையான வசதிகளை வழங்க உதவும் வள நிறுவனங்களாக விளங்குவன கோட்டக் கல்வி அலுவலகமும் வலயக் கல்வி அலுவலகமும் ஆகும்.

கோட்டக் கல்வி அலுவலகம், கோட்டக் கல்விப் பணிப்பாளர் உள்ளிட்ட பணியாட் களைக் கொண்டதாகும். வலயக் கல்வி அலுவலகம், வலயக் கல்விப் பணிப்பாளர், பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், பாடங்களுக்குப் பொறுப்பான உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் உள்ளிட்ட பணியாளர்களை உள்ளடக்கியதாகும்.

**செயற்பாடு 1.6**

- பாடசாலையில் கீழ்வரும் அமைப்புக்களில் உறுப்பினராகச் செயற்படு வதனால் உங்களுக்குக் கிடைக்கத்தக்க பயன்களைக் குறிப்பிடுக. (அட்டவணையைப் பயிற்சிப் புத்தகத்தில் பிரதி செய்க.)

| உறுப்புரிமை வகிக்கும் அமைப்புகள் | உங்களுக்குக் கிடைக்கும் பயன்கள் |
|---|---|
| விவாதக் குழு | |
| இலக்கிய மன்றம் | |
| சமய மன்றம் | |
| மாணவர் தலைவர் குழு | |
| விளையாட்டுக் குழு | |
| மாணவர் படையணி | |
| வாத்தியக் குழு | |

- கல்விச் சேவைகளிலிருந்து உரிய பயன்களைப் பெற்று நாட்டிற்கு சேவையாற்றிய சில அறிஞர்கள் தொடர்பாக தகவல்களைச் சேகரியுங்கள்.

## போக்குவரத்து

விடுமுறைக் காலத்தில் சென்ற சுற்றுலாப் பயணம் தொடர்பாக மகேஸ்வரி அவளது நெருங்கிய நண்பிகளுக்கு விளக்கினாள்.

விடுமுறைக் காலத்தில் புகையிரதத்தில் கொழும்புக்குச் செல்வோம் என நான் தந்தையிடம் கூறினேன். ஆனால் எனது அண்ணா வாடகை வாகனமொன்றில் செல்வோம் எனக் கூறினார். ஆனால் தந்தை புகையிரதம், பேருந்து சேவை என்பன போதியளவு இருக்கும்போது எதற்காக நாங்கள் அதிகம் செலவு செய்ய வேண்டும்? புகையிரதத்திலே செல்வோம் என்று கூறினார்.

புகையிரதப் பயணம் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. களைப்பும் தெரியவில்லை, பிரயாணமும் இலகுவாக அமைந்தது.

நாங்கள் கொழும்பில் மூன்று நாட்கள் தங்கினோம். மிருகக்காட்சிச்சாலை, கோள் மண்டலம், துறைமுகம், நூதனசாலை என எல்லா இடங்களையும் பார்வையிட்டோம். கொழும்பினுள் பேருந்துகளில் பயணம் செய்தோம். இலங்கைப் போக்குவரத்துச் சபை பேருந்து போன்று தனியார் பேருந்துச் சேவையும் சிறப்பாகக் காணப்பட்டது. நாங்கள் மீண்டும் யாழ்ப்பாணத்திற்குப் புகையிரதத்தில் திரும்பினோம். நாங்கள் புகையிரதத்திலும் பேருந்திலும் சென்றதனால் செலவு மிகக் குறைவாகவே ஏற்பட்டது என்று அம்மா கூறினார்.

பொதுப் போக்குவரத்து நாட்டு மக்களின் போக்குவரத்துத் தேவைகளை நிறைவு செய்வதற்குப் பங்களிப்புச் செய்கின்றது. அதேபோன்று பொருளுற்பத்தி, விநியோகம், விற்பனை போன்ற நடவடிக்கைகளுக்கும் போக்குவரத்துச் சேவை அவசிய மானதாகும்.



உரு 1.24 புகையிரதம்

எமது நாட்டு மக்களில் பெரும்பாலானோர் போக்குவரத்துத் தேவைகளை நிறைவுசெய்து கொள்வதற்கு பொதுப் போக்குவரத்துச் சேவைகளையே பயன்படுத்துகின்றனர்.

- பாடசாலைக்குச் செல்லல்
- தனிப்பட்ட பிரயாணங்கள்
- வேலைக்குச் செல்லல்
- சுற்றுலா நடவடிக்கைகள் (உ+ம்) உல்லாசப் பயணம்



உரு 1.25 இ.போ.ச பஸ் சேவை

போன்ற தேவைகளுக்காக போக்குவரத்துச் சேவைகள் எமக்குப் பயனளிக்கின்றன. தலைநகர் உள்ளிட்ட நகரப் பிரதேசங்களில் பெரும்பாலும் வாகன நெரிசல்கள் ஏற்படுகின்றன. இவற்றைக் குறைப்பதற்கும் பொதுப் போக்குவரத்துச் சேவையைப் பயன்படுத்துவது காலத்தின் தேவையாகும். போக்குவரத்துச் தேவைகளை நிறைவேற்றுவதற்காகத் தனிப்பட்ட வாகனங்களுக்குப் பதிலாக பொதுப் போக்குவரத்துச் சேவையைப் பயன் படுத்துவதன் மூலம் பண விரயத்தைக் குறைத்துக் கொள்ளவும் முடிகிறது.



உரு 1.26 தனியார் பஸ் சேவை

பயணிகள் போக்குவரத்திற்காக சேவைகளை வழங்கு கின்ற நிறுவனங்கள் வருமாறு,

- இலங்கைப் புகையிரதத் திணைக்களம்
- இலங்கைப் போக்குவரத்துச் சபை
- தனியார் பஸ் கம்பனிகள்
- விமானச் சேவை

இலங்கைப் புகையிரத சேவையும் தனியார் துறையினரும் போக்குவரத்துச் சேவையை வழங்குகின்றனர். நாளாந்தம் வேலைக்குச் செல்வோருக்கும் பாடசாலை மாணவர்களுக்கும் இலங்கைப் போக்குவரத்துச் சபை மற்றும் இலங்கைப் புகையிரதத் திணைக்களம் ஆகியன பருவகால பயணச்சீட்டு முறையின் கீழ் சலுகை அடிப்படையில் சேவைகளை வழங்குகின்றன.




உரு 1.27 இலங்கைப் போக்குவரத்துச் சபையின் இலச்சினை



உரு 1.28 இலங்கைப் புகையிரத சேவையின் இலச்சினை

இலங்கைப் போக்குவரத்துச் சபை மூலம் நடைமுறைப்படுத்தப்படும் விசேட சேவைகள்

- சிசுசெரிய (மாணவர் போக்குவரத்துச் சேவை)
- கெமிசெரிய (கிராமியப் பிரதேசப் போக்குவரத்துச் சேவை)



உரு 1.28 மாணவர் பேருந்து சேவை

பாடசாலை மாணவர்களுக்கான போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்குத் தனியார் துறையும் பங்களிப்புச் செய்கிறது.

அதிவேக நெடுஞ்சாலைகளில் இலங்கைப் போக்குவரத்துச் சபை மற்றும் தனியார் துறையினர் நவீன சொகுசுப் பேருந்துச் சேவையை நடத்துகின்றனர். அவ்வாறே நகரங்களுக்கு இடையிலான குளிரூட்டப்பட்ட கடுகதிப் பேருந்துச் சேவையும் இடம் பெறுகின்றது. இலங்கை புகையிரத சேவை மூலம் நகரங்களுக்கு இடையிலான கடுகதிப் புகையிரத சேவைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்துசாலையின் மூலம் சேவை வழங்குவதில் பங்களிப்புச் செய்யும் பணிக்குழுவினர்கள் வருமாறு,

- சாலை முகாமையாளர்
- உதவிச் சாலை முகாமையாளர்கள்
- சாலைப் பரிசோதகர்கள்
- வேலையாட்கள்

- இயந்திரவியலாளர்கள்
- சாரதிகள்
- நடத்துனர்கள்

## பொதுப் போக்குவரத்து சேவைகளை முன்னேற்றுவதற்கு அரசினால் மேற்கொள் ளப்படும் நடவடிக்கைகள்

- வீதிகளைப் பராமரித்தலும் திருத்தம் செய்தலும்
- அதிவேக நெடுஞ்சாலைகளை நிறுவுதல்
- புதிய பேருந்துகளை சேவையில் சேர்த்துக் கொள்ளல்
- புதிய புகையிரத எஞ்சின், மற்றும் புகையிரதப் பெட்டிகளை சேவையில் ஈடுபடுத்தல்



உரு 1.29 அதிவேக நெடுஞ்சாலை யில் பயணிக்கும் சொகுசு பஸ்

- தனியார் பேருந்து சேவையை முன்னேற்றுவதற்கு ஊக்குவிப்புத் தொகை வழங்குதல்
- பிரயாணிகளின் பாதுகாப்புக்காக சட்ட நடவடிக்கை எடுத்தல்

### செயற்பாடு 1.7

- பொதுப் போக்குவரத்துச் சேவைகளைப் பயன்படுத்துவதனால் கிடைக்கும் பயன்களைப் பட்டியல் படுத்துக.
- புகையிரத நிலையம் ஒன்றின் சேவையுடன் தொடர்புடைய பணியாளர்களைப் (பதவிகள்) பெயரிடுக.
- உமது பிரதேசத்தின் பொதுப் போக்குவரத்து சேவையை முன்னேற்றுவதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றிய ஆலோசனைகளை எழுதுக.

### மின்சாரம்

மின் உற்பத்தி நிலையத்தில் திடீரென ஏற்பட்ட தொழினுட்பக் கோளாறு காரணமாக இரு நாட்களுக்கு இடையில் அடிக்கடி மின்தடை ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக ஏற்பட்ட அசௌகரியங்கள் பற்றி ஊடக நிறுவனமொன்று பல்வேறு பிரிவினர்களிடத்திலும் கருத்துக்களைக் கேட்டறிந்தது.

| | | |
|---|---|---|
| பாடசாலை மாணவர் | - | நேற்று பாடசாலையில் கொடுத்த வீட்டு வேலைகளைச் செய்ய முடியாமல் போனது. ஆடைகளை அழுத்த முடியாமல் போய்விட்டது. அம்மா தினமும் தயாரித்துத் தரும் உணவுகளை மின்சாரம் இன்மையால் தயாரிக்க முடியாது போய்விட்டது. நேற்று தொலைக்காட்சி பார்க்கவும் முடியவில்லை. பாடசாலையிலும் கணினி ஆய்வுகூடச் செயற்பாடுகளை மேற்கொள்ளவும் மாணவர்களுக்கு முடியாது போய்விட்டது. எமக்கு நிறைய அசௌகரியங்கள் ஏற்பட்டன. |
| வர்த்தகர் | - | ஐஸ்கிறீம், மீன், இறைச்சி போன்ற பலவற்றை அகற்ற வேண்டி ஏற்பட்டது. அவை பழுதடைந்து விட்டன. இரவில் பொருள்கள் வாங்குவதற்கு அதிகளவானோர் வருவர். நேற்று குறைந்தளவானோரே வந்தனர். எமக்கு அதிக நட்டம் ஏற்பட்டது. |
| ஆடைத் தொழிற் சாலை முகாமை யாளர் | - | எமது நிறுவனதத்தின் உற்பத்திச் செயற்பாடுகள் குறைந்தன. நேற்று இரண்டு மாற்று வேலை முறைகள் முடியாது போயின. எப்படியாயினும் இன்றைக்குள் திருத்த வேலைகளை நிறைவேற்றி எமக்கு மின்சாரம் கிடைப்பதற்கு வசதியளித்த அதிகாரிகளின் முயற்சியை மதிக்கின்றோம். |

கைத்தொழில் மற்றும் தொழினுட்பத்துறை வளர்ச்சி, மனித தேவைகள் அதிகரித்தமை காரணமாக மின்சாரம் தற்காலத்தில் சமூகத்திற்கு அத்தியாவசிய சேவையாக மாறியுள்ளது. 2015 ஆம் ஆண்டாகும்போது 98.5% நாட்டு மக்கள் மின்சாரப் பயனாளிகளாகவுள்ளனர். (2015 மத்திய வங்கி ஆண்டறிக்கை) எதிர்காலத்தில் சகல வீடு களுக்கும் மின்சாரத்தை வழங்குவது அரசின் இலக்காக உள்ளது.




உரு 1.30 வைத்தியசாலையில் மின்சாரம்

மின்சாரத்தைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் அத்தியவசிய பணிகள் சிலவற்றுக்கான உதாரணங்கள் வருமாறு,

- வீட்டிற்கு ஒளியூட்டுதல் மற்றும் சமையல் நடவடிக்கைகள்
- சுகாதார சேவைகள்
- கைத்தொழில் நடவடிக்கைகள்
- வர்த்தக நிலையங்களின் தேவைகள்
- வீதிகளுக்கு ஒளியூட்டுதல்
- தொடர்பாடல் உள்ளிட்ட வேறு பல சேவைகளை வழங்குதல்


உரு 1.31 வீடுகளுக்கான மின்சார விநியோகம்


உரு 1.32 வீதிகளுக்கான மின்சார விநியோகம்

இலங்கையின் அநேக பிரதேசங்களுக்கு இலங்கை மின்சார சபையே மின்சாரத்தை வழங்குகின்றது.

இலங்கை மின்சார (தனியார்) கம்பனியும் மின்சாரத்தை வழங்குவதற்குப் பங்களிப்புச் செய்கின்றது. இலங்கை மின்சார சபையின் பிரதேசப் பொறியியலாளர் அலுவலகத்தில் பின்வரும் பணியாளர் உள்ளனர்.

- பிரதேச மின் பொறியியலாளர்
- உதவி மின் பொறியியலாளர்
- மின்சார உத்தியோகத்தர்
- எழுது வினைஞர்களும் பணியாளர்களும்
- மின் இணைப்பாளர்கள்
- மின் கம்பி இணைப்பாளர்கள்
- களச் சேவையாளர்கள்
- மானி வாசிப்பாளர்கள்
- சாரதிகள்


உரு 1.33 தொழிற்சாலைக்கான மின்சார விநியோகம்

**செயற்பாடு 1.8**

- உமது பிரதேச மின் வழங்கலுடன் தொடர்புடைய பிரதேச அலுவலகத்தினால் மேற்கொள்ளப்படும் சேவைகளைக் குறிப்பிடுக.
- மின் வழங்கல் தடைப்படுவதன் காரணமாக நாட்டின் பொருளாதாரத்தில் ஏற்படக் கூடிய பாதிப்புக்களைக் குறிப்பிடுக.

### தகவல் பரிமாற்ற சேவை

தொழினுட்ப முன்னேற்றத்துடன் இன்று தகவற் பரிமாற்ற சேவை விரைவாக முன்னேற்றமடைந்துள்ளது.

- சமூகத் தொடர்புகள் விருத்தியடைந்துள்ளமை
- சர்வதேச தொடர்புகள் விருத்தியடைந்துள்ளமை
- மனித தேவைகள் சிக்கலானதாக மாறியுள்ளமை
- அதிக வேலைப்பளு

போன்றவற்றால் தகவல் பரிமாற்ற சேவை தற்காலத்தில் அத்தியாவசிய சேவையாக உள்ளது.



உரு 1.34 தகவற் பரிமாற்றக் கோபுரம்

### தகவல் பரிமாற்ற சேவைமூலம் மேற்கொள்ளப்படும் பணிகள்

- அத்தியாவசிய தகவல்களை மிகவும் விரைவாகப் பரிமாறுதல்
- தனியாள் தொடர்புகளை விருத்தியடையச் செய்தல்
- நாட்டின் நிருவாக நடவடிக்கைகளை இலகுபடுத்துதல்
- பிரதேசங்களுக்கு இடையிலான தொடர்புகளை ஏற்படுத்துவதற்குரிய சேவைகளை வழங்குதல்
- வெளிநாடுகளுடன் தொடர்புகளைப் பேணுவதற்கான சேவைகளை வழங்குதல்
- வர்த்தக நடவடிக்கைகளை இலகுபடுத்துதல்
- சுற்றுலா நடவடிக்கைகளுக்கு உதவுதல்

## அஞ்சற் சேவை

அரச அஞ்சல் அலுவலகங்கள் மூலமும் முகவர் தபால் நிலையங்கள் மூலமும் மக்களுக்கு அஞ்சல் சேவை வழங்கப்படுகிறது. சகல பிரதேசங்களுக்கும் சேவைகளை வழங்கக் கூடிய வகையில் அஞ்சல் அலுவலகங்கள் அரசினால் செயற்படுத்தப்ப டுகின்றன.



உரு 1.35 அஞ்சல் விநியோகம்

- முத்திரையைப் பெற்றுக்கொடுத்தல்
- கடிதங்கள் மற்றும் பொதிகளை அனுப்புதல்
- தொலையஞ்சல் சேவை வசதிகள்
- தொலைபேசிச் சேவை வசதிகள்
- காசுக்கட்டளை முறையில் பணம் அனுப்புதல்
- ஓய்வூதியம் மற்றும் அரசினால் வழங்கப்படும் மக்கள் உதவிப் பணங்களை வழங்குதல்

போன்றன தபால் மூலம் மக்களுக்கு வழங்கப்படும் சேவைகளுக்கு உதாரணங்களாகும்.

**செயற்பாடு 1.9**

உமது பிரதேசத்தில் காணப்படும் அஞ்சல் அலுவலகத்தின் பணியாளர்கள் குழுவைக் (பதவிப் பெயர்) குறிப்பிடுக.

## தொடர்பாடல் சேவை

சனநாயக ஆட்சி முறைமை நிலவுகின்ற நாடொன்றின் பிரசைகளுக்கு தகவல்களை அறிந்து கொள்வதற்கும் தமது கருத்துக்களை வெளியிடுவதற்கும் உரிமையுண்டு. இதனை நிறைவேற்றிக் கொள்வதற்கு தொடர்புச் சாதனங்கள் அல்லது ஊடகங்கள் பங்களிப்பை வழங்குகின்றன.

இலங்கை ரெலிகொம் நிறுவனம் மற்றும் பல்வேறு தனியார் நிறுவனங்கள் தொலைத் தொடர்புச் சேவைகளை வழங்குகின்றன. கையடக்கத் தொலைபேசிச் சேவையானது தற்காலத்தில் தகவல் பரிமாற்றத்துக்காகப் பெருமளவில் பயன்படுத்தப்படுகின்றது.

தனியார் துறையினரால் ஆரம்பிக்கப்பட்டுள்ள தொடர்பாடல் நிலையங்கள் மூலமும் தொலைபேசிச் சேவை வசதிகள், இணைய மற்றும் மின்னஞ்சல் வசதிகள் போன்றன வழங்கப்படுகின்றன.

பொதுச் சேவையாகச் செயற்படும் தொடர்பாடல் ஊடகங்களுள் செய்தித்தாள், வானொலி, தொலைக்காட்சி மற்றும் இணையம் போன்றன முக்கியத்துவம் பெறுகின்றன. அரச துறையினாலும் தனியார் துறையினராலும் ஊடக சேவைகள் செயற்படுத்தப்படுகின்றன.

ஊடகங்கள் மூலம் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கான உதாரணங்கள் சில வருமாறு,

- நாளாந்தம் நடைபெறுகின்ற முக்கிய நிகழ்வுகள் தொடர்பாக மக்களுக்கு அறிவூட்டுதல்
- கேளிக்கை மற்றும் களிப்பூட்டும் நிகழ்ச்சிகளை முன்வைத்தல்
- பல்வேறு துறைகள் தொடர்பான அறிவினை விருத்தி செய்தல்
- மக்களின் கருத்துகள், முறைப்பாடுகள் போன்றவற்றை பொறுப்பு வாய்ந்த நிறுவனங்களுக்கு அனுப்பி வைத்தல்
- தகவல்களை வெளிக்கொண்டு வருவதன் மூலம் மக்களின் நலன்களுக்குப் பங்களிப்புச் செய்தல்
- மக்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய சந்தர்ப்பங்களில் அவை தொடர்பாக மக்களுக்கு அறிவூட்டி, அனர்த்தங்கள் பாதிப்புகள் மற்றும் உடைமை மற்றும் உயிர் அழிவுகளிலிருந்து தடுத்துக் கொள்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

**செயற்பாடு 1.10**

- பாடசாலை மாணவர் என்ற வகையில் நீர் வெகுசனத் தொடர்பு சாதனங்களின் மூலம் பெற்றுக்கொள்ளக் கூடிய பயன்களைப் பட்டியற் படுத்துக.

## பாதுகாப்புச் சேவை

### இலங்கைப் பொலிஸ்

உமது பிரதேசத்தின் சட்டத்தையும் சமாதானத்தையும் நிலைநாட்டுதல், பொது மக்களுக்குப் பாதுகாப்பு வழங்குதல் என்பன பொலிஸ் துறையின் பிரதான பணிகளாகும். இலங்கையின் சகல பிரதேசங்களையும் உள்ளடக்கும் வகையில் சேவைகளை வழங்குவதற்காக பொலிஸ் நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன.

## பொலிஸ்துறை மூலம் மேற்கொள்ளப்படும் சேவைகள்



உரு 1.36 விபத்து ஏற்பட்ட இடமொன்றில் விசாரணை மேற்கொள்ளல்

- சட்டத்தையும் ஒழுங்கையும் நிலை நாட்டுதல்
- மக்களுக்குப் பாதுகாப்பினை வழங்குதல்
- குற்றச் செயல்கள் தொடர்பான ஆரம்ப கட்ட விசாரணைகளை மேற்கொள்ளல் குற்றச்செயல்களுடன் தொடர்புடைய சந்தேக நபர்களை நீதிமன்றத்தின் முன் நிறுத்துதல்
- வீதிப்பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து ஒழுங்குகளைக் கண்காணித்தல்
- பொதுச் சொத்துகளைப் பாதுகாத்தல்
- போதைப் பொருள் மற்றும் வேறு சட்ட விரோத நடவடிக்கைகளைக் கட்டுப் படுத்தல்
- திடீர் அனர்த்தங்கள், விபத்துக்கள் மற்றும் பாதிப்புக்களின்போது சேவைகளை வழங்குதல்

சகல பொலிஸ் நிலையங்களிலும் சிறுவர் மற்றும் பெண்களுடன் தொடர்புடைய முறைப்பாடுகளை பரிசீலிப்பதற்காக சிறுவர் மற்றும் மகளிர் பிரிவு ஒன்று தாபிக்கப்பட்டுள்ளது. அதேபோன்று சுற்றுச்சூழல் சுகாதாரப் பாதுகாப்பிற்காகவும் டெங்கு போன்ற நோய்களை ஒழிப்பது தொடர்பான விடயங்களிலும் பொலிஸ் திணைக் களம் உதவிகளை நல்குகின்றது.


உரு 1. 37 போக்குவரத்து நடவடிக் கைகளை ஒழுங்குபடுத்துவதில் ஈடுபடும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர்

**பொலிஸ் நிலையமொன்றின் பணியாளர்களுள் பின்வரும் அதிகாரிகள் உள்ளடங்குகின்றனர்**

- பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி
- பொலிஸ் பரிசோதகர்கள்
- உப பொலிஸ் பரிசோதகர்கள்
- பொலிஸ் சார்ஜன்கள்
- பொலிஸ் உத்தியோகத்தர்கள்
- மகளிர் பொலிஸ் உத்தியோகத்தர்கள்

உரு 1.38 இலங்கை பொலிஸ் இலச்சினை

**இலங்கை முப்படை**

இலங்கை ஆயுதப்படை, இலங்கைக் கடற்படை, இலங்கை வான்படை மற்றும் சிவில் பாதுகாப்புப் படையணி என்பனவும் பாதுகாப்புச் சேவைகளை வழங்குவதுடன் அது தொடர்பான பணிகளையும் ஆற்றுகின்றன.

**பாதுகாப்புப் படையினரால் மேற்கொள்ளப்படும் சேவைகளுக்கு உதாரணங்கள்**

- நாடு எதிர்நோக்கக்கூடிய யுத்த நிலைமைகளிலிருந்து நாட்டைப் பாதுகாத்தல்
- உள்நாட்டுக் கிளர்ச்சி, கலகம் மற்றும் பயங்கரவாத நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தல்
- அரசுகளின் பிரதிநிதிகளை வரவேற்க மரியாதை அணிவகுப்பை மேற்கொள்ளல்
- தேசிய பாதுகாப்பினைத் திட்டமிடுதல்



உரு 1.39 அனர்த்த நிலைமையொன்றின்போது ஆயுதப்படையினர் மீட்புப் பணியில் ஈடுபட்டிருத்தல்

- பொதுச் சொத்துகள், மனித வளங்கள் மற்றும் பௌதீக வளங்கள் என்பவற்றைப் பாதுகாக்க பொலிஸ் துறைக்கு உதவுதல்
- இலங்கையின் தேசிய சுதந்திர தினத்திற்கும், தேசிய விழாக்களுக்கும் பாதுகாப்பு வழங்குதல்
- வேலை நிறுத்தம் போன்ற சந்தர்ப்பங்களில் அத்தியாவசிய பொதுச் சேவைகளை வழங்குவதற்கு உதவுதல்
- திடீர் அனர்த்த சந்தர்ப்பங்களின்போது மக்களுக்கு நிவாரண சேவைகளை வழங்குதல்



உரு 1.40 அரச வைபவமொன்றில் ஆயுதப் படையினரின் மரியாதை அணிவகுப்பு

**செயற்பாடு 1.11**

- அவசர சந்தர்ப்பங்களின்போது பொலிசாருக்கு தகவல் வழங்குவதற்கு பயன்படுத்தக்கூடிய தொலைபேசி இலக்கங்களைத் தேடியறிந்து அட்டவணைப்படுத்துக.

## கூட்டுறவுச் சேவை

மக்களின் பல்வேறு தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு கூட்டுறவுச் சேவை பாரிய பணியை ஆற்றுகிறது.

''ஒருவர் எல்லோருக்கும் - எல்லோரும் ஒருவருக்கு'' என்பது கூட்டுறவு சேவையின் மகுட வாசகமாகும். கூட்டுறவு சேவை மூலம் வழங்கப்படும் சேவைகளுக்கான உதாரணங்கள் சில வருமாறு,

- குறைந்த விலையில் நுகர்வுப் பொருட்களை விநியோகித்தல்
- கடன் வசதிகளை வழங்குதல்
- போக்குவரத்துச் சேவைகளை வழங்குதல்
- வங்கிச் சேவைகளை வழங்குதல்
- இறுதிக் கிரியைகள் தொடர்பான சேவைகளை வழங்குதல்
- விவசாய உற்பத்திகளை கொள்வனவு செய்தல், விநியோகித்தல்
- காப்புறுதி சேவைகளை வழங்குதல்
- வைத்தியசாலைகளை நடாத்துதல்

**இலங்கையில் செயற்பட்டுவரும் கூட்டுறவுச் சங்கங்களின் வகைகள் சில வருமாறு,**

- பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்
- கூட்டுறவுக் கடன் சங்கம்
- விவசாய உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் (உ+ம் :- தேயிலை, இறப்பர், தெங்கு போன்ற உற்பத்திகளுடன் தொடர்புடைய)
- கைத்தொழில் கூட்டுறவுச் சங்கம் (உ+ம் :- தும்புக் கைத்தொழில்)
- சுகவாழ்வு கூட்டுறவுச் சங்கம்
- போக்குவரத்துச் சேவைகள் கூட்டுறவுச் சங்கம்
- பாடசாலைக் கூட்டுறவுச் சங்கம்
- வீட்டுக் கூட்டுறவுச் சங்கம்

உரு 1.41 கூட்டுறவு இலச்சினை

**செயற்பாடு 1.12**

- பாடசாலைக் கூட்டுறவுச் சங்கத்தினை நிறுவுவதன் மூலம் பெற்றுக்கொள்ளக் கூடிய பயன்களைக் குறிப்பிடுக.
- உமது பிரதேசத்தில் தாபிக்கப்பட்டுள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தினால் மேற்கொள்ளப்படும் சேவைகளை உள்ளடக்கிய பட்டியலொன்றைத் தயாரிக்குக.

## அரசினால் வழங்கப்படும் ஏனைய பொதுச் சேவைகள்

### சுற்றாடல் பாதுகாப்பு


உரு 1.42 சிங்கராஜ வனம்

மனிதன் சுற்றாடலின் ஓர் உறுப்பினராவான். மனிதன் சுற்றாடலைப் பாதுகாக்கும்போது சுற்றாடல் மனிதனைப் பாதுகாக்கும். மனிதன் சுற்றாடலின் இயல்பான தன்மையை உறுதி செய்வதன்மூலம் மாசற்ற சுற்றாடல் ஒன்றில் வாழ்வதற்கான உரிமையை உறுதி செய்கின்றான். பல்வேறு மனித நடவடிக்கைகள் சுற்றாடல் மாசுறுவதற்குக் காரணமாக அமைகின்றன. இவை மனிதன் உள்ளிட்ட சகல உயிரினங் களினதும் வாழ்க்கையின் மீது பாதிப்புகளைச் செலுத்துகின்றன. இதன் காரணமாக பாதுகாப்புத் தொடர்பாக சமகாலத்தில் மிகக்கூடிய கவனம் செலுத்தப்படுகின்றது. சுற்றாடல் பாதுகாப்புத் தொடர்பாக அரசினால் ஏற்படுத்தப்பட்டுள்ள நிறுவனங்கள் சில வருமாறு,


உரு 1.43 செனிகிளையார் நீர்வீழ்ச்சி

- சுற்றாடல் அமைச்சு
- மத்திய சுற்றாடல் அதிகார சபை
- வனப் பாதுகாப்புத் திணைக்களம்
- வன ஜீவராசிகள் திணைக்களம்
- புவிச் சரிதவியல் மற்றும் சுரங்கங்கள் பணியகம்
- சமுத்திர வள அதிகார சபை
- கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம்


உரு 1.44 கரையோரப் பாதுகாப்பு

இவற்றுக்கு மேலதிகமாக தொண்டர் நிறுவனங்கள் பலவும் சுற்றாடல் பாதுகாப்பு தொடர்பான சேவைகளை வழங்குகின்றன.

### சமூகப் பாதுகாப்பு வேலைத் திட்டங்கள்

அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக பொருளாதார ரீதியாகப் பின்தங்கிய வர்களுக்கு சமூகப் பாதுகாப்பு வேலைத்திட்டங்கள் அரசினாலும் அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்களினாலும் மேற்கொள்ளப்படுகின்றன. அரசினால் மேற்கொள்ளப்படும் வேலைத்திட்டங்களுக்கு உதாரணங்கள் சில வருமாறு,

- சிரேஷ்ட பிரஜைகளுக்கான நலன்புரி வேலைத்திட்டம்
- முதியோர் பராமரிப்பு இல்லங்களை நடாத்துதல்
- வீடுகள் வழங்கும் வேலைத்திட்டம்

உ+ம் :- ★ கிராம எழுச்சி வேலைத்திட்டம்

★ அனைவருக்கும் வீடு எனும் வேலைத்திட்டம்

**செயற்பாடு 1.13**

- உமது பிரதேசத்தில் உள்ள பல்வேறு நலன்புரிச் சேவைகளை வழங்கும் அமைப்புக்கள் தொடர்பாகத் தகவல் சேகரிக்குக.

## பொதுச் சேவைகளை வழங்கும் அரச நிறுவனங்களும் அவற்றின் கடமைகளும் பொறுப்புகளும்

சகல பொதுச் சேவைகளும் மக்கள் தேவைகளை நிறைவேற்றுவதற்கு பங்களிப்புச் செய்கின்றன. பொதுச் சேவைகளை வழங்கக்கூடிய நிறுவனங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய செயற்குழுவினர் தமது கடமைகளையும் பொறுப்புகளையும் சரிவர நிறைவேற்றுவதன் மூலம் பொதுமக்களின் வாழ்வு சிறப்படைந்து மனிதப் பண்புகள் பாதுகாக்கப்படுவதற்கும் காரணமாக அமைகின்றது. பொதுச் சேவைகளை வழங்கும் நிறுவனங்களின் கடமைகளையும் பொறுப்புகளையும் நோக்குவோம்.

| பொதுச் சேவைகள் | வழங்குகின்ற நிறுவனங்கள் | நிறைவேற்ற வேண்டிய கடமைகளும், பொறுப்புகளும் |
|---|---|---|
| நீர் வழங்கல் | உ+ம்<br>தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை | ◆ சுத்தமான குடிநீரை வழங்குதல்<br>◆ சேவைகளை இடையறாது வழங்குதல்<br>◆ நீர் விரயத்தைத் தவிர்த்தல்<br>◆ உரிய வகையில் நடைமுறைப்படுத்தல் செயற்பாடுகளை மேற்கொள்ளல்<br>◆ அதிகரிக்கின்ற தேவைகளை நிறைவு செய்தல்<br>◆ நுகர்வோர் முன்வைக்கின்ற முறைப்பாடுகளை உடனடியாக கவனத்திற்கொள்ளல்<br>◆ சேவை வழங்கல் தற்காலிகமாகத் தடைப்படும் வேளைகளில் முற்கூட்டியே நுகர்வோருக்கு அது தொடர்பாக அறிவித்தல்களை வழங்குதல் |

| | | |
|---|---|---|
| மின்சாரம் | இலங்கை மின்சார சபை | ◆ இடையறாது சேவைகளை வழங்குதல்<br>◆ உரிய வகையில் நடவடிக்கைகளை மேற் கொள்ளல்<br>◆ பாதுகாப்பை உறுதிப்படுத்தல்<br>◆ மின்வழங்கல் துண்டிக்கப்படும் சந்தர்ப் பங்களில் அவற்றை விரைவாக வழமை நிலைக்குக் கொண்டு வருதல்<br>◆ அதிகரித்து வரும் மின்சாரத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்<br>◆ மக்களது முறைப்பாடுகள் தொடர்பாக தாமதமின்றி உரிய தீர்வுகளைப் பெற்றுக் கொடுத்தல் |
| சுகாதார சேவை | ■ அரச வைத்திய சாலைகள்<br>■ தனியார் வைத்திய சாலைகள் | ◆ நோயாளிகளுக்கு உரிய வகையில் சிகிச்சைளித்தல்<br>◆ பயன்பாட்டுக்கு உகந்த மருந்து வகை களைப் பெற்றுக் கொடுத்தல்<br>◆ தொற்று நோய்கள் மற்றும் தொற்றா நோய்களைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கையெடுத்தல்<br>◆ நோயாளர் பராமரிப்பும் தேவையான வசதிகளை வழங்குதலும்<br>◆ இடையறாது சேவைகளை வழங்குதல்<br>◆ நோயாளிகளின் உடல், உள நலத்துக்கா கச் செயற்படல்<br>◆ வைத்திய ஆலோசனை வழங்கல் |
| கல்வி | ■ பாடசாலைகள்<br>■ பல்கலைக் கழகங்கங்கள்<br>■ தொழிற் பயிற்சி கல்வி நிறுவனங்கள் | ◆ உரிய வகையில் கல்வியை வழங்குதல்<br>◆ கல்வியின் மூலம் தேர்ச்சிகளை விருத்தி செய்தல்<br>◆ சமூகமயமாக்கல்<br>◆ பயனுள்ள பிரஜைகளை உருவாக்குதல்<br>◆ தேசியத் தேவைகளுக்கு ஏற்ற வகையிலான பிரஜைகளை உருவாக்குதல் |

| | | |
|---|---|---|
| போக்குவரத்து | ■ இலங்கை போக்குவரத்துச் சபை<br>■ தனியார் பேருந்துச் சேவை<br>■ இலங்கைப் புகையிரதச் சேவை | ◆ சேவைகளை வினைத்திறனான வகையில் மேற்கொள்ளல்<br>◆ பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்தல்<br>◆ சட்டத்தையும் ஒழுங்கையும் மதித்து நடக்கின்ற கௌரவமான சேவையை அளித்தல்<br>◆ வீதியைப் பயன்படுத்தும் ஏனையவர்களின் உயிர் மற்றும் உடமைகளுக்கான உரிமையினை உறுதி செய்தல்<br>◆ சேவைக்குரிய கட்டணத்தை மாத்திரம் அறவிடுதல்<br>◆ கட்டணங்களுக்குரிய அனுமதிச் சீட்டுக் களை விநியோகித்தல் |
| தகவல் பரிமாற்றமும் தொடர் பாடலும் | ■ அஞ்சல் சேவை<br>■ ஊடக நிறுவனங்கள் (இலத்திரனியல் அச்சு) | ◆ வினைத்திறனாகவும் முறையாகவும் சேவையை வழங்குதல்<br>◆ உண்மையான தகவல்களை மக்களுக்கு வழங்குதல்<br>◆ பக்கச்சார்பின்றி தகவல்களை வழங்குதல்<br>◆ திடீர் மற்றும் இயற்கை அனர்த்தங்கள் தொடர்பாக மக்களுக்கு அறிவூட்டுதல்<br>◆ தரமான சேவையை வழங்குதல் |
| பாதுகாப்புச் சேவை | ■ பாதுகாப்புப் படையினர் மற்றும் பொலிஸ் | ◆ மக்களின் பாதுகாப்பினை உறுதி செய்தல்<br>◆ மக்களுடன் சுமுகமான தொடர்புகளைப் பேணுதல்<br>◆ சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாத்தல்<br>◆ சட்டங்களையும் ஒழுங்கினையும் மதிக்கக் கூடிய வகையில் முன்மாதிரியாகச் செயற்படல்<br>◆ திடீர் அனர்த்தம் மற்றும் பாதிப்புகளின் போது மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்குதல் |

| | | |
|---|---|---|
| கூட்டுறவு | ■ கூட்டுறவுச் சங்கங்கள்<br>■ பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் | ◆ தரமான சேவைகளை வழங்குதல்<br>◆ காலத்தின் தேவைகளுக்கு ஏற்ப சேவை களை நவீனமயப்படுத்துதல்<br>◆ நுகர்வோர் சேவையை குறைந்த விலைகளில் வழங்குதல்<br>◆ சங்கங்களின் தலைமைத்துவத்திற்கு தெரிவு செய்யப்படுவோர் நேர்மையா கவும் அர்ப்பணிப்புடனும் சங்கத்தின் முன்னேற்றத்திற்காகச் செயற்படல் |
| சுற்றாடல் பாதுகாப்பு | ■ சுற்றாடல் அமைச்சு<br>■ மத்திய சுற்றாடல் அதிகார சபை<br>■ வனஜீவராசிகள் திணைக்களம் | ◆ சுற்றாடல் பாதுகாப்பு தொடர்பாக உயர்ந்த பங்களிப்பை வழங்குதல்<br>◆ சுற்றாடல் சட்டங்களை நடைமுறைப் படுத்துவது தொடர்பாக உயர்ந்த பங்க ளிப்பை வழங்குதல்<br>◆ சுற்றாடல் பாதிப்பு தொடர்பாக மக்களின் முறைப்பாடுகளை உரியவாறு பரிசீலித்து பதில் வழங்குதல்<br>◆ சுற்றாடல் பாதுகாப்பின் முக்கியத்துவம் தொடர்பாக மக்களுக்கு அறிவூட்டல் |

**செயற்பாடு 1.14**

- தமது கடமைகளையும் பொறுப்புகளையும் உரிய வகையில் மக்கள் நிறைவேற்றிக் கொள்வதில் சுகாதாரம் கல்வி, போக்குவரத்து போன்ற பொதுச் சேவைகளின் மூலம் கிடைக்கப்பெறும் பயன்களை அட்டவணைப்படுத்துக.

## பொதுச்சேவைகளைப் பயன்படுத்தும் பிரஜைகள் நிறைவேற்ற வேண்டிய கடமைகள்

பொதுச் சேவைகளை உரிய வகையில் பயன்படுத்துவதற்கும் அவற்றைப் பாதுகாப் பதற்கும் ஒவ்வொரு பிரஜைக்கும் உரிமையுண்டு. சேவைகளைப் பயன்படுத்துவது தொடர்பில் பிரஜை தமது கடமைகளைச் சரிவர நிறைவேற்றுவது அச்சேவைகள் நிலைத்திருப்பதற்கும் முன்னேற்றமடைவதற்கும் காரணமாகின்றது. ஒவ்வொரு பிரஜையும் தமது கடமைகளை நிறைவேற்றுவது, ஏனையோர் பொதுச் சேவைகளை பயன்படுத்துவதற்குள்ள உரிமைகள் உறுதி செய்யப்படுவதற்கு ஏதுவாகின்றது.

**பொதுச்சேவைகளைப் பயன்படுத்துவது தொடர்பில் பிரஜைகளினால் நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகளை நோக்குவோம்**

| பொதுச் சேவைகள் | சேவைகளைப் பயன்படுத்தும் பிரஜைகளினால் நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகள் |
|---|---|
| நீர் வழங்கல் | ■ நீரை வீண் விரயமின்றிப் பயன்படுத்துதல்<br>■ முறையான விதத்தில் நீரைப் பயன்படுத்தல்<br>■ உரிய வகையில் நீர்க் கட்டணத்தைச் செலுத்துதல்<br>■ நீர் வழங்கலுடன் தொடர்புபட்ட உபகரணங்களைப் பாதுகாத்தல்<br>■ நீர் வீண் விரயம் செய்யப்படும் சந்தர்ப்பங்களில் அது தொடர்பாக அறிவித்தல் |
| மின்சாரம் | ■ மின்சாரத்தை விரயமின்றிப் பயன்படுத்துதல்<br>■ மின் வழங்கலுடன் தொடர்புபட்ட உபகரணங்களைப் பாதுகாத்தல்<br>■ மின்கட்டணத்தை உரிய காலத்தினுள் செலுத்துதல்<br>■ சட்ட விரோதமான வகையில் மின்சாரத்தைப் பயன்படுத்தாதிருத்தல்<br>■ மின்துண்டிப்பு ஏற்படுகின்ற சந்தர்ப்பங்களில் அது தொடர்பான நிறுவனத்துக்கு அறிவித்தல் |
| சுகாதாரம் | ■ வைத்திய ஆலோசனைகளைக் கடைப்பிடித்தல்<br>■ சேவை வழங்கக்கூடிய பணியாளர்களுக்கு மதிப்பளித்தல்<br>■ இலவசமாக வழங்கப்படும் மருந்துகளை வீண்விரயம் செய்யாதிருத்தல்<br>■ சேவை வழங்கும் நிறுவனத்தின் சொத்துகளைப் பாதுகாத்தல்<br>■ சிறந்த சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றுதல்<br>■ சிறந்த சுகாதாரப் பழக்கவழக்கங்கள் குறித்து பிறருக்குத் தெளிவுபடுத்துதல் |

| | |
|---|---|
| கல்வி | ■ உரிய முறையில் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடல்<br>■ தமதும் தமக்கு கல்வி வழங்குகின்ற நிறுவனங்களினதும் கௌரவம் பாதுகாக்கப்படும் விதத்தில் செயற்படல்<br>■ ஆசிரியர்களது கௌரவத்தைப் பாதுகாக்கும் விதத்தில் செயற்படல்<br>■ ஏனைய மாணவர்களின் உரிமைகள் பாதுகாக்கப்படும் விதமாகச் செயற்படல்<br>■ நிறுவனத்துக்குச் சொந்தமான சொத்துகளையும் வளங்களையும் பாதுகாத்தல் |
| போக்குவரத்து | ■ போக்குவரத்துச் சேவையுடன் தொடர்புடைய உடமைகளைப் பாதுகாத்தல்<br>■ சேவைக்குரிய கட்டணங்களைச் செலுத்துவதற்கு நேர்மையாகச் செயற்படல்<br>■ போக்குவரத்து சேவைகளைப் பயன்படுத்தும்போது அதற்குரிய சட்டம், ஒழுங்குகளைப் பின்பற்றுதல்<br>■ பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்துவதனால் தமக்கும் நாட்டிற்கும் கிடைக்கின்ற பயன்கள் குறித்து புரிந்துணர்வுடன் செயற்படல் |
| தகவல் பரிமாற்றமும் தொடர்பாடலும் | ■ தொடர்பாடல் சேவைகளைப் பிறருக்குப் பாதிப்பின்றி பயன்படுத்துதல்<br>■ தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்க்கும்போது ஆராய்ந்து செயற்படல்<br>■ முன்மாதிரியாகச் செயற்படல்<br>■ சமூகத் தேவைகள் தொடர்பாக ஊடகங்கள் மூலம் உரிய துறைகளில் கவனம் செலுத்துதல் |
| பாதுகாப்புச் சேவை<br>உ+ம்:- இலங்கை பொலிஸ் திணைக்களம் | ■ குற்றச் செயல்கள், சமூகவிரோதச் செயல்கள் என்பனவற்றைத் தடுப்பதற்கு உதவுதல்<br>■ பொலிசாரும் பாதுகாப்புப் படையினரும் ஒத்துழைப்புடன் செயற்படல்<br>■ சட்டத்தினை மதிக்கின்ற பிரஜைகள் என்ற வகையில் செயற்படல் |

| | |
|---|---|
| கூட்டுறவுச் சேவை | ■ கூட்டுறவு இயக்கத்தின் அங்கத்துவத்தைப் பெற்றுக் கொள்ளல்<br>■ அங்கத்துவம் வகிக்கின்ற சங்கம்/ சங்கங்களின் கூட்டங்களில் தொடர்ச்சியாகப் பங்குபற்றல்<br>■ நேர்மையான, வினைத்திறனானதுமான உறுப்பினர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் தலைமைத்துவத்துக்குத் தெரிவு செய்யப்படுதல்<br>■ ஒருவருக்கொருவர் உதவுதல்<br>■ தமது தேவைகளை நிறைவு செய்வதற்காக கூட்டுறவு சேவைகளைப் பயனுள்ள வகையில் மேற்கொள்ளல் |
| சுற்றாடல் பாதுகாப்புடன் தொடர்புடைய நிறுவனங்கள் | ■ சுற்றாடல் பாதுகாப்புக்கு உதவுதல்<br>■ சுற்றாடலுக்குப் பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய நபர்களை சட்டத்தின் முன் நிறுத்துவதற்கு நடவடிக்கையெடுத்தல்<br>■ சுற்றாடல் பாதுகாப்புடன் தொடர்புடைய சட்ட திட்டங்களைப் பின்பற்றுதல்<br>■ சுற்றாடல் பாதுகாப்பு தொடர்பாக அறிவூட்டுதல் |

## செயற்பாடு 1.15

- கீழ்வரும் அட்டவணையை உமது பயிற்சிப் புத்தகத்தில் பிரதி செய்து பூரணப்படுத்துக.

| பொதுச் சேவை | பிரஜைகளினால் மேற்கொள்ளப் பட வேண்டிய கடமைகள் | கடமைகளை நிறைவேற்றுவது எவ்வாறு சேவைகளின் முன்னேற்றத்திற்கு உதவும் | கடமைகளை நிறைவேற்று வதனால் பிரஜைகளுக்குக் கிடைக்கும் பயன்கள் |
|---|---|---|---|
| மின்சாரம் | | | |
| நீர் வழங்கல் | | | |
| சுற்றாடல் பாதுகாப்பு | | | |

**பொழிப்பு**

- மக்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றும் பொருட்டு பொதுவாக வழங்கப்படும் சேவைகள் பொதுச் சேவைகள் என்றழைக்கப்படும்.
- நீர் வழங்கல், கல்வி, சுகாதாரம், தகவல் பரிமாற்றம், போக்குவரத்து போன்றன நாம் பயன்படுத்துகின்ற பொதுச் சேவைகளாகும்.
- இச்சேவைகளை முறையாகப் பயன்படுத்துவது தனிப்பட்டவர்களினதும் நாட்டினதும் அபிவிருத்திக்குக் காரணமாகின்றது.
- அத்தியாவசிய சேவைகள் அரசினால் இலவசமாக வழங்கப்படுகின்றன.
- தனியார் துறையானது, கட்டணம் அறவிடும் முறையினை அடிப்படையாகக் கொண்டு பொதுச் சேவைகளை வழங்குவதற்குப் பங்களிப்புச் செய்கிறது.
- பொதுச் சேவைகளை வழங்குகின்ற நிறுவனங்கள் தமது கடமைகளையும் பொறுப்புகளையும் சரிவர நிறைவேற்றுவதன் மூலம் மக்களுக்கு தரமான சேவைகள் கிடைக்கப்பெறுகின்றன.
- பொதுச் சேவைகளை அனுபவித்தல் தொடர்பாக பிரஜைகள் தமது கடமைகளை நிறைவேற்றுவது, பொதுச் சேவைகளின் இருப்புக்கும் பண்புரீதியான அபிவிருத்திக்கும் ஏதுவாகிறது.

# 2 ஜனநாயக மக்கள் சமூகம்

## அறிமுகம்

''ஜனநாயகம்'' என்பது ஓர் ஆட்சி முறையாகவும் வாழ்க்கை முறையாகவும் விளங்குகின்றது. சுதந்திரம் மற்றும் சமத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு ஒத்துழைப்புடன் செயற்படுவதும் பெரும்பான்மைக் கருத்துக்கு மதிப்பளிப்பதும் சுய ஒழுக்கத்துடனும் இணக்கத்துடனும் வாழ்வதும் ஜனநாயக சமூகமாகுமெனக் குறிப்பிடலாம். அத்தகைய சமூகத்தின் செயற்பாட்டை உறுதி செய்வதற்கு பிரஜைகளிடத்தில் ஜனநாயகப் பண்புகளை விருத்தி செய்வது அவசியமாகும்.

**இந்த அத்தியாயத்தைக் கற்பதனால் உங்களால்,**

குடும்பம், பாடசாலை மற்றும் சமூகத்தின் உறுப்பினர் என்ற வகையில்,

- ஜனநாயகத்தினை நிலைநிறுத்துவதற்கு அவசியமான பண்புகளைக் கட்டியெழுப்பவும்,
- சிறுவர் உரிமைகள் மற்றும் கடமைகள் தொடர்பான புரிந்துணர்வைப் பெற்றுக் கொள்ளவும்,
- மனவெழுச்சிகளை பயனுள்ள விதத்தில் மாற்றிக் கொள்வதன் முக்கியத் துவத்தை விளங்கிக் கொள்ளவும்,
- தலைமைத்துவத்தின் அவசியத்தை விளங்கிக் கொள்வதுடன் தலைமைத்துவப் பண்புகளை விருத்தி செய்துகொள்வதில் கவனம் செலுத்தவும்
- பின்பற்றுபவர் என்ற வகையில் செயற்பட வேண்டிய விதம் குறித்து அறிந்து கொள்ளவும், அவசியமான தேர்ச்சிகளை மாணவர்களிடத்தில் உறுதிப் படுத்தவும்,

**முடியுமாக இருக்கும்.**

## குடும்பத்திலும் பாடசாலையிலும் காணப்படும் ஜனநாயகப் பண்புகள்

எந்தவொரு சமூகத்திலும் காணப்பெறும் மிகச் சிறியதும் முக்கியத்துவம் வாய்ந் ததுமான அடிப்படை அலகு குடும்பமாகும். குடும்பத்தின் இயல்பிற்கேற்ப அவற்றை கருக்குடும்பம் மற்றும் விரிந்த குடும்பம் என்று இரு வகைகளாகப் பிரிக்கலாமென நீங்கள் தரம் 07 இல் எமது குடும்பம் என்ற அலகில் கற்றிருப்பீர்கள்.



உரு 2.1 கருக் குடும்பம்



உரு 2.2 கூட்டுக்குடும்பம்
(விரிந்த குடும்பம்)

உங்களது குடும்பம் ஒரு தனிக்குடும்பமாக இருக்கலாம். அதேவேளை உங்களது தாய், தந்தை, தாத்தா, பாட்டி போன்ற பெரியவர்களிடத்தில் கேட்டுப்பார்த்தால் அவர்கள் சிறுபராயத்தில் விரிந்த கூட்டுக் குடும்பத்தில் வாழ்ந்துள்ளனர் என்பது தெளிவாகும். அத்துடன் சமகாலத்தில் அதிகளவு கருக் குடும்பங்களே காணப்படுகின்றன என்பதையும் நீங்கள் அறிவீர்கள்.

குடும்பத்தின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் பல்வேறு பொறுப்புகளும் கடமைகளும் உள்ளன. அவற்றை ஒத்துழைப்புடனும் கூட்டாகவும் புரிந்துணர்வுடனும் மேற் கொள்வது குடும்பத்திலுள்ள சகல உறுப்பினர்களதும் பொறுப்பாகும்.

**குடும்பத்தில் காணப்படும் ஜனநாயகப் பண்புகள்**

- அன்பையும் அரவணைப் பையும் குறைவின்றிப் பெறல்
- கலந்துரையாடல்மூலம் தீர்மானத்திற்கு வரல்
- சமாதானமான முறை களில் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளல்
- வீட்டுப் பணிகளில் ஒத்து ழைப்புடனும் இணக் கத்துடனும் ஈடுபடுதல்
- சமத்துவத்தின் அடிப்ப டையில் செயற்படுதல்
- பிறர் கருத்துகளுக்கு மதிப் பளித்தலும் செவிமடுத்த லும்
- பெற்றோர், பெரியவர் களது தலைமைத்துவத் திற்கு மதிப்பளித்தல்
- தமது உரிமைகளைஅனுப வித்தலும் கடமைகளை நிறைவேற்றலும்

பிள்ளைகள் அடிப்படையான ஜனநாயகப் பண்புகளையும், அனுபவங்களையும் குடும்பத்திலிருந்தே பெற்றுக் கொள்கின்றனர். தாய், தந்தை மற்றும் பெரியோரின் தலைமைத்துவத்தை ஏற்றுக் கொள்ளல், அவர்களது கருத்துகளுக்குச் செவிமடுத்தல், ஆலோசனைகளை மதித்தல், ஒத்துழைப்புடன் செயற்படுதல் போன்ற ஜனநாயகப் பண்புகளை குடும்பத்தின் உறுப்பினராகச் செயற்படுவதன்மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

குடும்பத்தில் பிள்ளைகளுக்குக் கிடைக்கின்ற அன்பு, ஆதரவு, கருணை, இரக்கம், பாதுகாப்பு, போசணை என்பனவே பிள்ளைகளின் சிறப்பான செயற்பாட்டைத் தீர்மானிக்கின்றன. பெற்றோர் பிள்ளைகளுக்கும் பிள்ளைகள் பெற்றோருக்கும் பெரியோருக்கும் செய்ய வேண்டிய கடமைகளையும் பொறுப்புகளையும் சரிவர நிறைவேற்றுவது அனைவரினதும் சிறப்பான வாழ்க்கைக்கு ஏதுவாகும்.




உரு 2.3 மகிழ்ச்சியான குடும்பம்



உரு 2.4 ஒன்றுபட்டுச் செயற்படல்

குடும்பத்தின் அன்றாட செயற்பாடுகளில் தாய், தந்தை, பிள்ளைகள், பெரியோர்கள் ஒன்று சேர்ந்து கலந்துரையாடித் தீர்மானத்திற்கு வருவது குடும்பத்தின் ஐக்கியத்திற்கும் முன்னேற்றத்திற்கும் உதவும்.

உதாரணம்:

- உணவுப் பொருள்களைத் தெரிவு செய்தலும் தயாரித்தலும்
- வீட்டு வேலைகளை ஒத்துழைப்புடன் மேற்கொள்ளல்
- வீட்டைச் சுத்தமாக வைத்திருத்தல்
- ஓய்வினைக் கழித்தலும் மகிழ்வுறுதலும்
- கல்வி நடவடிக்கைகளைத் திட்டமிடல்

போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

குடும்பத்தின் விசேட செயற்பாடுகளின்போது அனைவரும் ஒன்றுசேர்ந்து கலந்து ரையாடித் தீர்மானங்களை மேற்கொள்வதன்மூலம் அவற்றை வெற்றிகரமானதாக ஆக்கிக்கொள்ள முடியும்.

உதாரணம்

- வைபவங்களை ஏற்பாடு செய்தல்
- காணி அல்லது வீடு வாங்குதல்
- வீடொன்றைக் கட்டுதல் மற்றும் புனர்நிர்மாணம் செய்தல்
- வாகனம் வாங்குதல்
- திருமண நிச்சயம்

குடும்பச் செயற்பாடுகளின்போது,

- பிறருடைய கருத்துகளை ஏற்றுக்கொள்வதன் மூலம் மற்றவர்களுக்கு மதிப்ப ளிக்கப்படுகின்றது.
- பிறருடைய கருத்துகளை மதிப்பதன்மூலம் பெரும்பான்மைக் கருத்துக்கு மதிப்பளிக்கும் பழக்கம் ஏற்படுகின்றன.
- பெரும்பான்மைக் கருத்துக்களை மதிப்பதன்மூலம் குடும்பத்தினுள் ஒத்துழைப்பு, ஐக்கியம் என்பன விருத்தியடைகின்றன.


வீட்டில் நிலவும் சுதந்திரமானதும் அமைதியானதுமான சூழல் உங்களது திறன்கள் வளர்ச்சியடைவதற்குத் துணையாக அமையும். வீட்டில் சுதந்திரத்தை அனுபவிக்கையில், குடும்பத்தினுள் பெற்றோர் மற்றும் பெரியோரைத் தலைவர் களாக ஏற்றுக் கொள்ளல், அவர்களின் வழிகாட்டல்களையும் ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்ளல், குடும்பச் செயற்பாடுகளுக்கு உதவுதல் மற்றும் ஒத்துழைப்புடன் செயற்படல் போன்றன பிள்ளைகளது கடமைகளாகும். இவற்றின் காரணமாக குடும்ப முன்னேற்றமும் சமூக முன்னேற்றமும் உறுதிப்படுத்தப்படும்.

**செயற்பாடு 2.1**

- குடும்பத்தில் காணப்படுவன என நீர் இனங்காணும் ஜனநாயகப் பண்புகள் ஐந்தைக் குறிப்பிடுக.
- குடும்பத்தில் சகல உறுப்பினர்களும் ஒற்றுமையாகச் செயற்படும் சந்தர்ப்பங்கள் சிலவற்றைக் குறிப்பிடுக.

## பாடசாலையில் காணப்படும் ஜனநாயகப் பண்புகள்

ஒரு பிள்ளைக்கு குடும்பத்தைத் தவிர மிகவும் அண்மித்த அமைப்பாக விளங்குவது பாடசாலையாகும். பிள்ளைப் பருவம் முதல் இளமைப் பருவம் வரை ஒரு பிள்ளை பாடசாலை மாணவர் என்ற வகையிலேயே நோக்கப்படுகின்றான். ஒவ்வொரு பிள்ளையும் பாடசாலையில் நிலவும் சுதந்திரம், வளங்கள் மற்றும் வாய்ப்புகள் என்பவைகளைப் பயன்படுத்தி, தனது ஆற்றல்களையும் திறன்களையும் விருத்தி செய்து கொள்ள முடிகிறது. அதன்மூலம் வெற்றிகரமான வாழ்க்கையின் இலக்கை ஒவ்வொரு மாணவரும் அடைந்து வாழ்க்கையின் குறிக்கோள்களை நோக்கிச் சென்றடைவதற்கு முயற்சிக்க வேண்டும். ஜனநாயக சமூகங்களில் ஒரு பாடசாலையில் காணப்படும் சிறப்பம்சங்கள் பல உள்ளன.




பாடசாலையில் அனுமதி பெறும் சகல பிள்ளைகளுக்கும் இலவசக்கல்வி பெறுவதற்குரிய சமமான வாய்ப்புகள் அதிகம் கிடைக்கப்பெறுகின்றமை நாம் பெற்ற பாக்கியமாகும்.

ஆரம்பக்கல்வி தொடக்கம் பல்கலைக்கழகக் கல்வி வரை எமக்குக் கிடைக்கும் இத்தகைய பெறுமதியான வாய்ப்புகளை உச்ச அளவில் பயன்படுத்திக் கொள்வதற்கு நீங்கள் முயற்சிக்க வேண்டும்.

பல்வேறுபட்ட குடும்பச் சூழல்களில் இருந்து வருகின்ற பிள்ளைகளைக் கொண்ட பாடசாலைச் சூழலானது, அவர்கள் அனைவருக்கும் சமமான கல்வி வாய்ப்புகளைப் பெற்றுக் கொடுப்பதற்காகச் செயற்படுகிறது. பாடசாலை நேரத்தில் அவர்களுக்கு பாதுகாப்பு வழங்குவதற்கும் பல்வேறு திறன்களை விருத்தி செய்துகொள்வதற்குமான வாய்ப்பு வசதிகள் அச்சூழலில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. பாடசாலையில் நடைமுறைப் படுத்தப்படும் ஒழுங்கு விதிகள் சகலருக்கும் பொதுவானவையாகும். பாடசாலையில் இலவசப் பாடநூல்கள், இலவசச் சீருடை, இலவச மதிய உணவு, வாசிக சாலை, விஞ்ஞான ஆய்வுகூட வசதிகள் என்பனவற்றைச் சமமாக பெற்றுக்கொடுப்பதற்கு முயற்சிக்கப்படுகிறது. கலைத்திட்டத்துடன் சம்பந்தப்பட்டதாகவும் இணைப்பாட விதானச் செயற்பாடுகளில் ஈடுத்தப்படுவதற்குமான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொள்வதன் மூலம் பிள்ளைகளின் பல்வேறு திறன்களை விருத்தி செய்வதற்கான சந்தர்ப்பங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

ஜனநாயக வாழ்க்கை முறைக்குப் பழக்கப்படுத்துவதற்காக பாடசாலையில் நடை முறைப்படுத்தப்படும் இணைப்பாடவிதானச் செயற்பாடுகள் சில வருமாறு

- இலக்கிய மன்றம், சமய மன்றம், விளையாட்டுச் சங்கம், மற்றும் பாடங்களுடன் இணைந்த ஏனைய கழகங்களைச் செயற்படுத்துதல்
- தேசிய சுதந்திரதின வைபவம், சமய விழாக்கள், விளையாட்டுப் போட்டிகள், கலாசார விழாக்கள் என்பவற்றை ஏற்பாடு செய்தல்
- மாணவத் தலைவர், வகுப்புத் தலைவர், பாடசாலைத் தலைவர், விளையாட்டுக் குழுத் தலைவர் எனும் பொறுப்புகளை வழங்குதல்
- நடனம், பாடல், இசையமைத்தல், சித்திரம் வரைதல், கட்டுரை எழுதுதல், பொது அறிவு நிகழ்ச்சி, விவாதம் போன்ற போட்டி நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தலும் நடாத்துதலும்
- மாணவர் படையணி, சுற்றாடல் படையணி, சாரணியம் முதலுதவிச் சேவை போன்றவற்றிற்குப் பயிற்சியளித்தலும் அனுபவங்களைப் பெற்றுக் கொடுத்தலும்
- கல்விச் சுற்றுலா, களப்பயணம், ஆராய்ச்சி நடவடிக்கைகள் போன்றவற்றை ஒழுங்கு செய்தல்

**செயற்பாடு 2.2**

- உமது பாடசாலையில் நடைமுறைப்படுத்தப்படும் இணைப்பாடவிதான செயற்பாடுகள் சிலவற்றைக் குறிப்பிடுக
- மேற்படிச் செயற்பாடுகளில் பங்குபற்றுவதன் மூலம் உமக்குக் கிடைக்கப்பெறும் பயன்கள் ஐந்தை எழுதுக

## சிறுவர் உரிமைகளும் கடமைகளும்

பெற்றோர்களுக்குப் பிள்ளைகள் அரிய சொத்துக்களாக விளங்குகின்ற அதேவேளை நாட்டின் எதிர்கால வளங்களாகவும் விளங்குகின்றனர். அனைத்து மதங்களைச் சேர்ந்த வழிகாட்டிகளும் தமது போதனைகளில் பிள்ளைகளுக்கு முதன்மையான இடத்தைப் பெற்றுக் கொடுத்திருப்பதுடன், அவர்களின் முக்கியத்துவம் குறித்தும் அவதானம் செலுத்தியுள்ளனர். சகல சமூகங்களிலும் சிறுபராயத்தவர்கள் தொடர்பில் கூடுதலான கவனம் செலுத்தப்படுகிறது.

பிள்ளைகளுக்கு உரிய போசணையை அளித்தல், அவர்களைப் பாதுகாப்பாகக் கவனித்தல் என்பன அத்தியவசியமானதாகும். அவர்களுக்கான உரிய கல்வியைப் பெற்றுக் கொடுத்தல், உடல் உள விருத்திக்கான நிலைமைகளை ஏற்படுத்தல் என்பவற்றை மேற்கொள்ள வேண்டியுள்ளது. ஆளுமைமிக்கவர்களாக மாற்றுவதற்கு உதவுதல், வழிகாட்டல் என்பன பெரியோர்களினதும் அரசினதும் கடமையாகும். ஐக்கிய நாடுகளின் சிறுவர் உரிமைகள் சாசனத்திற்கு அமைய 18 வயதிலும் குறைந்தோர் சிறுவர்கள் என ஏற்றுக் கொள்ளப்படுகின்றனர். ஆண், பெண் பால், வேறுபாடின்றி சகல சிறுவர்களுக்கும் உரித்தான உரிமைகள், சிறுவர் உரிமைகள், எனக் குறிப்பிடப்படுகிறது.

இத்தகைய உரிமைகள் நான்கு பிரதான தலைப்புகளின் கீழ் வகுக்கப்பட்டுள்ளன. அவை,

- பாதுகாப்பிற்கான உரிமை
- பங்குபற்றலுக்கான உரிமை
- அபிவிருத்திக்கான உரிமை
- வாழ்வதற்கான உரிமை

ஐக்கிய நாடுகளின் சிறுவர் உரிமைகள் தொடர்பான சாசனம் ஒரு முன்னுரையையும் 54 உறுப்புரைகளையும் உள்ளடக்கியதாகும். அதேவேளை அவற்றை பாதுகாப்பதற்கும் பின்பற்றுவதற்கும் சகல அங்கத்துவ நாடுகளும் கடமைப்பட்டுள்ளன. ஐக்கிய நாடுகளின் சர்வதேச சிறுவர் நிதியம் (யுனிசெப்) சிறுவர் உரிமைகளைப் பாதுகாத்து நடைமுறைப்படுத்தும் சர்வதேச அமைப்பாக விளங்குகிறது.

உரு 2.5

பிள்ளைகள் தமது உரிமைகளை அனுபவிப்பதற்கும் சகல சந்தர்ப்பங்களிலும் தமக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கும் பொறுப்பாக விளங்குகின்றனர். உரிமைகளும் கடமைகளும் ஒன்றுடனொன்று பிணைந்தே காணப்படுகின்றன. பொதுவாகச் சமூகச் செயற்பாட்டிற்கு உரிமைகளை அனுபவிப்பதைப் போன்று, கடமைகளையும் நிறைவேற்றுவது அவசியமானதாகும். கடமைகள் இல்லாத உரிமைகள் பெறுமதியற்றவை என்பதுடன், சுயநலமிக்கவையுமாகக் கருதப்படுகின்றன.

### சிறுவர் உரிமைகள் மற்றும் கடமைகள் சில கீழே தரப்பட்டுள்ளன

| சிறுவர் உரிமைகள் | சிறுவர் கடமைகள் |
|---|---|
| கல்வி பெறல் | • கல்வி நடவடிக்கைகளில் சிறப்பாக ஈடுபடல்<br>• ஆசிரியர்களுக்கு மதிப்பளித்தல்<br>• பாடசாலை ஒழுக்கங்கள், ஒழுங்கு விதிகள் மற்றும் சம்பிரதாயங்களைப் பாதுகாத்தல் |
| சுகாதார வசதிகளைப் பெற்றுக் கொள்ளல் | • தனிப்பட்ட சுகாதாரம் தொடர்பான அறிவைப் பெறல்<br>• பயனுள்ள சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுதல்<br>• சுகாதாரப் பழக்கவழக்கம் தொடர்பாக அறிவூட்டம் பெறல் |
| சமூகப் பாதுகாப்பின் மூலம் பயன்களைப் பெற்றுக் கொள்ளல் | • சமூகப் பாதுகாப்புக்கு பங்களிப்புச் செய்தல்<br>• சமூகப் பாதுகாப்பு தொடர்பாக பிறருக்கு வழி காட்டல் |
| சமய நம்பிக்கைகளைப் பின்பற்றுவதற்கான சுதந்திரம் | • சமயப்பற்றுடன் கூடிய சிறந்த வாழ்வை மேற்கொள்ளல்<br>• பிறரின் சமய நம்பிக்கைகளுக்கு மதிப்பளித்தல் |

| | |
|---|---|
| நட்புறவுகளைப் பேணுதல் | • அறிவுபூர்வமாக நண்பர்களைத் தெரிவு செய்தல்<br>• வயதிற்குப் பொருத்தமான நண்பர்களுடன் பழகுதல்<br>• களவு, மோசடி, மற்றும் வன்செயல்களில் ஈடுபடுவதிலிருந்து விலகியிருத்தல் |
| சங்கங்கள், கழகங்களின் நடவடிக்கைகளில் ஈடுபடல் | • தமது ஆற்றல்களை விருத்தி செய்து கொள்ளல்<br>• சமூக அபிவிருத்திற்கு உதவுதல் |
| உரிய பாதுகாப்பு கிடைக்கப் பெறல் | • பெற்றோருக்கும் மூத்தோருக்கும் மதிப்பளித்தலும் உரிய இடத்தை வழங்குதலும்<br>• இயலுமான எல்லா சந்தர்ப்பங்களிலும் அவர்களுக்கு உதவுதல் |
| சுதந்திரமாக கருத்துகளை வெளியிடல் | • உண்மையான கருத்துகளை வெளியிடல்<br>• பிறருக்கு பாதிப்பு ஏற்படுத்தாத கருத்துகளை வெளியிடல் |

## சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்பதில் செயலாற்றும் நிறுவனங்கள்

பல்வேறு பிரச்சினைகளுக்கு சிறுவர்கள் நாளாந்தம் முகங்கொடுக்கின்ற செய்திகளை நாம் ஊடகங்களின் மூலம் அறிகின்றோம். பல்வேறு துஷ்பிரயோக நடவடிக்கைகளுக்கு உட்படுத்துதல், சித்திரவதை செய்தல், பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு ஆளாதல், ஈடுபடுதல், வேலைகளில் ஈடுபடுத்துதல் போன்றன அவற்றுள் சிலவாகும்.

பெற்றோரின் பிரிவினைகள், இறப்பு, அவர்கள் வெளிநாடுகளுக்குச் செல்லல், போதைப் பொருள்களுக்கு அடிமையாதல், வறுமை போன்ற காரணிகள் சிறுவர்களுக்கு சமமான வாய்ப்புகள் கிடைக்காதிருப்பதற்கும் பல்வேறு பாதிப்புகளுக்கும் காரணமாக அமைகின்றன. இத்தகைய நிலைமைகளிலிருந்து சிறுவர்களைக் காப்பாற்றுவதற்கும் அவர்களுக்குத் தேவையான உதவிகளையும் வழிகாட்டல்களையும் பெற்றுக் கொடுப்பதற்கும் சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்பதற்குமென செயற்படும் நிறுவனங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

- தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை
- சிறுவர் நன்னடத்தைப் பராமரிப்புத் திணைக்களம்
- சிறுவர் மற்றும் மகளிர் விவகாரம் தொடர்பான செயலணி, இலங்கை பொலிஸ்

## பிரதேச மட்டத்தில் சிறுவர்கள் மற்றும் குடும்ப நலச் சேவைகளை வழங்குகின்ற அரச அதிகாரிகள்

| பதவி | காரியாலயம் | வழங்கப்படும் சேவைகள் |
|---|---|---|
| சிறுவர் உரிமைகள் அபிவிருத்தி உத்தியோகத்தர் | பிரதேசச் செயலகம் | பிள்ளைகளின் உரிமைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய சகல சேவைகள் மற்றும் ஒருங்கிணைப்பு உதவிகளை வழங்குதல் |
| பிரதேச சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் | பிரதேசச் செயலகம் | பிள்ளைகளின் பாதுகாப்புடன் தொடர்புடைய பிரச்சினைகளை விசாரணை செய்தல் மற்றும் உதவி வழங்குதல் |
| முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர் | பிரதேசச் செயலகம் | முன்பள்ளிக் கல்வி மற்றும் வேறு முன்பிள்ளைப் பருவம் தொடர்பான சேவைகளை வழங்குதல் |
| சிறுவர் மற்றும் மகளிர் விவகார அமைச்சின் ஆலோசகர் | பிரதேச செயலகம் | பிள்ளைகள், மகளிருடன் தொடர்புடைய ஆலோசனைச் சேவைகளை வழங்குதல் |
| சமூக சேவைகள் உத்தியோகத்தர் | பிரதேச செயலகம் | பிள்ளைகளை உள்ளடக்கிய அரசாங்கத்தின் விஷேட சமூக நலன்புரிச் சேவைகளை வழங்குதல் |
| மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் | பிரதேச செயலகம் | மகளிர், பெண்பிள்ளைகள் தொடர்பான மனைப் பொருளியல் மற்றும் தொழிற் கல்விச் சேவைகளைப் பெற்றுக் கொடுத்தல் |
| முறைசார் மற்றும் முறைசாரா கல்வி உத்தியோகத்தர் | கோட்டக் கல்வி அலுவலகம், வலயக் கல்வி அலுவலகம் | பாடசாலைக்குச் செல்லாத பிள்ளைகள் தொடர்பாக அவசியமான சேவைகளைப் பெற்றுக் கொடுத்தல் |

**செயற்பாடு 2.3**

- சிறுவர்களது உரிமைகளும் கடமைகளும் எனும் தலைப்பில் சுவர்ப் பத்திரிகைக்கான ஆக்கம் ஒன்றை எழுதிக் காட்சிப்படுத்துக. அதற்கென கட்டுரை, சிறுகதை, சித்திரம், கவிதை, கேலிச்சித்திரம் போன்றவற்றை உள்ளடக்குக.

## பல்வேறு மனவெழுச்சிகள்

எமது மனதில் தோன்றுகின்ற பல்வேறு எண்ணங்கள், மனவெழுச்சிகளின் இயல்பை எமது முகபாவத்தின் மூலம் அறிந்து கொள்ளலாம். மகிழ்ச்சி, கோபம், பயம், துக்கம் போன்ற உணர்வுகள் ஏற்படும் சந்தர்ப்பங்களில் உங்களுக்கும் ஏனையோருக்கும் தோன்றும் உணர்வுகளுக்கு அமைய முகத்தில் ஏற்படும் மாற்றங்களைப் பற்றிச் சிந்தியுங்கள். சிரிப்பு, அழுகை, கோபம், மௌனம், அச்சம், பதற்றம், அலட்சியம் போன்றன அவற்றுள் சிலவாகும்.

சாதகமான மனவெழுச்சிகள் எமக்கும் சமூகத்துக்கும் விரும்பத்தக்கவையாகும். அதேபோன்று பாதகமான மனவெழுச்சிகளை சாதகமான விதத்தில் மாற்றிக் கொள்ளாதபோது அவை தமக்கும் சமூகத்திற்கும் பாதிப்பை ஏற்படுத்தக் கூடியவையாக அமையும்.

உதாரணமாக, அதிக கோபத்துக்குள்ளாகின்ற ஒருவர் பிறரைத் தூற்றுதல், தாக்குதல், உடைமைகளைச் சேதப்படுத்துதல், கொலை செய்தல் போன்ற செயல்களைப் புரிவதற்கு முனையலாம்.

மனவெழுச்சிகளைக் கட்டுப்படுத்திக் கொள்ளாமை காரணமாக ஏற்படக்கூடிய பல்வேறு சம்பவங்களை நாளாந்தம் செய்தி அறிக்கைகளில் கேட்கவும், பார்க்கவும் முடிகிறது. உங்களது ஆசிரியர்களுடன் இவை தொடர்பாகக் கலந்துரையாடுங்கள். அவர்கள் உங்களுக்கு அநேக விடயங்களைத் தெளிவுபடுத்துவார்கள்.

## மனவெழுச்சிகளும் அதன் விளைவுகளும்

| மனவெழுச்சி | விளைவுகள் |
|---|---|
| மகிழ்ச்சி → | சிரித்தல், ஆடுதல், கைதட்டுதல், ஆனந்தக் கண்ணீர், குரலெழுப்புதல், துள்ளிக் குதித்தல் |
| துக்கம் → | அழுகை, ஒப்பாரி வைத்தல், முகத்தைச் சுருக்குதல் வயிற்றிலடித்துக் கொள்ளல், கண்கள் சிவத்தல், வியர்வை வெளியேறல், பெருமூச்சுவிடல் |
| கோபம் → | தூற்றுதல், தாக்குதல், பேச்சுத் திக்குதல், பல்லைக் கடித்தல், மௌனமாக இருத்தல், உதடுகள் கைகால்கள் நடுங்குதல் |
| பயம் → | உடல் நடுங்குதல், கூக்குரலிடல், கண்கள் விரிவடைதல், ஓடுதல், நாக்குழறுதல். |


உரு 2.6


உரு 2.7


உரு 2.8


உரு 2.9

மேலே குறிப்பிட்டுள்ளவை மனவெழுச்சிகள் காரணமாக உடல்வெளிப்பாடுகள் மூலம் காட்டப்படும் முகபாவங்களாகும். மனவெழுச்சிகள் காரணமாக இதயத்துடிப்பு அதிகரித்தல், ஓமோன்கள் சுரத்தல் போன்ற விளைவுகளும் உடலினுள் ஏற்படுகின்றன. பாதகமான மனவெழுச்சி நிலைமைகள் தொடர்ந்தும் காணப்படுவதன் மூலம் தனிநபர்கள் உடல், உள, சமூக ரீதியாகப் பாதிப்புக்குள்ளாகின்றனர்.

உதாரணம் : மனநோய், உடலியல் நோய்களுக்கு உள்ளாகுதல், சிறைத்தண்டனை அனுபவித்தல், போதைப்பொருள்களுக்கு அடிமையாதல், தற்கொலை செய்து கொள்ளல் போன்றன நிகழலாம்.

## மனவெழுச்சிகளை ஆக்க பூர்வமானதாக்கிக் கொள்வோம்

ஜனநாயக சமூகமொன்றில் சகல பிரஜைகளுக்கும் சம அந்தஸ்து வழங்கப்படுதல் வேண்டும். எனினும் பல்வேறு காரணங்களின் பொருட்டு சமனிலையற்ற நிலைமைகள் ஏற்படுவதை காணக்கூடியதாக உள்ளது. பல்வேறு சந்தர்ப்பங்களின்போது நாம் எதிர்நோக்கும் அனுபவங்களின் இயல்புகளுக்கேற்ப வேறுபட்ட உணர்வுகள் ஏற்படுகின்றன. அத்தகைய சந்தர்ப்பங்களில் வெளிக்காட்டப்படுகின்ற துலங்கல்கள் குறித்த சந்தர்ப்பங்களுக்குப் பொருத்தமானதாக இருத்தல் வேண்டும். அன்றாட வாழ்வில் பல்வேறு சந்தர்ப்பங்களில் தோன்றுகின்ற மனவெழுச்சிகளை

- இனங்காண்பதற்கு
- கட்டுப்படுத்துவதற்கு
- பொருத்தமான வகையில் அவற்றை வெளிக்காட்டுவதற்கு நாம் பழகிக் கொள்ள வேண்டும்.

## பாதகமான மனவெழுச்சிகளை சமநிலைப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய வழிமுறைகள்

- **மனதை ஒருநிலைப்படுத்தும் பயிற்சிகளில் ஈடுபடல்**
  - தியானத்தில் ஈடுபடல்
  - பூக்கன்றுகளை வளர்த்தல்
  - இயற்கையை இரசித்தல்
  - சமய நடவடிக்கைகளில் ஈடுபடல்
  - செல்லப் பிராணிகளை வளர்த்தல்



உரு 2.10

- **நண்பர்களுடன் உறவாடுதல்**
  - கலந்துரையாடுதல்
  - ஒருவருக்கொருவர் உதவுதல்
  - பல்வேறு செயற்பாடுகளில் ஈடுபடல்
  - சுற்றுலா செல்லல்



உரு 2.11

• பாதகமான மனவெழுச்சிகளை ஏற்படுத்தக்கூடிய நபர்களையும் சூழலையும் மாற்றிக் கொள்ளுதல்

- வீட்டையும் அலுவலகத்தையும் சுத்தமாகவும் ஒழுங்காகவும் வைத்திருத்தல்
- சமத்துவமின்மை, வேறுபாடுகளைக் குறைத்தல்
- நட்புறவுடனும் ஒத்துழைப்புடனும் செயற்படுதல்
- நேரத்திற்குப் பணிகளைச் செய்தல்



உரு 2.12

• ஆக்கச் செயற்பாடுகளில் ஈடுபடல்

- கவிதை, பாடல், கட்டுரை எழுதுதல்
- புத்தகங்கள் வாசித்தல்
- நாடகம் தயாரித்தல்
- பூங்காவை அழகுபடுத்தல்
- கலைகள் சார்ந்த செயற்பாடுகளில் ஈடுபடல்
- பாடுதல், நடனமாடுதல், சித்திரம் வரைதல்
- நாடகங்கள், திரைப்படங்கள் பார்த்தல்



உரு 2.13

• விளையாட்டு மற்றும் உடற்பயிற்சிகளில் ஈடுபடல்

- உள்ளக மற்றும் வெளியக விளையாட்டுக்களில் ஈடுபடல்
- நடத்தல் பயிற்சி
- உடற்பயிற்சி செய்தல்
- நீந்துதல்



உரு 2.14

## மனவெழுச்சிகளைப் பயனுள்ளதாக மாற்றிக் கொள்வதன் மூலம் ஜனநாயகத்தை உறுதிசெய்வோம்

ஜனநாயகச் சமூகமொன்றின் பிரஜை என்ற வகையில் மனவெழுச்சிகளைப் பயனுள்ளதாக மாற்றிக் கொள்வது தனிப்பட்ட வாழ்க்கைக்கும் எமது சிறப்பிற்கும் ஏதுவாகின்றது.

பல்வேறு காரணங்களை அடிப்படையாகக் கொண்டு மனநிலை பாதிப்புகளும் மனவெழுச்சிகளும் நமக்குள் ஏற்படுவது இயல்பானதாகும். அவற்றைப் பயனுள்ள வகையில் மாற்றிக் கொள்வதற்கு நாம் பழக்கப்படவும் பயிற்றப்படவும் வேண்டும்.

அதற்காகப் பின்வரும் ஒழுங்கு முறைகளைப் பேணலாம்

- முன்னாயத்தம் செய்தல்
- நேரத்திற்குப் பணிகளைச் செய்தல்
- பிறருடைய ஆலோசனைகளையும் உதவிகளையும் பெற்றுக் கொள்ளல்
- செவிமடுத்தல்
- சட்டதிட்டங்களையும் மரபுகளையும் பின்பற்றுதல்
- தன்னம்பிக்கையைக் கட்டியெழுப்புதல்

இவற்றின் மூலம் பல்வேறு பாதிப்புகளுக்கு உட்படுதலில் இருந்து நீங்கி வாழ்க்கைக் குறிக்கோளினை இலகுவாக அடைந்து கொள்ள முடியும்.

சுதந்திரத்தையும் சமத்துவத்தையும் அனுபவித்தவாறு பிறரின் உரிமைகள் பாதுகாக்கப் படுவதும் கடமைகளை மேற்கொள்ளப்படுவதுமான ஜனநாயக ரீதியிலான பிரஜையாக விளங்குவதற்கு நீங்களே முயற்சிக்க வேண்டும். அதற்காக உங்களது நண்பர்களுக்கு நீங்கள் உதவமுடியும். இதனால் கிடைக்கும் பயன்கள் சில வருமாறு,

- உணர்ச்சிவசப்படாது சமநிலையிலான ஆளுமையைக் கொண்ட ஒருவராக விளங்குவீர்கள்.
- எளிமையாகச் செயற்படுவதற்கும் முகமலர்ச்சியுடன் இருப்பதற்கும் பிறருடன் சிறந்த வகையில் உரையாடுவதற்குமான இயல்புகளை உடையவராக விளங்குவீர்கள்.
- பிறருடைய மனதைப் புண்படுத்தாத ஒருவராக விளங்குவீர்கள்
- பிறருடன் ஒத்துழைப்புடனும் சமாதானத்துடனும் செயற்படுவீர்கள்
- நம்பிக்கைக்கும் கௌரவத்திற்கும் பாத்திரமாக விளங்குவீர்கள்

**செயற்பாடு 2.4**

- மனவெழுச்சிகளைப் பயனுள்ள வகையில் வெளிப்படுத்துவதனால் அல்லது மனவெழுச்சிகளைக் கட்டுப்பாடின்றி வெளிப்படுத்துவதனால் சாதக, பாதக விளைவுகள் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்கள் தொடர்பாக தகவல் சேகரிக்குக.
- சேகரிக்கப்பட்ட தகவல்களைப் பயன்படுத்தி ஜனநாயக சமூகத்தின் பிரஜையென்ற வகையில் மனவெழுச்சிகளை பயனுள்ள வகையில் மாற்றிக் கொள்வதன் முக்கியத்துவம் குறித்து ஐந்து வாக்கியங்கள் எழுதுக. அல்லது கவிதை, பாடல், அல்லது சித்திரம் ஒன்றை வரைக.
- சிறந்த ஆக்கங்களை வகுப்பறைச் சுவர்ப்பத்திரிகையிற் காட்சிப்படுத்துக.

## தலைமைத்துவத்தின் முக்கியத்துவத்தை அறிந்து தலைமைத்துவப் பண்புகளை விருத்தி செய்து கொள்வோம்

மனிதன் கூட்டாகச் செயற்படும் சகல சந்தர்ப்பங்களிலும் அவனை வழிநடத்துவதற்கு தலைமைத்துவம் அவசியமாகின்றது. குடும்பம், நபர்கள் அல்லது குழுவினர் பொதுக்குறிக்கோள் அல்லது குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்காக வழிநடத்த முன்வருதல் தலைமைத்துவச் செயற்பாடாகும்.

- தலைமைத்துவம் என்பது, தெளிவான குறிக்கோள்களை அடையும் பொருட்டு மக்களை ஈடுபடுத்துதல் மற்றும் வழிநடத்துகின்ற செயற்பாடாகும்.
- ஒரு நிறுவனம் அல்லது ஓர் அமைப்பு தனது இலக்கினை அடைந்து கொள்வதற்கு அதன் உறுப்பினர்களை முன்கொண்டு வரவும் அர்ப்பணிக்கவும் புரிந்துணர்வுடன் நடந்துகொள்வதற்குமான ஆற்றலைப் பெற்றுக் கொடுத்தல் தலைமைத்துவமாகும்.
- தலைமைத்துவம் என்பது முறையொழுங்கோ அல்லது தொழினுட்பத்திறன்களோ அன்று. அது மனதைத் திறத்தல் தொடர்பான காரணியாகும். அதன்மூலம் தமக்கும் மற்றவர்களுக்கும் உத்வேகமளிக்க முடிகிறது.
- சிறந்த தலைமைத்துவம் என்பது பின்பற்றப்படக்கூடிய வழிமுறையன்று. மாறாக அது உளவியல் ரீதியானதோர் அனுபவமாகும். அது மனதில் தோன்றுவதுடன் ஏனையோருக்கும் பகிர்ந்தளிக்கின்ற உளவியல் ரீதியிலான தொழிற்பாடாகும்.

### சமூகத்தில் தலைமைத்துவத்தை இனங்காணக்கூடிய சந்தர்ப்பங்கள்

- குடும்பத்தில் - பெற்றோர், மூத்த பிள்ளைகள்
- பாடசாலையில் - அதிபர், பிரதிஅதிபர், உதவி அதிபர், பகுதித் தலைவர்கள், வகுப்பாசிரியர்கள், மாணவத் தலைவர்கள், முகாமைத்துவக் குழுத் தலைவர், வகுப்புத் தலைவர்கள், பாடத் தலைவர்கள்
- சமூகத்தில் - சமயத் தலைவர்கள், சமூகத் தலைவர்கள், அரசியல் தலைவர்கள், நிறுவனத் தலைவர்கள்.

### தலைவர்களிடம் காணப்படவேண்டிய பண்புகள்

- தொடர்பாடல் திறன் → முன்வைத்தல், விளக்கமளித்தல், பேச்சாற்றல், ஒழுங்குமுறையைக் கட்டியெழுப்புதல், செவி மடுத்தல், நிலையான தன்மை
- பிரச்சினைகளைத் தீர்க்கும் திறன் → பிரச்சினைகளை உரிய வகையில் அறிந்து கொள்ளல், தகவல் சேகரித்தல், ஆராய்தல், தீர்வினைத் தேடுதல், நடைமுறைப்படுத்தல்

- திட்டமிடும் திறன் → குறிக்கோளை தீர்மானித்தல், ஒழுங்குபடுத்துதல், இலக்கை நோக்கிச் செல்லல்

- நடைமுறைப்படுத்தும் திறன் → குறிக்கோளைத் தீர்மானித்தல், குழுக்களை ஏற்படுத்தல், நிருவகித்தல், இலக்கினை அடைதல்

- மனிதத் தொடர்புகள் → சமூகமயத்தன்மை, வசீகரம், பரஸ்பரத் தொடர்பு மற்றும் ஆளிடைத் தொடர்புகளை பேணுதல்

- மனவெழுச்சித் திறன்கள் → புரிந்துணர்வு, உணர்வுபூர்வமாகச் செற்படல், முகமலர்ச்சியுடன் செயற்படல்

## சமூகத்தில் காணப்படக்கூடிய பல்வேறு தலைமைத்துவப் பாங்குகளை அறிந்து கொள்வோம்

சமூகத்திற்கு தலைமைத்துவத்தை வழங்குகின்ற நபர்களின் இயல்புகள், செயற்பாடுகளுக்கு அமைய பல்வேறு தலைமைத்துவப் பாங்குகள் காணப்படுகின்றன. குடும்பத்தினதோ நிறுவனத்தினதோ அமைப்பினதோ அல்லது நாட்டினதோ தலைவர்களை விமர்சன ரீதியாக நோக்கும்போது வேறுபாடுகள் பலவற்றை நாம் அறிந்து கொள்ளலாம். இதிலிருந்து நீங்கள் ஜனநாயக ரீதியான தலைவராவதற்கும் ஜனநாயக சமூகத்தை உறுதிசெய்வதற்கும் முயற்சிப்பது உங்களது கடமையாகும்.

| சர்வாதிகாரத் தலைமைத்துவப்பாங்கு | முறைகேடான தலைமைத்துப்பாங்கு |
|---|---|
| • பொதுமக்களின் கருத்துகளை ஏற்றுக் கொள்ளாமை<br>• மாற்றத்தை விரும்பாமை<br>• மிகவும் கொடூரமாகச் செயற்படுதல்<br>• தனித்துத் தீர்மானமெடுத்தல்<br>• அச்சுறுத்துதல், பீதியை உண்டு பண்ணல்<br>• திறன்களை விருத்திசெய்து கொள்ள வாய்ப்பளிக்காமை | • பொது வளங்களை முறையற்ற வகையில் பயன்படுத்துதல்<br>• ஊழல், மோசடி, துஷ்பிரயோகங்களில் ஈடுபடல்<br>• பிழையான முன்னுதாரணமாக விளங்குதல்<br>• சட்டதிட்டங்கள், சம்பிரதாயங்களை மதிக்காமை<br>• தனிப்பட்டவர்களுக்கு கூடுதலான கவனிப்பைச் செலுத்துதல் |

| பெயரளவிலான தலைமைத்துவப்பாங்கு | ஜனநாயகத் தலைமைத்துவப்பாங்கு |
|---|---|
| • மக்கள் நலன்புரி நடவடிக்கைகளை மேற்கொள்ளாமை<br>• சிறந்த தலைமைத்துவப் பண்புகளிலிருந்து நீங்கியவராக இருத்தல்<br>• தெளிவான குறிக்கோள்களற்றவராக விளங்குதல்<br>• மாற்றங்களை ஏற்படுத்த விரும்பாமை<br>• தம்மை முன்னேற்றுவதற்கு முயற்சித்தல் | • மக்கள் கருத்துகளை ஏற்றுக் கொள்ளலும், மதித்தலும்<br>• மக்களுடன் மிகவும் நெருக்கமாகப் பழகுதல்<br>• பிரச்சினைகளைச் செவிமடுத்தலும், தீர்வு காணுதலும்<br>• மக்களின் உணர்வுகளை அறிந்து கொள்ளலும் மதித்தலும்<br>• மக்கள் ஆற்றல்களை விருத்தி செய்வதற்கு இடமளித்தல்<br>• சுதந்திரம், சமத்துவம், என்பவற்றை மதித்தலும் உறுதி செய்தலும் |

### சமூகத்திற்கு தலைவர்கள் ஏன் அவசியம்?

யாதேனுமொரு மக்கள் சமூகத்தின் எதிர்பார்ப்புகள், நோக்கங்கள், இலக்குகளை அடைந்து கொள்வதற்காக அதனை வழிநடத்தக்கூடிய ஒரு தலைமைத்துவம் அவசியமானதாகிறது. சரியானதும் வினைத்திறனானதுமான தலைமைத்துவம் இல்லாதபோது குடும்பம், பாடசாலை, நிறுவனம், அமைப்புகள் மட்டுமல்ல நாடும் பாதிப்புக்குள்ளாகின்றன. இது தொடர்பான உதாரணங்களை தங்களது ஆசிரியர்களுடன் கலந்துரையாடுங்கள்.

### தலைவர் ஒருவரின் அவசியம் குறித்து அநேக காரணங்கள் உள்ளன. அவற்றுள் சில வருமாறு,

- உரிய இலக்குகளுடன் நிறுவனங்கள், அமைப்புகள் அல்லது நாட்டினைக் கட்டியெழுப்புதல்
- குறிக்கோள்களை தீர்மானிப்பதற்கும் அவற்றை நோக்கி வழிநடாத்துதல்
- உரிய முறையில் திட்டமிடுதல்
- சவால்களையும், எதிர்ப்புக்களையும் வெற்றி கொள்ளல்
- சவால்களையும், எதிர்ப்புக்களையும் ஜனநாயக ரீதியாக நிருவகித்தல்
- பின்பற்றுவோருக்கு வேலைகளைப் பகிர்ந்தளித்தல்
- பின்பற்றுவோரைத் தெளிவுபடுத்துதல்
- வளங்களை உரியவகையில் பகிர்ந்தளிப்பதற்கும், பயன்படுத்துவதற்கும்
- முரண்பாடுகளை குறைத்துக்கொள்ளலும் தீர்த்துக்கொள்ளலும்

**செயற்பாடு 2.5**

- உங்களது மனதைக் கவர்ந்த சமய, அரசியல், மக்கள் தலைவர்கள் தொடர்பான தகவல்கள் புகைப்படங்களை சேகரிக்குக.
- அந்தத் தலைவர்கள் ஜனநாயக சமூகத்தினை நிலைநிறுத்துவதற் காகவும் உறுதி பெறச் செய்வதற்காகவும் மேற்கொண்ட நடவடிக் கைகள் பற்றிய தகவல்களை உள்ளடக்கிய சஞ்சிகையொன்றைத் தயாரிக்குக.

## ஜனநாயகத் தலைமைத்துவப் பண்புகள்

இன்று உலகில் பெரும்பாலான நாடுகளில் செயற்படுத்தப்படும் ஆட்சிமுறையாக ஜனநாயகமே திகழ்கிறது. ஐக்கிய அமெரிக்க நாடுகள், பிரித்தானியா, பிரான்ஸ், சுவிட்சர் லாந்து, இந்தியா, மற்றும் இலங்கை போன்ற நாடுகள் இவற்றுக்கு உதாரணங்களாகும். இந்நாடுகளில் அரசியல் தலைமைத்துவத்தைத் தெரிவு செய்வதற்காகத் தேர்தல்கள் நடத்தப்படுகின்றன. தேர்தல்களில் மக்கள் தமக்கு விருப்பமான தலைவர்களைத் தமது பிரதிநிதிகளாகத் தெரிவு செய்கின்றனர்.

அரசியல் தலைமைத்துவமே நாட்டின் சகல துறைகளின் மீதும் நேரடியாகச் செல் வாக்குச் செலுத்தக்கூடியதாக விளங்குகிறது. அவர்கள் வழங்குகின்ற முன்மாதிரிகள் ஜனநாயகச் சமூகத்தின் சிறப்பான செயற்பாட்டினைத் தீர்மானிக்கின்றன.

## ஜனநாயக ரீதியான தலைவர் ஒருவரிடம் காணப்படவேண்டிய பண்புகள் சில வருமாறு,

- மனிதநேயம்
- நேர்மை
- அர்ப்பணிப்பு
- சமத்துவம்
- நட்புறவு
- ஆக்கத்திறன்
- சரியாக தீர்மானம் மேற்கொள்ளல்
- தன்னம்பிக்கை
- உறுதிப்பாடு
- செவிமடுத்தல்
- பாராபட்சம் காட்டாமை
- சமூகப்பற்று
- தொலைநோக்குச் சிந்தனை
- பிறருக்கு உதவுதல்

### தலைவரும் பின்பற்றுபவரும்

- தலைவர் குழுவை வழிநடத்துவார்.
- பின்பற்றுபவர் தலைவரின் வழிகாட்டலுக்கு ஏற்ப செயற்படுவார்.
- தலைவர் குழுவை வழிநடாத்தும்போது பின்பற்றுபவர் நம்பிக்கையுடன் செயற்படுவதற்கு ஆயத்தமாக இருத்தல் வேண்டும்.
- தலைவர் சரியான இலக்கினை அடைவதற்கு பின்பற்றுவோர் பிரதிபலனை எதிர்பாராது உதவுவது கடமையாகும்.
- சிறந்த தலைவர் ஒருவராக மாறுவதற்கு சிறந்த பின்பற்றுபவராகச் செயற்பட வேண்டும்.
- தலைவரும் பின்பற்றுவோரும் ஒருவருக்கொருவர் பொறுப்புக்கூறல் அடிப் படையில் பிணைக்கப்பட்டுள்ளனர்.

### தலைமைத்துவமும் பின்பற்றுதலும் சமுதாயத்தில் காணப்படும் சந்தர்ப்பங்கள்

குடும்பம், பாடசாலை, சமூகம் என்பன தலைவர்களையும் பின்பற்றுவோர்களையும் உள்ளடக்கிய பல குழுக்களை கொண்டதாகும். அவற்றுக்கான உதாரணங்கள் சில வருமாறு,

| தலைவர் | பின்பற்றுவோர் |
|---|---|
| • தந்தை | • குடும்பத்தின் ஏனைய உறுப்பினர்கள் |
| • அதிபர் | • ஆசிரியர் குழாம், மாணவர்கள் |
| • சமயத் தலைவர்கள் | • ஏனைய சமயத் தலைவர்களும், சீடர்களும் |
| • வேட்பாளர் | • வாக்காளர் |
| • ஜனாதிபதி | • நாட்டின் பிரஜைகள் |

மேலும், பாடசாலையை நோக்கும்போது தலைவர்களையும், பின்பற்றுவோரையும் காணலாம். பல்வேறு தலைவர்கள் பிறிதொரு சந்தர்ப்பத்தில் பின்பற்றுவோராகவும் விளங்குவர். சந்தர்ப்பங்களுக்கு ஏற்ப தமது பொறுப்புகளையும் கடமைகளையும் உரிய விதத்தில் நிறைவேற்றுவது தலைவர்களினதும் பின்பற்றுவோர்களினதும் பொறுப்பாகும்.

| தலைவர் | பின்பற்றுவோர் |
|---|---|
| • அதிபர் | • ஆசிரியர்குழாம், மாணவ மாணவியர் |
| • வகுப்பாசிரியர் | • வகுப்பு மாணவர் |
| • மாணவத் தலைவர் | • பாடசாலை மாணவர்கள் |
| • வகுப்புத் தலைவர் | • வகுப்பு மாணவர் |
| • பாடத் தலைவர் | • பாடத்தினைக் கற்கும் மாணவர் |

## ஜனநாயக வாழ்வு

சமகால சமூகத்தில் நபர்களுக்கிடையில் பல்வேறு முரண்பாடுகள், கருத்து வேறு பாடுகள் ஏற்படுவதைக் காணலாம். இதற்குக் காரணம் ஒவ்வொருவருக்கும் இடையில் ஏற்படும் அதிக போட்டியும் அவநம்பிக்கையுமாகும். எவருக்கும் சமூகத்தில் தனித்து வாழ்வது கடினம். சமூகமாகச் செயற்படுகின்றபோது பிறருக்கு மதிப்பளித்து பிறருடைய கருத்துகளை ஏற்றுக்கொண்டு பொதுவாகச் செயற்பட வேண்டியுள்ளது. இதன்மூலம் முரண்பாடுகளும் கருத்துவேறுபாடுகளும் நீங்குகின்றன.

ஏற்றுக்கொள்ளப்பட்ட சட்டதிட்டங்கள், பழக்கவழக்கங்கள் மற்றும் சம்பிரதாயங் களுக்கு மதிப்பளித்து சமத்துவத்துடனும் சகவாழ்வுடனும் செயற்படுவதனை ஜனநாயக வாழ்க்கை முறையில் காணமுடிகிறது. அத்தகைய சமூகத்தில் தமது நலன்களுக்காக மாத்திரமன்றி பிறருடைய நலன்களுக்காகவும் புரிந்துணர்வுடன் செயற்படுவது சிறந்த பண்பாகும்.

ஜனநாயத்தினை நிலைநிறுத்துவது என்பது ஜனநாயகப் பண்புகளுக்கு அமைய தாம் வாழ்வதற்குப் பழக்கப்படுவதுடன், சமூகத்தில் சிறந்த பிரஜையொருவராகச் செயற் படுவதுமாகும்.

**ஜனநாயக வாழ்வுடன் தொடர்புடைய பண்புகள்**

- பெரும்பான்மைக் கருத்துகளுக்கு மதிப்பளித்தல்
- ஒத்துழைப்புடன் செயற்படுதல்
- உரிமைகளை அனுபவிப்பதுடன் கடமைகளையும் நிறைவேற்றுதல்
- கலந்துரையாடல் மூலம் தீர்மானங்களை மேற் கொள்ளல்
- சுய கட்டுப்பாட்டுடன் செயற்படுதல்
- சமத்துவத்திற்கு மதிப்பளித்தல்
- ஒழுக்கத்துடன் செயற்படல்
- நேர்மையுடனும் சட்டத்தை மதித்தும் செயற்படல்
- பிறருடைய உரிமைகளுக்கு மதிப்பளித்தல்
- மாற்றுக் கருத்துகளைச் சகித்துக் கொள்ளல்

## ஜனநாயக வாழ்க்கைமுறை மூலம் உறுதி செய்யப்படும் சமூகத்தின் சிறப்பான இயக்கம்

ஜனநாயகம், ஓர் ஆட்சிமுறை என்ற வகையிலும் ஒரு வாழ்க்கை முறை என்ற வகையிலும் அறிமுகம் செய்யப்படுகிறது. அதற்குக் காரணம் சமூகத்தின் சிறப்பான செயற்பாட்டிற்கு ஜனநாயகப் பண்புகளை உறுதி செய்வது அவசியமானது என்பதனாலாகும். ஜனநாயக வாழ்க்கைமுறை சமூகத்தின் சிறப்பான செயற்பாட்டிற்கு காரணமாக அமைகின்ற விதத்தை ஆராய்ந்து பார்ப்போம்.

- **மக்கள் சமூகத்தில் நல்லெண்ணத்தை விருத்தி செய்தல்**
  - ஒவ்வொரு மக்கள் குழுவினரும் சமமாகக் கருதப்பட்டு மதிக்கப்படுவதனால் தொடர்புகள் விருத்தியடைதல்
  - தமது தேவைகள் எதிர்பார்க்கின்ற அளவில் நிறைவேறுவதனால் மக்கள் திருப்தியடைதல்
  - சகல நடவடிக்கைகளிலும் சகலரினதும் பங்குபற்றுதலும் பிரதிநிதித்துவமும் கிடைக்கப்பெறல்
- **முரண்பாடுகளற்ற சமூகமொன்று உருவாதல்**
  - பெரும்பான்மைக் கருத்துக்கு மதிப்பளித்தல்
  - சிறுபான்மையினரின் பிரதிநிதித்துவத்திற்கு இடமளித்தல்
  - சகல மக்கட் குழுக்களுக்கும் பண்பாடுகளுக்கும் கௌரவமளித்தல்
- **சட்டங்களை மதிக்கின்ற சமூகம் உருவாதல்**
  - பிரஜைகள் சட்டத்தை மதித்தல்
  - எளிமையாகவும் சமாதானமாகவும் செயற்படல்
  - ஒருவரையொருவர் ஏற்றுக்கொள்ளலும் கௌரவமளித்தலும்
- **சகலரதும் உரிமைகள் பாதுகாக்கப்படல்**
  - உரிமைகள் அங்கீகரிக்கப்படல்
  - கடமைகள் நிறைவேற்றப்படல்
  - சுதந்திரத்தை அனுபவித்தல்

## செயற்பாடு 2.6

- ஜனநாயகத்தின் இருப்பு சமூகத்தின் சிறப்பிற்குக் காரணமாகின்றது எனும் கருப்பொருளில் கட்டுரை ஒன்றை வரைக. சிறந்த கட்டுரையை வகுப்பறையில் காட்சிப்படுத்துக

## பொழிப்பு

⇨ குடும்ப அலகில் நிலவும் ஜனநாயகப் பண்புகள் குடும்பத்தின் மேம்பாட்டுக்கு காரணமாக அமையும்.

⇨ குடும்ப உறுப்பினரென்ற வகையில் ஜனநாயக வாழ்க்கை முறைக்குரிய பண்புகளை வளர்த்துக்கொள்வது முக்கியமாகும்.

⇨ பாடசாலை சமூகத்தில் நடைமுறைபடுத்தப்படும் ஜனநாயகப் பண்புகளை ஏற்று நடந்துகொள்ள வேண்டும்.

⇨ சிறுவர் உரிமைகளை சரியாக நிறைவேற்றல் மற்றும் பொறுப்புகளை நிறைவேற்றுதல் ஆகியன முக்கியமாகின்றன.

⇨ சிறுவர் உரிமைகளை உறுதிப்படுத்தும் பல நிறுவனங்கள் உள்ளன. அவற்றின் செயற்பாடுகள் பல்வேறுபட்டனவாகும்.

⇨ நபர்களில் ஏற்படும் பல்வேறுபட்ட மனவெழுச்சிப் பண்புகள் அவர்களின் நடத்தைகளில் செல்வாக்கு செலுத்தும்.

⇨ ஜனநாயக சமுகமொன்றின் உறுப்பினரென்ற வகையில் மனவெழுச்சிகளை சிறப்பான வகையில் முகாமைத்துவம் செய்வது முக்கிய பண்பாகும்.

⇨ ஜனநாயக தலைமைத்துவப் பண்புகளை அறிந்து அவற்றை விருத்தி செய்வது அவசியமாகும்.

⇨ தலைமைத்துவப் பண்புகளைப் போன்றே பின்பற்றுவோருக்குரிய பண்புகளையும் விருத்தி செய்து கொள்ள வேண்டும்.

⇨ ஜனநாயக இருப்பு சமுகத்தின் சிறப்புக்குக் காரணமாக அமையும்.

# 3 பல்பண்பாட்டு மக்கள் சமூகம்

## அறிமுகம்

ஒரு நாட்டில் பல்வேறு மொழிகளைப் பேசும், பல்வேறு சமயங்களைப் பின்பற்றும் பல்வேறு இனங்களைச் சேர்ந்த மக்கள் வாழலாம். அவ்வாறான குழுக்களைக் கொண்ட சமூகம் பல்பண்பாட்டு மக்கள் சமூகம் எனப்படும்.

**இந்த அத்தியாயத்தைக் கற்பதனால் உங்களால்,**

- பல்பண்பாட்டு மக்கள் சமூகம் உருவாவதற்கு ஏதுவான காரணங்களை வரையறுக்கவும்
- பல்பண்பாட்டு மக்கள் சமூகப் பிரஜை என்ற வகையில் மேம்படுத்திக்கொள்ள வேண்டிய பண்புகளை விளக்கவும்
- அந்தப் பண்புகளை மேம்படுத்தி முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கும் முரண் பாடுகள் குறைந்த சமூகத்தை உருவாக்குவதற்குமான முறை பற்றிய விளக்கத்தைப் பெற்றுக் கொள்ளவும்

**முடியுமாக இருக்கும்.**

## பண்பாடு

‘‘பண்பாடு’’ எனும் சொல்லை சமூக மற்றும் மானுடவியலாளர்கள் பலவாறாக வரைவிலக்கணப்படுத்தியுள்ளனர். எனவே, அது தொடர்பான பொது வரைவிலக் கணம் ஒன்றை முன்வைப்பது சிரமமானது. ஒவ்வொரு நபரும் சமூகத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட வாழ்க்கைக் கோலமொன்றிற்குப் பழக்கப்பட்டுள்ளனர்.

ஒருவர் பிறந்தது முதல் இறக்கும் வரை தனது பண்பாட்டிற்கு ஏற்பவே நடந்து கொள்கின்றார். எனவே, எந்தவொரு சமூகத்திலும் செல்வாக்கு செலுத்தும் பிரதான சாதனமாகத் திகழ்வது பண்பாடாகும். பண்பாட்டிலிருந்து விடுபட்ட எந்தவொரு மனிதனாலும் தனித்து வாழ முடியாது. பாரதி மகாவித்தியாலய தரம் 8 மாணவர்கள் குடியியற் கல்விப் பாடவேளையின்போது மேற்கொண்ட கலந்துரையாடலின் ஒரு பகுதி கீழே தரப்பட்டுள்ளது. அதனை நன்கு வாசித்து விளங்கிக் கொள்ளுங்கள்.

குமார் : நாம் வாழுகின்ற, அணிகின்ற, நடந்து கொள்கின்ற முறைகள் தானே பண்பாடு எனப்படுகிறது?

ஜானகி : அதுமட்டுமல்ல. பண்பாடு என்பது நாம் பேசுகின்ற, சாப்பிடுகின்ற முறைகள் எல்லாவற்றையும் உள்ளடக்கியதாகும். முற்காலந்தொட்டு எமது மூதாதையர் கட்டியெழுப்பியுள்ள எல்லா அம்சங்களும் பண்பாட்டிற்குரியனவாகும்.

கஜன் : அந்த அம்சங்கள் எவையென்று சொல்லுங்கள்.

பாத்திமா : விகாரைகள், கலைப்படைப்புக்கள், குளங்கள், அணைக் கட்டுகள், கோயில், பள்ளிவாசல், தேவாலயம் போன்றவைதான் அந்த அம்சங்கள். நாம் தரம் 7 இல் படித்தது உங்களுக்கு நினைவில்லையா?

அன்சார் : நல்லது, நாங்கள் இப்போது பண்பாடு என்பதற்கு ஒரு வரைவிலக்கணத்தை உருவாக்குவோம்.

தேவி : பண்பாடு என்பது வாழுகின்ற, உண்ணுகின்ற, அணிகின்ற, பழகுகின்ற, வழிபாடுகின்ற எல்லா செயற்பாடுகளுமாகும். இவைதவிர கலைகள், மரபுகளும் இதில் உள்ளடங்குகின்றன.

ஜானகி : எமது எல்லாச் செயற்பாடுகளினதும் பின்னணியிலிருந்து எம்மை செயற்படுத்துகின்ற விசையே பண்பாடாகும்.

தேவி : நாம் அறிந்தோ, அறியாமலோ பண்பாடு எம்மை இயக்குகின்றதல்லவா?

அன்சார் : நம் எல்லோருக்கும் பண்பாடு இருக்கின்றது. அது பிரதேசத்துக்குப் பிரதேசம், சமூகத்திற்கு சமூகம், சமயத்திற்கு சமயம் இனத்திற்கு இனம் வேறுபடலாம். ஆயினும், புவியில் வாழும் எல்லா மனிதருக்கும் பண்பாடு ஒன்றுள்ளது.

ஆசிரியை : பண்பாட்டைப் பற்றி எனது வகுப்பு மாணவர்கள் அறிந்துள்ள விடயங்களைக் கேட்டு நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இப்போது நீங்கள் கதைத்தவற்றை கேட்டபோது உங்களுக்கு அது பற்றிப் புதிதாய் கற்ப்பதற்கு எதுவுமில்லை என்று நினைக்கிறேன்.

**பண்பாடு என்றால் என்ன என்பதற்கு இரண்டு வரைவிலக்கணங்களை அடுத்து நோக்குவோம்**

''சமூக அங்கத்தவர் ஒருவர் என்ற வகையில் மனிதனால் உரிமையாக்கிக் கொண்டதும் பெற்றுக் கொண்டதுமான அறிவு, நம்பிக்கை, கலைகள், ஒழுக்க விழுமியங்கள் மற்றும் ஆற்றல்கள் அனைத்தும் பண்பாடு ஆகும்.''


E.B.டெய்லர் (ஆரம்ப கலாசாரம்)

''பண்பாடு என்பது குறிப்பிட்டதொரு இடத்தில் வாழுகின்ற மனிதக் குழுவின் முழுமையான வாழ்க்கை முறையாகும். அவர்களது பழக்கவழக்கங்கள், குணவியல்புகள், ஒழுக்க விழுமியங்கள், சமூக நிறுவனங்கள், கலைகள் சமயமும் என்பவற்றின் மூலம் பண்பாடானது வெளிப்படும்.''

பேராசிரியர் விமல் திசாநாயக்க
(விவாதத்திற்குரிய கட்டுரைகள்)

மேற்படி வரைவிலக்கணங்கள் மற்றும் தரம் 8 மாணவர்களின் கலந்துரையாடல் என்பவற்றின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட எளிமையான வரைவிலக்கணம் பின்வருமாறு;

'' மனிதனால் உரிமையாக்கிக் கொள்ளப்பட்டுள்ள அறிவு, நம்பிக்கை, கலாசாரம், பழக்கவழக்கம், வாழ்க்கை முறை முதலிய அனைத்தும் பண்பாடாகும்.''



உரு 3.1 பண்பாட்டம்சங்கள் சில

## பல்கலாசாரம் அல்லது பல்பண்பாடு

### பல்கலாசாரம்

பாத்திமா : பல்பண்பாடு என்றால் என்ன குமார்?

குமார் : ஒரே நாட்டில் வாழும் பல்வேறு மொழிகளைப் பேசுகின்ற பல்வேறு சமயங்களைப் பின்பற்றுகின்ற பல்வேறு இனங்களைச் சேர்ந்த சமூக அமைப்பே பல்பண்பாட்டுச் சமூகம் எனப்படுகிறது.

ஜானகி : நான் சிறிய உதாரணம் ஒன்று சொல்லவா? இலங்கையில் சிங்களவர், தமிழர், முஸ்லிம், பறங்கியர் எனும் பல்வேறு இனத்தவர்களும் வாழ்கின்றனர். பௌத்தம், இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம் முதலிய சமயங்களைப் பின்பற்றுகின்ற மக்களைப் போலவே சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளைப் பேசுகின்றவர்களும் வாழ்கின்றனர். எனவே, இலங்கை பல்பண்பாட்டு சமூகத்தவர்கள் வாழ்கின்ற பல்பண்பாடு கொண்ட நாடாகும்.

தேவி : ஆம் ஜானகி, ஆயினும் அக்குழுவினரிடையே வேறுபாடுகளும் நிலவுகின்றதல்லவா? அதேபோல் ஐக்கிய அமெரிக்கக் குடியரசு, இந்தியா போன்ற நாடுகள் பல்பண்பாட்டைக் கொண்ட நாடுகளாகும். அந்நாடுகளில் பல்இன, மத மற்றும் பல மொழிகளைப் பேசுகின்ற குழுக்கள் காணப்படுகின்றன.

அன்சார் : ஆமாம் அதைத்தான் பண்பாட்டுப் பல்வகைமை என்கின்றோம்.

தற்காலத்திலுள்ள உலகின் பெரும்பாலான நாடுகள் பல்பண்பாட்டுச் சமூகங்களைக் கொண்டவையாகும். அவ்வாறான சமூகங்களில் சகல பிரஜைகளும் ஒருவருக்கொருவர் நம்பிக்கையுடனும் ஒற்றுமையுடனும் வாழ்தல் அவசியம்.

**பல்பண்பாட்டு சமூகங்களைக் கொண்ட நாடுகள் சிலவற்றைப் பார்ப்போம்**

- இலங்கை
- இந்தியா
- ஐக்கிய அமெரிக்கா
- பிரித்தானியா

## செயற்பாடு 3.1

- பல்பண்பாடு என்பது பற்றி நீங்கள் கற்ற விடயங்களின் அடிப்படையில் எளிமையான வரைவிலக்கணம் ஒன்றை உருவாக்குங்கள். அதனைப் பற்றி வகுப்பிலுள்ள ஏனைய மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்

### பல்பண்பாட்டு சமூகம்

பல்வேறு கலாசாரப் பண்புகளைக் கொண்ட சமூகமே பல்பண்பாட்டுச் சமூகம் எனப்படும். அவ்வாறான சமூகத்தில் எல்லா இனத்தவரும் சமூகத்தவரும் எல்லா மொழி பேசுவோரும், ஒற்றுமையாகச் செயற்பட வேண்டும். அதன் மூலமே முரண்பாடுகள் குறைவடையும், ஒற்றுமை வளரும், நிலையான சமாதானம் உருவாகும், நாடும் அபிவிருத்தியடையும்.



உரு 3.2



உரு 3.3

தற்கால சகல சமூகங்களும் பல்பண்பாட்டு சமூகங்கள் என்பதால் அச்சமூகங்களில் வாழும் நாம் பின்பற்ற வேண்டிய குணவியல்புகள் பலவுள்ளன. பிரஜை ஒருவர் என்ற வகையில் அவ்வாறான சமூக வலையமைப்பில் அக்குணவியல்புகளை வெளிப் படுத்தியவாறு வாழ்வதே உங்களிடமிருந்து எதிர் பார்க்கப்படுகின்றது. அவ்வாறான பண்புகள் வருமாறு,


- அனைத்து இன மக்களுக்கும் மதிப்பளித்தல்
- அனைத்து இன மக்களினதும் உரிமைகளைப் பாதுகாத்தல்
- எந்தவொரு இனத்தையும் சமயத்தையும் உயர்வானதாக அல்லது தாழ்வானதாகக் கருதாமை
- அனைத்து சமயங்களினதும் இனங்களினதும் பண்பாட்டு உரிமைகளைப் பாதுகாத்தலும் மதிப்பளித்தலும்
- ஏனையோரின் கொள்கைகள், கருத்துகளை ஏற்றலும் அவற்றிற்குச் செவிசாய்த் தலும்
- தமது கடமைகளை சரிவர நிறைவேற்றுதல்

## பல்பண்பாட்டுச் சமூகத்தின் பண்புகள்

வெவ்வேறு மொழிகளைப் பேசுகின்ற, வெவ்வேறு இனங்கள் வாழ்கின்ற, வெவ்வேறு சமயங்கள் பின்பற்றப்படுகின்ற, வெவ்வேறு மரபுகளைக் கடைப் பிடிக்கப்படுகின்ற சமூகமே பல்கலாசார சமூகம் என இப்போது நீங்கள் புரிந்திருப்பீர்கள். அவ்வகையில் மேலும் அப்பல்பண்பாட்டுப் பண்புகளை வெவ்வேறாக இனங்காண்பதற்கு உங்களுக்குச் சந்தர்ப்பம் கிட்டும்.

### பல்வேறு இனங்கள் ஒருமித்து வாழ்தல்

வெவ்வேறு இனத்தவர்களும் பல்பண்பாட்டுச் சமூகத்தில் வாழ்வர். அவ்வினங்க ளுக்கிடையே சமத்துவமும் ஒற்றுமையும் எதிர்பார்க்கப்படுகின்ற அம்சங்களாகும். அவை பல்பண்பாட்டுச் சமூகத்தின் நிலைபேற்றிற்கு இன்றியமையாதனவாகும். தமது இனம் பற்றிய உணர்வுடன் தமது நாட்டைப் பற்றிச் சிந்தித்து செயற்படுவது கட்டாயமாகும். உதாரணமாக எமது நாட்டில் வாழ்கின்ற சிங்களவர், தமிழர், முஸ்லிம், பறங்கியர் எனும் எல்லா இனத்தவர்களும் இலங்கையர் ஆவர் என்பதைச் சுட்டிக்காட்டலாம்.



உரு 3.4 பல்வேறு இனங்கள்

## பல்வேறு சமயங்களைச் சார்ந்தவர்கள் வாழ்தல்

பல்பண்பாட்டு சமூக அமைப்பின் மற்றுமொரு பண்பு பல்வேறு சமயத்தவர்களும் ஒன்றாக வாழ்வதாகும். தமது சமயத்தைப் போலவே பிற சமயங்களையும் மதித்தல் அவற்றைப் புறக்கணிக்காதிருத்தல், பல்பண்பாட்டுச் சமூகத்தின் நிலைபேற்றிற்கு இன்றியமையாத பண்புகளாக விளங்குகின்றன.



உரு 3.5 பல்வேறு சமய ஸ்தலங்களிலும்
வழிபாட்டில் ஈடுபட்டுள்ள பக்தர்கள்

## பல்வேறு மொழிகளைப் பேசுவோர் வாழ்தல்

பல்வேறு மொழிகளைப் பேசுவோர் வாழ்வது பல்பண்பாட்டுச் சமூகத்தின் மற்றுமொரு இயல்பாகும். தமது மொழியைப் போலவே ஏனைய மொழிகளையும் கற்றுக் கொள்வது பல்கலாசார சமூகத்தின் நிலைபேற்றிற்கு அவசியமாகும்.




உரு 3.6 பல்வேறு மொழிகளுக்குரிய எழுத்துகள் சில

## பல்வேறு பழக்கவழக்கங்கள் நிலவுதல்

பல்பண்பாட்டு சமூகத்தில் வெவ்வேறு சம்பிரதாயங்களும் பழக்க வழக்கங்களும் காணப்படுகின்றன. பல்கலாசார சம்பிரதாயங்களை எதிர்கால சமூகத்திற்கு பாதுகாத்து வழங்குவது பண்பாடாகும். ஒரே சமூகத்தில் பல்வேறு பழக்கவழக்கங்கள், சம்பிரதாயங்கள் என்பன இருக்கலாம். அவற்றை மதித்தல், புறக்கணிக்காதிருத்தல், பாதுகாத்தல், தமது வாழ்க்கைக்கு அவற்றிலிருந்து பெற்றுக் கொள்ளக் கூடியதைப் பெற்றுக் கொள்ளல் என்பன முக்கியமானதாகும்.



உரு 3.7 பல்வேறு பண்பாட்டு மரபுரிமைகள்

## பல்வேறு பண்பாட்டு மரபுரிமைகள் நிலவுதல்

பண்பாடு மரபுரிமைகள் சமூகத்தின் தனித்துவத்தைக் காட்டும் கண்ணாடியாகும். உதாரணமாக பௌத்த பண்பாட்டு மரபுரிமைகளாக விகாரைகள், புத்தர் சிலைகள் காணப்படுகின்றன. பண்பாட்டு மரபுரிமைகளைப் பாதுகாத்து நிலைபெறச் செய்வதன் மூலம் பண்பாடு பற்றிய பெருமையும் அபிமானமும் வெளிப்படும். ஒவ்வொரு பண்பாட்டுக்கும் தனித்துவமான மரபுரிமைகள் காணப்படுகின்றன. அவற்றைப் பாதுகாப்பது, புறக்கணிக்காதிருப்பது போன்ற பண்புகள் பல்பண்பாட்டுச் சமூகத்தின் நிலைபேற்றிற்கு ஏதுவாக அமையும்.



உரு 3.8 பல்வேறு பண்பாட்டு மரபுரிமைகள்

## இலங்கையின் பண்பாட்டுப் பல்வகைமை

இலங்கை பல்பண்பாட்டைக் கொண்ட ஒரு நாடாகும். எமது நாட்டில் பல்வேறு இனங்கள், சமயக் குழுக்கள் போலவே பல்வேறு மொழிகளைப் பேசுவோரும் வாழ்கின்றனர்.

பின்வரும் அட்டவணை எமது நாட்டின் பல்பண்பாட்டுப் பன்மையைப் பிரதிபலிக்கின்றது. (சனத்தொகை 20,359,439)

| இனம் | சனத்தொகை | சதவீதம் | சமயம் | சனத்தொகை | சதவீதம் |
|---|---|---|---|---|---|
| சிங்களவர் | 15,250,081 | 74.9 | பௌத்தம் | 14,272,056 | 70.1 |
| தமிழர் | 2,269,266 | 11.2 | இந்து | 2,561,299 | 12.6 |
| முஸ்லிம்கள் | 1,892,638 | 9.3 | இஸ்லாம் | 1,967,523 | 9.7 |
| இந்தியத் தமிழர் | 839,504 | 4.1 | கத்தோலிக்கம்/ கிறிஸ்தவம் | 1,552,161 | 7.6 |
| பறங்கியர் | 38,293 | 0.2 | | | |
| ஏனையோர் | 106,836 | 0.3 | | | |

மூலம் : குடிசன மதிப்பீடு (2012), சனத்தொகை மதிப்பீட்டுத் திணைக்களம்

தரம் 8 குடியியற் கல்வி பாட ஆசிரியர் மேற்படி அட்டவணையை அவதானித்த பின்னர் மாணவர்களுக்கு செயலட்டை மூலம் பின்வரும் வினாக்களை வழங்கினார்.

- இலங்கையில் வாழும் இனக்குழுக்கள்
- இலங்கையில் காணப்படும் சமயங்கள்

இச்செயலட்டைக்கு ஏற்ப மாணவரிடையே ஏற்பட்ட கலந்துரையாடல் வருமாறு;

அன்சார் : எமது நாட்டில் சிங்களவர், தமிழர், முஸ்லிம், பறங்கியர், மலாயர் எனும் இனத்தவர்கள் வாழ்கின்றனர்.

நர்மதா : அது மட்டுமல்ல பல்வேறு வெளிநாட்டவர்களும் எமது நாட்டில் வசிக்கின்றனர்.

குமார் : பௌத்த, இந்து, இஸ்லாம், கிறிஸ்தவ சமயத்தவர்களும் வாழ்கின்றனர்.

சரத் : ஆம் அது உண்மை. இவை தவிர்ந்த வேறு சமயத்தவர்களும் இருக்கலாம்

ஜானகி : சிங்களம், தமிழ், ஆங்கிலம், பேசுபவர்களும் வாழ்கின்றனர்.

அன்சார் : இலங்கை பன்மத, பல்சமய, பலமொழிகள் பேசுகின்ற குழுக்களைக் கொண்ட நாடாகும். எனவே, இது பல்பண்பாட்டைக் கொண்ட ஒரு நாடாகும்.

நர்மதா : இலங்கையின் பண்பாட்டுப் பல்வகைமையை மொழி, சமயம், மரபுரிமை, பண்பாடு எனும் அடிப்படையில் விளக்கலாம்.

குமார் : இந்த அட்டவணைப்படி என்னால் மற்றுமொரு கருத்தினை முன் வைக்க முடியும். ஒரு இனத்தைச் சேர்ந்தவர்கள் மற்றுமொரு சமயத்தைப் பின்பற்றுபவர்களாக இருக்கலாம். தமிழர்கள் இந்து சமயத்தைச் சேர்ந்தவர்களாகவோ அல்லது கிறிஸ்தவர்களாகவோ இருக்கலாம். அவ்வாறே சிங்களவர்கள் பௌத்தர்களாகவோ அல்லது கிறிஸ்தவர்களாகவோ இருக்கலாம்.

### செயற்பாடு 3.2

- இலங்கையில் எல்லா சமயத்தவர்களாலும் புனிதமாகக் கருதப்படும் இடங்களின் பெயர்களைக் குறிப்பிடுக
- பல்பண்பாட்டுச் சமூகத்தின் பிரஜை எனும் வகையில் எமது கடமைகள் மூன்றைக் குறிப்பிடுக.

## பல்வேறு பண்பாட்டு சம்பிரதாயங்கள், பழக்க வழக்கங்கள், விழாக்கள்

பல்பண்பாட்டு நாடு என்ற வகையில் இலங்கையில் கலாசாரப் பல்வகைமை காணப் படுகிறது. அப்பண்பாடுகளுடன் தொடர்புடைய தலங்கள் பலவும் காணப்படுகின்றன.

உதாரணமாக :- தலதா மாளிகை, ஸ்ரீ மகாபோதி, கதிர்காமக் கோயில், திருக் கோணேஸ்வரம் கோயில், மடு தேவாலயம், தவட்டகஹ பள்ளிவாசல் முதலியன

இவை தவிர பல்வேறு பண்பாடுகளைப் பிரதிபலிக்கும் திருமணச் சடங்குகள், சமய விழாக்கள் போன்றவற்றையும் பண்பாட்டு அம்சங்களாகச் சுட்டிக்காட்டலாம்.

## பல்வேறு இனங்களுக்கான பண்பாடுகள், பழக்கவழக்கங்கள்

பல்பண்பாட்டு நாடென்ற வகையில் இலங்கையில் சிங்களவர், தமிழர், முஸ்லிம் எனும் பிரதான இனத்தவர்கள் வாழ்கின்றனர். அவ்வினங்களுக்கே உரிய பண்பாடுகள் பலவும் காணப்படுகின்றன. குழந்தை தாயின் வயிற்றில் உருவானது முதல் முதுமையடைந்து மரணிக்கும் வரை பல்வேறு பழக்க வழக்கங்கள் கடைப்பிடிக்கப்படுகின்றன.

நல்லவற்றை ஏற்றுக் கொள்வதும் தீயவற்றை தவிர்த்துக் கொள்வதுமே பண்பாடாகும்.

## பல்வேறு சமயங்களுக்குமுரிய பண்பாடுகள், வழக்கங்கள், விழாக்கள் மற்றும் அவற்றின் முக்கியத்துவம்

பல்பண்பாட்டினைக் கொண்ட, நாடென்ற வகையில் உலகின் பிரதான சமயங்கள் நான்கும் இலங்கையில் காணப்படுகின்றன. அவை பௌத்தம், இந்து, இஸ்லாம், கத்தோலிக்கம், கிறிஸ்தவம் என்பனவாகும். இச்சமயங்களுக்குரிய பண்பாடுகள், பழக்கவழக்கங்கள், விழாக்கள் என்று பல்வேறு அம்சங்களும் நிலைத்துள்ளன. அவற்றின் பெறுமதி பற்றிய விளக்கத்தைப் படங்களை அவதானிப்பதன் மூலம் நீங்கள் பெற்றுக் கொள்ளலாம்.

இலங்கையின் பிரதான பண்பாடு சமயத்தை அடிப்படையாகக் கொண்டு வளர்ச்சியடைந்துள்ளது. அந்தப் பண்பாட்டுக்கு உரிய பழக்கவழக்கங்கள், விழாக்கள் என்பன பெரும்பாலும் சமய நோக்கத்தை முன்வைத்துக் கட்டியெழுப்பப்பட்டுள்ளன. பின்வரும் விடயங்கள் எமது நாட்டில் சமயத்தை அடிப்படையாகக் கொண்டு கட்டியெழுப்பப்பட்ட பண்பாட்டம்சங்களாகும்.

- பௌத்த கலாசாரம்
- இந்து கலாசாரம்
- கிறிஸ்தவ / கத்தோலிக்க கலாசாரம்
- இஸ்லாமிய கலாசாரம்

### பௌத்த கலாசாரம்

பௌத்தர்கள் தமது வாழ்க்கையை சிறப்பாக முன்னெடுப்பதற்காக பௌத்த கொள்கைகளைக் கடைப்பிடிக்கின்றனர். புத்த பெருமானின் தர்மத்தின் ஊடாக சிறந்த வாழ்க்கை முறை ஒன்றைப் போலவே ஆன்மிக விமோசனத்தைப் பெறுவதற்கும் அது வழிகாட்டுகின்றது. பஞ்சசீலம் என்பது பக்தர்கள் நித்தம் கடைப் பிடிக்க வேண்டிய ஐந்து ஒழுக்கங்களாகும். புத்தபெருமானின் குணப்பண்புகளை ஞாபகப் படுத்தி காலை, மாலை வேளைகளில் அவரை வணங்கி வழிபடுவது பௌத்தர்களின் வழக்கமாகும். குழந்தையொன்று தாயின் வயிற்றில் கருக் கொண்டது முதல் அது பிறந்து வளர்ந்து மரணிக்கும் வரையிலான ஒவ்வொரு கட்டமும் பௌத்த கலாசாரத்தடன் பின்னிப் பிணைந்துள்ளது.



உரு 3.9



உரு 3.10

## பௌத்தர்களின் பிரதான சமய விழாக்கள் மூன்று வருமாறு,

- வெசக் வைபவம்
- பொசொன் வைபவம்
- எசல வைபவம்

புத்த பெருமானின் பிறப்பு, ஞானம்பெறல், பரிநிர்வாணமடைதல் எனும் மூன்று சந்தர்ப்பங்களையும் நினைவூட்டும் வெசக் தினம் பௌத்தர்களுக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இலங்கைக்கு பௌத்த சமயத்தை அறிமுகப்படுத்திய மகிந்த தேரரும் அவரது குழுவினரும் வருகை தந்த தினமாகப் பொசொன் தினம் கருதப்படுகிறது. எனவே இலங்கை வாழ் பௌத்தர்களால் பொசொன் தினம் சிறப்பாக அனுஷ்டிக்கப்படுகிறது.

சித்தார்த்தர் இல்லறத்தைத் துறந்து ஞானம் பெற்ற பின் புரிந்த முதலாவது உபதேசம் எசல பௌர்ணமி தினத்திலென்பது பௌத்தர்களின் நம்பிக்கையாகும். எனவே அவர்கள் தமது சமய விழாக்களுள் எசல வைபவத்துக்கும் முக்கியத்துவமளிக்கின்றனர்.

ஆன்மிகக் கொள்கை ரீதியான பூசைகளுக்கு முதலிடம் வழங்கி சீலம் அனுஷ்டித்தல், நோயாளர்களைப் பராமரித்தல், தர்ம உபதேசங்களை ஏற்பாடு செய்தல், தானம் வழங்குதல், தோரணங்கள் அமைத்தல் போன்றவற்றை இவ்விழாக்களின்போது பொதுவாகக் காணலாம். இவை தவிர ஒவ்வொரு மாத பௌர்ணமி தினத்திலும் சீலம் அனுஷ்டித்தல், தியானத்தில் ஈடுபடுதல் மற்றும் வேறு புண்ணிய கருமங்களை ஏற்பாடு செய்தல் போன்ற நிகழ்வுகளையும் காணக்கூடியதாக இருக்கும்.

ஒருவரைக் கௌரவப்படுத்தும் போதும் வாழ்த்துத் தெரிவிக்கும் போதும் புத்தர் சரணம், மும்மணிகள் சரணம் முதலிய தொடர்களை உச்சரிப்பதை இன்றைய சமூகவலையமைப்பிலும் அதிகம் காணமுடிகின்றது. இது பௌத்த கலாசாரத்தை பின்பற்றுவோரின் சிறந்த பண்பாகும்.

## இந்து கலாசாரம்

தமிழர்கள் பெரும்பான்மையாக இந்து சமயத்தைப் பின்பற்றுவதுடன் அச்சமயக் கிரியைகளிலும் ஈடுபடுவர். இந்து சமயத்தவர்கள் தமது அன்றாடக் கடமைகளைக் கூட தெய்வ வழிபாட்டின் பின்னரே ஆரம்பிப்பர்.



உரு 3.11

### இந்து சமயத்தோடு தொடர்புடைய கலாசார நிகழ்வுகள் பின்வருமாறு

- தைப்பொங்கல் பண்டிகை
- தீபாவளிப் பண்டிகை
- மகா சிவராத்திரி



உரு 3.12 தைப்பொங்கல் விழா

எமது நாட்டில் வாழும் இந்துக்கள் தமது வாழ்க்கையின் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் சமயக் கிரியைகளைச் செய்கின்றனர். தாயின் வயிற்றில் குழந்தை கருக்கொண்ட பின்னரும் அது பிறந்த பின்னர் பெயர் சூட்டும் போதும் சமய ரீதியான சடங்குகளைச் செய்வது வழக்கம். திருமண வைபவங்களின் போது மட்டுமன்றி மரணச் சடங்குகளின் போதும் சமயத்தோடு தொடர்பான கிரியைகளை மேற்கொள்வர்.

### கிறிஸ்தவ / கத்தோலிக்கக் கலாசாரம்

கிறிஸ்தவ / கத்தோலிக்க மக்களால் இரண்டு பிரதான சமய நிகழ்வுகள் நடாத்தப்படுகின்றன.

- நத்தார் பண்டிகை
- பாஸ்கா நிகழ்வு



உரு 3.12



உரு 3.13 நத்தார் பண்டிகை

இயேசு நாதரின் பிறப்பை நினைவுகூர்ந்து ஒவ்வொரு வருடமும் டிசெம்பர் மாதம் 25 ஆம் திகதி நத்தார் அல்லது கிறிஸ்மஸ் பண்டிகை கொண்டாடப்படும். இயேசுவை சிலுவையில் அறைந்த நிகழ்வை நினைவூட்டும் வகையில் பெரிய வெள்ளியும் மீண்டும் உயிர் பெற்றதை நினைவூட்டுவதற்கு உயிர்த்த ஞாயிறு தினத்தில் பாஸ்கா வழிபாடும் மேற்கொள்ளப்படுகிறது.

எல்லாக் கிறிஸ்தவர்களும் தமது பிள்ளைகளை ஞானஸ்தானம் செய்வித்துக் கடவுளின் குழந்தைகளாகச் செய்வது பிரதான சமய நிகழ்வாகும். திருமண ஒப்பந்தம் செய்தல் மற்றும் திருமண சடங்குகள் கிறிஸ்தவ ஆலயங்களிலே நிகழ்த்தப்படும். கிறிஸ்தவர் ஒருவர் மரணித்தால் அவரின் ஆத்மாவிற்காக பிரார்த்தனை செய்தல், அடக்கம் செய்தல் என்பனவும் கிறிஸ்தவ / கத்தோலிக்க சமய கலாசாரப்படியே நிகழ்த்தப்படும்.

அதேபோன்று ஒவ்வொரு நாளையும் ஒவ்வொரு காரியத்தையும் ஆரம்பிக்கும்போது இறைவனை நினைவு கூர்வது கிறிஸ்தவரின் வழக்கமாகும்.

## இஸ்லாமிய கலாசாரம்

இஸ்லாம் சமயத்தைப் பின்பற்றும் முஸ்லிம் மக்கள் மூன்று கலாசார வைபவங்களை அனுஷ்டிப்பது வழக்கம்

- மீலாதுன்நபி விழா
- நோன்புப் பெருநாள்
- ஹஜ்ஜுப் பெருநாள்



உரு 3.14 நோன்புப் பெருநாள்

முகம்மது நபி அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு மீலாதுன்நபி விழா கொண்டாடப் படுகிறது.

ரமழான் மாதத்தில் முப்பது நாட்கள் பகல் பொழுதுகளில் உண்ணாது, பருகாது நோன்பிருந்து அக்காலம் நிறைவுற்றதும் கொண்டாடப்படும் பண்டிகையே நோன்புப் பெருநாளாகும்.



உரு 3.15 ஹஜ்ஜுப் பெருநாள்

முஸ்லிம்கள் புனித பூமியாகிய மக்காவில் அமைந்துள்ள கஃபா எனும் இறையில்லத்தை தரிசிப்பர். ஒவ்வொரு துல்ஹஜ் மாதத்தினதும் 10ஆம் நாளில் ஹஜ்ஜுப் பெருநாள் கொண்டாடப்படும். ஹஜ் யாத்திரைக்காக எமது நாட்டிலிருந்தும் அதிகளவானோர் மக்காவிற்கு யாத்திரைக்காகச் செல்வது வழக்கம். அவ்வாறு செல்லாதவர்கள் தாம் வாழுமிடங்களில் உள்ள பள்ளிவாயில்களில் ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகையில் ஈடுபட்டு ஹஜ்ஜுப் பெருநாளைக் கொண்டாடுவர்.

தமது வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் இஸ்லாமிய கலாசாரப் பண்புகளை வெளிக்காட்டும் வகையில் செயற்படுவது முஸ்லிம்களின் வழக்கமாகும். குழந்தை தாயின் வயிற்றில் கருக்கொண்டது முதல் பிறந்து வளர்ந்து மரணித்த பின்னரும் அவ்வாறான சமய ரீதியிலான நிகழ்வுகள் மேற்கொள்ளப்படும். குழந்தையின் பிறப்பு, திருமண நிகழ்வு, மரணச் சடங்கு என அனைத்தும் இஸ்லாமிய முறைப்படி நிகழ்த்தப்படும்.

**செயற்பாடு 3.3**

- உமது பிரதேசத்தில் அல்லது மற்றுமோரிடத்தில் மாற்று இனத்தவரின் அல்லது சமயத்தவரின் தலமொன்றைப் பார்வையிடுவதற்கான களப் பயணத்தை ஏற்பாடு செய்யவும். இதற்காகப் பாட ஆசிரியரின் ஆலோசனை, வழிகாட்டல்களைப் பெற்றுக் கொள்ளவும். பின்வரும் செயலட்டையை அதன் போது பயன்படுத்தவும்.

  (உதாரணமாக: கண்டி தலதாமாளிகை, மடுமாதா கோயில், நல்லூர் கோயில், சம்மாங் கோட்டுப் பள்ளிவாசல்)
- களப் பயணத்தின் நோக்கம்
- அங்கு பார்வையிடும் அம்சங்கள்
- பண்பாட்டு அம்சங்கள்
- பண்பாட்டு அம்சங்களை அவதானித்தும் கருத்துப் பரிமாறியும் நீர் பெற்ற அனுபவம்

## பல்பண்பாடு நிலவும் வேறு நாடுகள்

உலகின் எல்லா நாடுகளும் பல்பண்பாட்டு அம்சங்கள் உள்ள நாடுகளென்பதை நீங்கள் அறிவீர்கள். அவற்றுள் இந்தியா, ஐக்கிய அமெரிக்கா எனும் இரு நாடுகளினதும் பல்பண்பாட்டு அம்சங்கள், இயல்புகள் பற்றிக் கலந்துரையாடுவோம்.

### இந்தியா

உலகிலுள்ள பல்பண்பாட்டு சமூகங்களைக் கொண்ட நாடுகளில் இந்தியா சிறப்பான இடத்தினை வகிக்கிறது. மிகப் பழங்காலத்தொட்டு பல்பண்பாட்டினையுடைய இந்திய மக்கள் ஒத்துழைப்புடன் செயற்படுவது சிறப்பம்சமாகும். இந்தியா மதச் சார்பற்ற நாடாக இருப்பது இதற்கான ஒரு காரணமாகும்.

பின்வரும் அட்டவணையில் இந்தியாவின் இன, மொழி, சமயப் பிரிவினர்களுள் ஒரு பகுதியினர் சுட்டிக்காட்டப்படுகின்றனர். இதன்மூலம் இந்தியாவின் பல்கலாசாரப் பண்பாட்டுத் தன்மையை அறிந்து கொள்ள முடியும்.

| இனம் | மொழி | சமயம் |
|---|---|---|
| தமிழர், வங்காளியர், முஸ்லிம், சீக்கியர் மலையாளிகள், தெலுங்கர், மராட்டியர், முன்டா, சக்மா | ஹிந்தி, உருது, தமிழ், மராட்டி, பஞ்சாபி, தெலுங்கு, ஆங்கிலம், மலையாளம், குஜராத்தி, கன்னடம், சமஸ்கிருதம் | இந்து, கிறிஸ்தவம், இஸ்லாம், பௌத்தம், சீக்கியம், ஜைனிசம் |

பல்பண்பாட்டுப் பண்புடைய நாடென்ற வகையில் இந்தியா செயற்படுவதற்காக அங்கு மேற்கொள்ளப்பட்டுள்ள செயற்பாடுகள் சில பின்வருமாறு

- அனைத்து இனங்கள், சமயங்கள், மொழிகள் ஆகியன சமமாக மதிக்கப்படுகின்றமை
- அரசகரும மொழியாக இந்தியும் இணைப்பு மொழியாக ஆங்கிலமும் நடைமுறைப்படுத்தப்படுகின்றமை
- ஒவ்வொரு பிரஜையும் அரசகரும மொழி தவிர்ந்த வேறு மொழியொன்றைத் தெரிந்திருத்தல்
- தமது சமயத்தைப் பின்பற்றும் உரிமையையும் சுதந்திரத்தையும் பாதுகாப்பதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டிருத்தல்



உரு 3.16 இந்திய உபகண்டம்

அதிகளவிலான இனக்குழுக்கள், சமயக்குழுக்கள், மொழிக்குழுக்கள் என்பவற்றைக் கொண்டிருந்த போதிலும் இந்தியா இன்று அபிவிருத்தியில் முன்னணி வகிக்கின்றது. இங்குள்ள பிரசைகள் தமது இனம், சமயம், மொழி என்பவற்றுக்கு அப்பால் இந்தியர் எனும் உணர்வுடன் தமது நாட்டுக்கு முதலிடம் கொடுத்துச் செயற்படுவதால் உலகின் பலம்மிக்க நாடாக இந்தியா உருவாகி வருகிறது.

## பல்பண்பாடு கொண்ட நாடென்ற வகையில் ஐக்கிய அமெரிக்கா

ஐக்கிய அமெரிக்காவில் பல்வேறு இன மொழி, சமயம் என்பனவற்றைச் சேர்ந்த ஏராளமான மக்கள் வாழ்கின்றனர். உலகின் பல்வேறு நாடுகளிலிருந்து புலம்பெயர்ந்தோர் இங்கு வந்து குடியேறியுள்ளதால் பல்பண்பாட்டு சமூகம் இங்கு உருவாகியுள்ளது. பல்பண்பாட்டு நாடாக அமெரிக்க ஒற்றுமையுடன் செயற்படுவதால் தற்போது அது உலகின் வல்லரசு நாடுகளில் ஒன்றாக உள்ளது. ஐக்கிய அமெரிக்க அந்நாட்டின் பல்பண்பாட்டுத் தன்மையைக் காட்டும் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன. இதனை நன்கு அவதானிக்கவும்.




உரு 3.17

| இனக்குழுக்கள் | மொழிகள் | சமயங்கள் |
|---|---|---|
| வெள்ளையர், கறுப்பர், ஆசியர், செவ்விந்தியர், அலாஸ்காவினர், ஹவாய் தீவினர், பசுபிக் வலயத்தினர் | ஆங்கிலம், ஸ்பானியமொழி, சமோன் மொழி, கமறுமொழி, கரோகி மொழி, ஹவாய் மொழி | உரோமன் கத்தோலிக்கம், புரட்டஸ்தாந்து, இஸ்லாம், பௌத்தம், இந்து, யூதம் |

பல்பண்பாடு கொண்ட நாடொன்றாகப் பரிணமிப்பதற்கு ஐக்கிய அமெரிக்கா பின்பற்றுகின்ற செயற்பாடுகள்,

- ஆங்கிலத்தை அரசகரும மொழியாக ஏற்றுக் கொண்டமை
- எந்தவொரு சமயத்தையும் அரச சமயமாக அங்கீகரிக்காமை
- எல்லாப் பிரஜைகளுக்கும் சமவுரிமை வழங்கப்பட்டுள்ளமை
- ஜனநாயகத்தை ஏற்று அதற்கேற்ப செயற்படுதல்

### பண்பாட்டுத் தனித்துவம்

ஒவ்வொரு இன, சமய, மொழிக் குழுவிற்கும் தமக்கென தனியான பண்பாடு நிலவுகின்றது. அந்த தனித்துவம் மூலமே ஒரு பண்பாடு மற்றைய பண்பாட்டிலிருந்து வேறுபடுகிறது. ஒவ்வொரு குழுவும் தமது தனித்துவத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்குப் பாடுபடுகின்றது.

### நமது பண்பாட்டுத் தனித்துவம்

நம் அனைவருக்கும் தனிப்பட்ட பண்பாடுகள் உள்ளன. அதுவே பண்பாட்டுத் தனித்துவமாகும். தனித்துவத்தைப் பாதுகாத்துக் கொள்வது நமது கடமையாகும். சிங்களவர், தமிழர், முஸ்லிம் ஆகிய எல்லா இனத்தவரும் தமது பண்பாட்டுத் தனித்துவத்தைப் பாதுகாப்பதை உதாரணமாகக் குறிப்பிடலாம். தமது பண்பாட்டுத் தனித்துவத்தைப் பாதுகாப்பதும் அதனைப் பிற்கால சந்ததியினருக்கு அளிப்பதும் பிரஜைகளின் கடமையாகும்.

### பண்பாட்டுத் தனித்துவமும் இன ஒற்றுமையும்

தமது பண்பாட்டுத் தனித்துவத்தைப் பாதுகாத்துக் கொள்வது ஒவ்வொரு இனக் குழுவினதும் கடமையாகும். அதேபோன்று ஏனைய பண்பாட்டுத் தனித்துவங்களை பாதுகாப்பதும் அதன் அம்சங்களைப் பாதுகாப்பதும் எமது கடமையாகும். அப்போது இனங்களிடையே ஒற்றுமை ஏற்படும். நாட்டின் தேசிய ஒற்றுமை என்பது ஒவ்வொரு இனக்குழுவும் தமது பண்பாட்டுத் தனித்துவத்தைப் பாதுகாப்பதுடன் தேசிய ரீதியில் ஒற்றுமையுடன் செயற்படுவதும் ஆகும். ஒரு நாட்டின் எல்லாக் கலாசாரங்களினதும் ஒருமைப்பாடே அந்நாட்டின் தேசிய பண்பாடாகும். அத்தேசிய பண்பாட்டை வளர்ப்பது ஒற்றுமைக்கான வழியாக அமையும்.

பல்பண்பாட்டுச் சமூகத்தின் பிரஜை என்ற வகையில் செயற்படும்போது அந்நிய பண்பாடுகளுக்கு மதிப்பளிப்பது கட்டாயமாகும். நமது பண்பாட்டைப் போலவே மற்றையோரின் பண்பாடுகளைப் பாதுகாப்பதும் அவர்களின் தனித்துவத்திற்கு பாதிப்பேற்படுத்தாத வகையில் செயற்படுவதும் நமது கடமையாகும். அப்போது தான் தேசிய ஒற்றுமை ஏற்படும். நாட்டில் நிலையான சமாதானம் ஏற்படும்.

### தமது கலாசார தனித்துவத்தைப் பாதுகாத்து தேசிய ஒற்றுமையையும் நிலையான சமாதானத்தையும் ஏற்படுத்துவதன் முக்கியத்துவம்

தமது பண்பாட்டுத் தனித்துவத்தைப் பேணி, தேசிய மட்டத்தில் செயற்படும்போது நல்லிணக்கம் ஏற்படுவதோடு. ஓர் இனக்குழு அடுத்த குழுவினரை சந்தேகக் கண்ணோடு பார்க்க மாட்டார்கள். அந்நிலையில் அவர்களிடையே நல்லிணக்கம், நம்பிக்கை, புரிந்துணர்வு என்பன கட்டியெழுப்பப்படும். ஒரு நாட்டில் வாழும் இனத்தவர்கள் ஒற்றுமையுடன் செயற்படும்போதே அந்நாட்டில் அபிவிருத்தி ஏற்படும்.


உரு 3.17

இனம், மதம், மொழி எனும் குறுகிய மனப்பான்மையுடன் செயற்படாது தேசிய உணர்வுடன் செயற்படுவதற்கு சிறு வயதிலிருந்தே நீங்கள் தயாராக வேண்டும். அதனாலேயே இவ்விடயங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன.

- ஒருவரையொருவர் புரிந்து கொள்வதால் முரண்பாடுகள் குறைவடையும்.
- இனங்களிடையே ஒற்றுமை உறுதிப்படுத்தப்படும்
- நாட்டை அபிவிருத்தி செய்வதற்கு அனைவரினதும் பங்களிப்பு கிடைக்கும்

- ஒற்றுமையாகவும் இணக்கமாகவும் செயற்படுவதற்குத் தூண்டப்படுவர்
- பயனுடைய பொருளாதார நடவடிக்கைகள் மூலமாக நாட்டின் அபிவிருத்தியில் பங்களிப்பு நல்குதல்
- பண்பாட்டுப் பல்வகைமையை மதித்து ஒவ்வொருவரினதும் கடமை, பொறுப் புக்களை நிறைவேற்றல்
- நிலையான சமாதானத்தை நிலைபெறச் செய்தல்



உரு 3.18

**செயற்பாடு 3.4**

- ''பண்பாட்டைப் பாதுகாப்பதன் முக்கியத்துவம்'' எனும் தலைப்பில் சுவர்ப்பத்திரிகைக்கு ஒரு கட்டுரை எழுதுக.
- அதில் குறைபாடு காணப்படின் பாட ஆசிரியரிடம் கூறி திருத்திக் கொள்ளுங்கள்.
- உமது கட்டுரையை சுவர்ப் பத்திரிகையில் காட்சிப்படுத்துக.

**பொழிப்பு**

⇨ சமூகத்தை இயக்கும் பிரதான விசையே பண்பாடாகும்.

⇨ பல்வேறு பண்பாட்டு இயல்புகளை கொண்ட சமுகம் பல்பண்பாட்டு சமுகம் எனப்படும்.

⇨ உலகில் பல பல் பண்பாட்டுச் சமுகங்கள் காணப்படுகின்றன.

⇨ பல்பண்பாட்டு சமுகங்களில் பல்வேறுபட்ட இனக்குழுக்கள், பல்வேறுபட்ட சமயங்களைப் பின்பற்றும் மக்கள் குழுக்கள், பல்வேறு மொழிகளைப் பேசும் மக்கள் குழுக்கள் ஆகியன வாழும்.

⇨ அவ்வாறான சமுகத்தில் பல்வேறு பழக்கவழக்கங்கள் பல்வேறு கலாசார மரபுரிமைகள் ஆகியன காணப்படும்.

⇨ பல்பண்பாட்டுச் சமுகத்தில் வாழும் எல்லோரும் தமது கலாசார அடையாளங் களைப் பாதுகாப்பதோடு தேசிய ஒற்றுமை, நிலைபேறான சமாதானம் ஆகியவற்றைக் கட்டியெழுப்புவது மிகவும் முக்கியமானதாகும்.

# 04 சமகாலப் பிரச்சினைகள்

## அறிமுகம்

*சமூகத்தின் நிலையான பாதுகாப்புக்குச் சவாலாக இருக்கும் முக்கிய நிகழ்வுகளாக இயற்கை அனர்த்தங்கள், விபத்துகள் மற்றும் முறையற்ற மனித பழக்கங்கள் என்பவற்றைக் குறிப்பிடலாம். சூழற்றொகுதியில் அனர்த்தங்கள் நிகழ்வது சாதாரண ஒரு நிகழ்வே. அவை இயற்கைச் சூழற் தொகுதியின் சமநிலைக்கும் காரணமாக அமைகின்றன. எனினும், மனிதனின் முறையற்ற செயற்பாடுகளால் தற்பொழுது இவ் அனர்த்தங்கள் அதிகரித்துக் காணப்படுகின்றமை சூழலுக்கு மாத்திரமன்றி மனித இருப்பிற்கும் பாரிய அச்சுறுத்தலாக அமைந்துள்ளது.*

**இந்த அத்தியாயத்தைக் கற்பதனால் உங்களால்,**

- *அனர்த்தங்கள், விபத்துகள் ஏற்படக் கூடிய விதம் பற்றியும்*
- *அந்த அனர்த்தங்களையும் விபத்துகளையும் குறைத்துக்கொள்வதற்கான நடவடிக்கைகள் தொடர்பாகவும்*
- *அனர்த்த முகாமைத்துவத்திற்கு உதவக்கூடிய வேறுபட்ட நிறுவனங்கள் பற்றியும்*
- *கழிவு முகாமைத்துவம் பற்றியும்*
- *தவறான பழக்கங்கள், முறையற்ற மருந்துப் பாவனை ஆகியவற்றால் ஏற்படும் ஆபத்துகளைத் தவிர்க்கவும்*
- *பேண்தகு வாழ்க்கைக் கோலத்துக்கு இசைவாக நிலைத்துநிற்கும் அபிவிருத் திக்குப் பங்களிப்பு செய்யத் தேவையான அறிவு, திறன், மனப்பாங்கு ஆகியவற்றை விருத்தி செய்யத் தேவையான பின்னணியை உருவாக்கவும்*


**முடியுமாக இருக்கும்.**

மனித நாகரிக வளர்ச்சியின் ஆரம்பம் முதல் இன்று வரை வெவ்வேறு சந்தர்ப்பங்களில் மனித வாழ்க்கைக்குச் சவாலாக அமையும் பல்வேறு நிகழ்வுகளுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளது. இன்றைய சமுதாயத்தில் வாழும் மனிதனுக்கு இவை பாரிய சவால்களாகக் காணப்படுகின்றன. எமது வாழ்க்கையைப் பாதுகாப்பாக முன்னெடுத்துச் செல்ல வேண்டுமாயின், இப்பிரச்சினைகளை நன்றாக இனங்கண்டு அவற்றினால் ஏற்படும் பாதிப்புகளைக் குறைத்துக் கொள்ளவும் அனர்த்தங்களிலிருந்து பாதுகாப்புப் பெறவும் எம்மால் இயலும்.

தற்காலத்தில் நாம் எதிர்கொள்ளும் அனர்த்தங்கள் மற்றும் விபத்துகளின் தன்மைக்கு ஏற்ப அவற்றை இரண்டு பிரதான பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

1. இயற்கை அனர்த்தங்கள்

2. மனிதச் செயற்பாடுகள் காரணமாக ஏற்படும் அனர்த்தங்கள்




## இயற்கை அனர்த்தங்கள்

புவியிலும் அதன் அயற்சூழலிழும் இயற்கையின் சீற்றத்தால் ஏற்படும் பாதிப்பான நிலையே இயற்கை அனர்த்தமாகும். மனிதத் தலையீடின்றி இயற்கைச் சூழலில் நிகழும் பல்வேறு மாற்றங்களினால் இயற்கையாக ஏற்படும் செயற்பாட்டால் மனிதனுக்கும் அவனது சொத்துகளுக்கும் பாதிப்புகள் ஏற்படுமாயின், அவற்றை இயற்கை அனர்த்தங்கள் எனலாம்.

இவை இரு பிரதான பிரிவுகளாகப் பிரிக்கப்படுகின்றன.

01. புவியினுள் நிகழும் பௌதிகச் செயற்பாடுகள்

(உ+ம்:- சுனாமி, புவியதிர்வு, புவியசைவு, நிலச்சரிவு)

02. காலநிலை மற்றும் வானிலையால் ஏற்படும் மாற்றங்கள்

(உ+ம்:- வெள்ளப்பெருக்கு, வறட்சி, சூறாவளி, இடி மின்னல், காட்டுத்தீ, எல்னினோ, லானினோ போன்றன)

## வெள்ளப்பெருக்கு


உரு 4.1 பாரிய வெள்ள அனர்த்தம்

அதிக மழைவீழ்ச்சி மற்றும் ஆற்றுப் பெருக்கு என்பன வெள்ளப் பெருக்கு ஏற்படுவதற்கான இயற்கைக் காரணிகளாகும். இவை தவிர முறையற்ற ரீதியிலான நகர அபிவிருத்தி, வடிகாலமைப்பு முறைகளின் சீரற்ற தன்மை, நதிகளின் இரு கரைகளிலும் அத்துமீறிய வகையில் கட்டடங்களை அமைத்தல், சேரிகள் உருவாதல், குப்பை கூளங்களை நீர்நிலைகளில் இடுதல் போன்ற மனித நடவடிக்கைகள் வெள்ளப் பெருக்கிற்கான காரணங்களாகும். இலங்கை, ஆண்டு முழுதும் மழை வீழ்ச்சியைப் பெறும் ஒரு நாடாக விளங்குகிறது. இலங்கையின் பல்வேறு பகுதிகளில் வெள்ளப் பெருக்கு ஏற்படுவது பாரிய பிரச்சினையாக உள்ளது. வெள்ளப் பெருக்கு இயற்கை நிகழ்வாக இருந்த போதிலும் மனித நடவடிக்கைகளும் அதில் பாரியளவு செல்வாக்குச் செலுத்துகின்றன.

## வெள்ளப்பெருக்கு ஏற்பட காரணமான மனிதச் செயற்பாடுகள்

- காடுகள் அழிக்கப்படுதல்
- ஆறுகளில் மணல் அகழ்தல்
- உக்கலடையாத பொருட்களை முறையற்றவாறு இடுதல்
- சதுப்பு நிலங்களில் மண் நிரப்புதல்
- சுரங்க அகழ்வுகளை மேற்கொள்ளல்
- ஆற்றங்கரைகளில் கட்டடங்களை அமைத்தல்


உரு 4.2 ஆற்றிலிருந்து மணல் அகழ்தல்

## வெள்ளப்பெருக்கால் ஏற்படும் பாதிப்புகளைக் குறைப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள்

- வெள்ள நீரிலிருந்து விலகி பாதுகாப்பான பகுதிகளுக்கு விரைவாகச் செல்லல்
- வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நடந்தோ, வாகனங்களிலோ செல்லாதிருத்தல்
- கீழே விழுந்துள்ள மின்சாரக் கம்பங்களுக்கு அருகில் செல்லாதிருத்தல்
- வெள்ளப் பாதிப்புக்குள்ளான உணவுப் பொருட்களை உட்கொள்ளாதிருத்தல்,
- வெள்ள நீரைப் பயன்படுத்தாதிருத்தல்
- உரிய நிறுவனங்களால் வழங்கப்படும் அறிவுறுத்தல்களைப் பின்பற்றுதல்

உ+ம்:-
- அனர்த்த முகாமைத்துவ நிலையம்
- வளிமண்டலவியல் திணைக்களம்
- பொலிஸ் நிலையம்
- உள்ளூராட்சி நிறுவனங்கள்

மனிதச் செயற்பாடுகளுக்கு மேலதிகமாக இயற்கைக் காரணங்களினாலும் வெள்ளப் பெருக்கு ஏற்படும்.

உ+ம்:- கழிமுகம் தடைப்படும்போது வெள்ளப்பெருக்கு ஏற்படல் (களுகங்கை)

## சூறாவளி

அயனக் காலநிலை வலயங்களில் மிக வேகமாக உருவாகி பாதகமான விளைவுளை ஏற்படுத்தக் கூடிய காற்றே சூறாவளி எனப்படும். இது வளிமண்டலத்தில் தாழமுக்கத்தைக் கொண்ட பிரதேசத்தை மையமாகக் கொண்டு உருவாகும். இடஞ் சுழியாக (இடப்பக்கம்) அல்லது வலஞ் சுழியாக (வலப்பக்கம்) சுழலும் காற்றுத் தொகுதியாக இது உருவாகின்றது. காற்றின் வேகம் மணிக்கு 350 - 400 கிலோ மீற்றரைத் தாண்டும் சந்தர்ப்பங்களும் உண்டு. இக்காற்றுடன் பலத்த மழையும் பெய்யும். இவ்வாறு ஏற்படும் வேகமான காற்று மற்றும் மழை காரணமாக, உயிரிழப்புகள் ஏற்படுவதுடன், சொத்துகளும் சேதத்திற்குள்ளாகும். 1978ம் ஆண்டு நவம்பர் மாதம் 24 ஆம் திகதி இலங்கையில் ஏற்பட்ட சூறாவளி காரணமாக 900 பேர் உயிரிழந்ததுடன், சொத்துகளும் பலத்த சேதத்திற்குள்ளாகின.



உரு 4.3

## சூறாவளி வீசும்போது மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு முறைகள்

வளிமண்டலவியல் திணைக்களம் ஊடகங்கள் வாயிலாக அபாய அறிவிப்புகளை வழங்கும். அவ்வாறான அறிவித்தல்கள் வழங்கப்படுகையில் நாம் செய்ய வேண்டியவை,

- ஆபத்தான இடங்களிலிருந்து வெளியேறுதல்
- பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுதல்
- இலகுவான மற்றும் அத்தியாவசியமானவற்றை மாத்திரம் எடுத்துச் செல்லல்

உ+ம்:- தண்ணீர்ப் போத்தல், விசுக்கோத்து, மின்சூழ், மின்கலத்தால் இயங்கும் வானொலி போன்ற அனர்த்தத்தின் பொழுது பயன்படுத்தக்கூடிய பொருட்களைக் கொண்டு செல்லுதல் சாலச் சிறந்ததாகும்.

## நீங்கள் வீட்டினுள் தங்கியிருப்பின் செய்ய வேண்டிய பாதுகாப்பு ஏற்பாடுகள்

- வீட்டின் சுவர், கூரை என்பவற்றின் பாதுகாப்பு விடயத்தில் கவனம் செலுத்தவும்
- வீட்டுக்குச் சேதத்தை உண்டு பண்ணக்கூடிய மரங்களையும் அதன் கிளைகளையும் அகற்றி விடல்.
- மின்சாரத்தை துண்டித்து விடல்.

## இடி மின்னல்



உரு 4.4

முகில்களில் ஏற்படும் நிலைமின்னேற்றங்கள் காரணமாகவே மின்னல் தோன்றுகின்றது. முகில்கள் மிக நுண்ணிய நீர்த்துளிகளால் ஆனவை. முகில்களினூடாகக் காற்று வேகமாக வீசும்போது நீர்த்துளிகள் ஒன்றுடன் ஒன்று உரோஞ்சப்படுவதனால் அவை மின்னேற்படுகின்றன. முகில்களின் மேற்பகுதியில் நேர்மின்னேற்றங்களும் அதற்குத் கீழாக நேர்மின்னேற்றத்திற்குச் சமமான அளவில் மறைமின்னேற்றங்களும் காணப்படும். முகில்களினுள் அதிகளவு மின்னேற்றங்கள் சேரும்போது அம்மின்னேற்றங்கள் இறக்கமடையும். அப்போது மின்னல் தோன்றும்.

இம்மின்னேற்றங்கள் இறக்கமடையும்போது அதற்கு அண்மையிலுள்ள வளி திடீரென வெப்பமடைந்து விரிவடைவதனால் சத்தம் கேட்கின்றது. இதனையே இடி என்கிறோம். இலங்கையில் மார்ச் - ஏப்ரல், ஒக்டோபர் - நவம்பர் காலப்பகுதிகளில் அதிகளவில் இடி மின்னல் ஏற்படும். ஆயினும் வருடத்தின் எந்தவொரு காலப் பகுதியிலும் இடி மின்னல் ஏற்படலாம்.

பகல் நேர வெப்பநிலை அதிகரிப்பதாலும் ஆவியாதல் செயற்பட்டாலும் இலங்கையில் மார்ச் - ஏப்ரல், ஒக்டோபர் - நவம்பர் காலப்பகுதிகளில் அதிகளவில் இடி மின்னல் ஏற்படும். ஆயினும், வருடத்தின் எந்தவொரு காலப்பகுதியிலும் இடி மின்னல் ஏற்படலாம்.

### இடி மின்னல் தாக்குதல்களால் ஏற்படும் பாதிப்புகளைத் தவிர்த்துக் கொள்ளும் முறைகள்

- திறந்தவெளிப் பிரதேசங்களில் தரித்து நிற்காதிருத்தல்
- தனிமையில் அல்லது உயரமான மரங்களின் கீழ் நிற்காதிருத்தல்
- குதிரையில் சவாரி செய்தல், துவிச்சக்கரவண்டி, உழவு இயந்திரம் போன்ற திறந்த வாகனங்களில் பயணஞ் செய்யாதிருத்தல்
- தொலைபேசிப் பாவனையைத் தவிர்த்தல்
- உலோகப் பொருட்களைத் தொடாது இருத்தல்
- மின் உபகரணங்களை அதன் செருகிகளிலிருந்து அகற்றி விடல்
- மின் உபகரணங்களுடன் தொடர்புடைய பொருள்களின் பாவனையைத் தவிர்த்தல்

### சுனாமி

சமுத்திரத்தின் அடியில் ஏற்படும் புவியதிர்ச்சி, அணுகுண்டு வெடிப்பு, எரிமலை வெடிப்பு, நட்சத்திரங்கள் வெடித்து வீழ்தல் முதலிய நிகழ்வுகள் காரணமாக சுனாமி ஏற்படுகின்றது. இவ்வாறான சந்தர்ப் பங்களில் கடலில் உருவாகின்ற பாரிய அலைகள் நில அதிர்வு ஏற்பட்ட இடத்தை மையமாகக் கொண்டு அனைத்து திசைகளுக்கும் நகர்ந்து செல்லும். இதனால் கடற்கரை பிரதேசத்திற்கு பாரிய சேதங்கள் உருவாகும்.



உரு 4.5

2004 ஆம் ஆண்டு டிசெம்பர் 26ஆம் திகதி இந்து சமுத்திரப் பகுதியில் உண்டான சுனாமிப் பேரலைகளை பாரிய பேரழிவை ஏற்படுத்திய ஒரு நிகழ்வாகக் குறிப்பிடலாம். எதிர்பாராத நிலையில் ஏற்பட்ட இந்நிகழ்வினால் இலங்கையின் கரையோரப் பிரதேசம் மற்றும் அப்பிரதேசத்தைச் சூழ வாழ்ந்த மக்கள் மாத்திரமன்றி மோட்டார் வாகனங்கள், புகையிரதம் ஆகியவற்றில் பயணம் செய்த பயணிகள் உட்பட ஏறக்குறைய 31500 பேர் மரணமடைந்தனர். 550000 பேர் நிர்க்கதிக்குள்ளாயினர். வீடுகள், சுற்றுலா ஹோட்டல்கள், மீனவத் துறைமுகங்கள், மீன்பிடி வள்ளங்கள், மோட்டார் வாகனங்கள் போன்ற சொத்துகளுக்கு பாரிய சேதங்கள் ஏற்பட்டன. இது இலங்கையின் கடலோர பிரதேசங்களில் நேரடியாகத் தாக்கம் செலுத்தியதுடன் இந்தியா, இந்தோனேசியா, தாய்லாந்து ஆகிய நாடுகளிலும் இதன் தாக்கத்தைக் காண முடிந்தது.

### சுனாமிப் பேரலைகளின் பொழுது அழிவுகள் ஏற்படக் காரணமாக இருக்கும் மனித செயற்பாடுகள்

- கரையோரங்களில் காணப்பட்ட மூடுதாவரங்களை அகற்றுதல்
- முருகைக் கற்பாறைகளுக்கு சேதம் விளைவித்தல்
- கரையோரங்களிலுள்ள கண்டல்நிலத் தாவரங்களை அழித்தல்
- கரையோர மணல் மேடுகளிலுள்ள மணல் அகழ்வு

### சுனாமியினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளைக் குறைப்பதற்கான வழிமுறைகள்

- ஊடகங்கள் வாயிலாக விடுக்கப்படும் அறிவிப்புகளை செவிமடுத்தலில் கவனம் செலுத்துதல்
- அபாய அறிவிப்புச் செய்யப்பட்ட பிரதேசங்களிலிருந்து வெளியேறல்
- பிறரையும் இவ்விடயம் தொடர்பாக அறிவுறுத்தல்
- சுனாமிக்கு முன்னரான அறிகுறிகளை அறிந்து வைத்திருத்தல்
- உயரமான பிரதேசம் நோக்கிச் செல்லுதல்
- பாதுகாப்பான இடம் நோக்கி விரைவாகப் செல்லுதல்
- கடலலைகள் குறுகிய காலப்பகுதியினுள் பேரலையாக மாறும் என்பதை அறிந்து வைத்திருத்தல்

### வரட்சி

மனிதனுக்குத் தேவையான நீரை முழுமையாகப் பெற்றுக்கொள்ள முடியாத நிலை தோன்றும் போது அது வரட்சிக் காலம் என்று அழைக்கப்படுகிறது. போதியளவு மழைவீழ்ச்சி கிடைக்காதமையால் ஏற்படுவது காலநிலை வரட்சி எனவும் நீர் வழங்கலில் ஏற்படும் பற்றாக் குறை காரணமாக ஏற்படுவது நீர்ப் பற்றாக்குறை வரட்சி எனவும் அழைக்கப்படுகிறது. இலங்கையின் ஒரு மாவட்டத்திற்குக் கிடைக்கும் சராசரி மழை வீழ்ச்சியின் அளவு 75 % இற்கும் குறைவாக இருக்கையில் அதனை வரட்சிக் காலம் என வனப்பாதுகாப்பு மற்றும் சுற்றாடல் அமைச்சு காலநிலை தொடர்பாகத் தயாரிக்கப்பட்ட அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.



உரு 4.5 வரட்சியின் பாதிப்பு

மேலும், 15 தினங்களுக்கு மேலாக மழை வீழ்ச்சியற்று காணப்படும் நிலையை வரட்சி என்று பிரித்தானிய நிபுணர் ஒருவர் குறிப்பிடுகின்றார். இலங்கையில் தென்கிழக்கு, வடமத்திய, வடமேற்கு ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த மாவட்டங்களில் வரட்சி ஏற்படுவதனால் பின்வரும் பாதிப்புகள் ஏற்படுகின்றன. உலர் வலயப் பிரதேசங்களில் வரட்சி அதிகமாகக் காணப்படும். அதன் விளைவுகள் வருமாறு,

- குடிநீர் தட்டுப்பாடு
- பயிர் நிலங்கள் பாதிப்படைதல்
- வன விலங்குகள் அழிதல்
- உயிர்ச் சேதம்
- நீர்மின் உற்பத்தியில் பாதிப்பு ஏற்படல்
- நீரூற்றுக்கள் மற்றும் சிறிய குளங்கள் வற்றிப் போதல்
- நிலக்கீழ் நீர்மட்டம் குறைவடைதல் போன்ற விளைவுகள் ஏற்படலாம்


உரு 4.6 வரட்சியின் தாக்கத்தால் பாதிக்கப்பட்ட சந்தர்ப்பம்

## வரட்சியிலிருந்து பாதுகாப்புப் பெறுதல்

- காடுகளை அழிக்காதிருத்தல்
- நீர்நிலைகளைப் பாதுகாத்தல்
- ஆறுகள், குளங்களை அசுத்தப்படுத்தாதிருத்தல்
- மரஞ்செடி கொடிகளை நடுதல்
- கடுமையான வெயிலின் தாக்கத்திலிருந்து நிலத்தைப் பாதுகாத்தல்
- நீரேந்து பிரதேசங்களைப் பாதுகாத்தல்
- மழைநீர்த் தாங்கிகளை அமைத்தல் போன்ற நீர்ப்பாதுகாப்பு முறைகளைக் கடைப்பிடிப்பது மிக முக்கியமாகிறது.


உரு 4.7 வரட்சியினால் மனிதர்களுக்கும், விலங்குகளுக்கும் சூழலுக்கும் பாதிப்பு ஏற்படல்

மனிதன், சுற்றாடலின் வளங்களை அதிகளவில் அனுபவிக்கின்றான். அதனால் சுற்றாடலிலும் பாரிய பிரச்சினைகள் உருவாகின்றன. இப்பாதிப்புகளைக் கட்டுப்படுத்தாது விட்டால் இயற்கை அனர்த்தங்களினால் மனிதனுக்கு ஏற்படுகின்ற பாதிப்புகள் மேலும் அதிகரிக்கும். ஆகையால், இயற்கை அனர்த்தங்களுக்குக் காரணமான செயற்பாடுகளை நாம் தவிர்த்துக் கொள்வதானது, இலங்கை நாட்டுப் பிரஜை என்ற வகையில் எமக்குரிய கடமையும் பொறுப்புமாகும். அதற்காக எம்மால் பின்பற்றக் கூடிய வழிமுறைகள் கீழே தரப்பட்டுள்ளன.

**இயற்கை அனர்த்தங்களைக் குறைத்துக் கொள்வதற்கான வழிமுறைகள்**

- கண்டல் தாவரங்களைப் பாதுகாத்தல்
- சுரங்க அகழ்வுகளை மட்டுப்படுத்தல்
- கரையோரப் பிரதேசங்களிலும் மேட்டு நிலப் பிரதேச ங்களிலும் சட்ட ரீதியற்ற கட்டட நிர்மாணங்களை மேற்கொள்ளாதிருத்தல்
- விரைவாக உக்கலடையாத பொருட்களைச் சூழலுக்கு விடுவிக்காதிருத்தல்
- கரையோர மணல் திட்டுகளைப் பாதுகாத்தல்
- காடுகளுக்கு தீ மூட்டாதிருத்தல்
- ஆறுகளில் மணல் அகழாதிருத்தல்
- காடுகளை அழிக்காதிருத்தல்
- சுண்ணாம்புப் பாறைகளை சேதப்படுத்தாது இருத்தல்

## அனர்த்தங்கள் ஏற்படும் சந்தர்ப்பங்களில் அவற்றால் ஏற்படும் பாதிப்புகளைக் குறைத்துக் கொள்ளும் வழிமுறைகள்

அனர்த்தங்களின்போது கூடுதலான மக்கள் பாதிக்கப்படுகின்றனர். இவ்வாறான சந்தர்ப் பங்களில் பிரஜை என்ற வகையில் எமக்குரிய பொறுப்புக்களையும் கடமைகளையும் நிறை வேற்றுவதற்கு முன்வருதல் வேண்டும். இங்கு எம்மால் மிக விரைவாகச் செய்யக் கூடிய சில விடயங்கள் கீழே தரப்பட்டுள்ளன.



உரு 4.8 அனர்த்தத்திற்குள்ளானோருக்கு சிகிச்சையளித்தல்

- அனர்த்தம் மற்றும் விபத்துகளின் போது குறிப்பிட்ட நிறுவனத்தினால் வழங்கப்படும் அறிவுறுத்தல்களைக் கடைப்பிடித்தல்
- அனர்த்தத் தடுப்பு மற்றும் அதன் பாதிப் புகளை குறைத்துக் கொள்ளும் விதத்தில் குறிப்பிட்ட சேவைகளை வழங்கும் நிறுவனங்களுக்கு இது தொடர்பாக அறிவித்தல்.



உரு 4.9 நிவாரணப் பொருட்கள் வழங்குதல்

- பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாத்தல்
- முறையான முதலுதவிச் சிகிச்சைகளை வழங்குதல்
- பாதிக்கப்பட்டவர்களை விரைவாக வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லல்
- விபத்து / அனர்த்தம் தொடர்பாக வைத்தியசாலைக்கும் பாதுகாப்புப் பிரிவினருக்கும் அறிவித்தல்
- அனர்த்தத்திற்கு உள்ளானவர்களுக்கு மனித நேயத்துடன் உதவுதல்
- பாதுகாப்பு மற்றும் சுகாதார சேவைகளில் ஈடுபட்டுள்ளோருக்கு தமது ஒத்துழைப்பை வழங்குதல்.

இத்தகைய சந்தர்ப்பங்களில் அனர்த்தத்திற்கு உள்ளானவர்களின் சொத்துகளை பாது காப்பது எமது கடமையாகும். பாதிக்கப்பட்டவர்களுக்கு எமது அன்பு, கருணை ஆகியவற்றை வெளிப்படுத்துவதுடன், அவர்களது சுயகௌரவம் பாதிக்கப்படாத வண்ணம் உதவிகள் புரிவதும் முக்கியமாகும்.

களவு, கொள்ளை போன்ற இழிவான செயல்களில் ஈடுபடாதவாறு கவனித்துக் கொள்வதும் எமது பொறுப்பாகும். சுனாமி, வெள்ளப்பெருக்கு, மண்சரிவு, சூறாவளி போன்ற அனர்த்தங்களினால் நிர்க்கதிக்குள்ளான மக்களுக்கு உணவு, உடை, குடிநீர் மற்றும் தங்குமிட வசதிகள் என்பவற்றை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

அரச, கூட்டுத்தாபன மற்றும் சர்வதேச அமைப்புகள் மூலம் அனர்த்தத்திற்கு உள்ளானவர்களுக்கு விநியோகிக்கப்படும் உதவிகள் உரியவர்களைச் சென்றடை வதற்கு அரச அதிகாரிகள் மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கு உதவி புரிவதும் எமது கடமையும் பொறுப்புமாகும்.




உரு 4.10

அனர்த்தம் நிகழ்ந்த சந்தர்ப்பங்களில் பாதிக் கப்பட்டவர்களின் இயல்பு வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு தேவை யான குடிநீர், மின்சாரம், தொடர்பாடல், போக்குவரத்து போன்ற பொதுச் சேவை களை வழமைக்கு கொண்டுவருவதற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற் கொள்வது இச்சேவைகளை வழங்குகின்ற நிறுவனங்கள் மற்றும் அதிகாரிகளின் பொறுப்பாகும்.



உரு 4.11 அனர்த்தத்தின்போது மக்களைப் பாதுகாப்பதற்காக படைவீரர்கள் செயற்படல்

## அனர்த்தங்களின்போது உதவும் நிறுவனங்கள்




### செயற்பாடு 4.1

- இயற்கை அனர்த்தம் மற்றும் மனித நடவடிக்கைகள் காரணமாக ஏற்படுகின்ற விபத்துகள் பற்றிக் குறிப்பிடும் பத்திரிகைச் செய்திகள், படங்கள் போன்றவற்றைச் சேகரித்து வகுப்பறையில் காட்சிப்படுத்துக.
- இயற்கை மற்றும் மனித நடவடிக்கைகளினால் விபத்துகள் ஏற்படுகின்ற பொழுது தகவல் வழங்க வேண்டிய நிறுவனங்களைக் குறிப்பிடுக.
- இலங்கை அண்மைக்காலமாக மண்சரிவு, வெள்ளப்பெருக்கு போன்ற இயற்கை அனர்த்தங்களுக்குள்ளாகி வருகின்றது. இந்நிலையைத் தவிர்ப் பதற்கு நீர் முன்வைக்கும் ஆலோசனைகள் இரண்டைக் குறிப்பிடுக.
- ‘‘இயற்கை அனர்த்தங்கள், விபத்துக்கள் என்பனவற்றின்போது தொடர்பு சாதனங்களின் பங்கு பாரியளவினதாகும்.’’ இலங்கையை உதாரணமாகக் கொண்டு இக்கூற்றினை உறுதிசெய்க.

**அவசரத் தேவைகளின்போது உமக்கு உதவி புரியும் தொலைபேசி இலக்கங்கள்**

110 - தீயணைப்புப் படை மற்றும் அவசர நோயாளிகள் காவு வாகன சேவை

118 - தேசிய பாதுகாப்பு தொடர்பான மத்திய நிலையம்

119 - பொலிஸ் அவசரப்பிரிவு, அவசர மக்கள் முறையீடு

1959 - இலங்கை தேசிய வைத்தியசாலை தகவல் மையம்

1969 - தெற்கு அதிவேக பாதையை பயன்படுத்துவோர் அவ்வவ் வேளைகளில் தொடர்பு கொள்ளல்

1984 - தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பட்டுச் சபை சட்டரீதியற்ற மருந்துப் பாவனையைத் தவிர்க்க அறிவுறுத்துதல்

1991 - சுற்றுச் சூழல் மற்றும் இயற்கை தொடர்பான முறையீடுகள்

## அனர்த்த முகாமைத்துவம்

வாழ்க்கையில் எச்சந்தர்ப்பத்திலும் எந்த இடத்திலும் அனர்த்தங்கள் மற்றும் விபத்துகளைச் சந்திக்க நேரிடலாம். அனர்த்தம் மற்றும் விபத்துகளின் பொழுது இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படும். ஆகையால், அனர்த்தம் அல்லது விபத்து தொடர்பாக நாம் எப்பொழுதும் விழிப்பாக இருத்தல் அவசியம். அத்துடன் இவை பற்றிய விளக்கத்தினையும் பெற்றிருத்தல் அவசியம்.

அனர்த்தங்கள் மற்றும் விபத்துகள் ஏற்படுவதைத் தவிர்க்க முடியாதெனினும் முன்கூட்டியே அவை பற்றிய தெளிவைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அது எமது சுற்றுப் புறச் சூழலில் நடைபெறுவன பற்றி அவதானத்துடன் இருப்பதற்கு வழிவகுக்கும்.

விபத்துகள் ஏற்படுவதை முழுமையாகத் தவிர்க்க முடியாதெனினும் அவற்றினால் ஏற்படக் கூடிய சேதங்களைக் குறைத்துக் கொள்ளலாம். இச் செயற்பாட்டினை அனர்த்த முகாமைத்துவம் என்று குறிப்பிடலாம்.

## பல வகை விபத்துகள்

நாம் நடமாடும் பிரதேசத்தை அண்டிய பகுதிகளில் முகங்கொடுக்க நேரிடும் விபத்து மற்றும் அனர்த்தங்கள் தொடர்பாக பத்திரிகைகளில் வெளிவந்த படங்களை அவதானித்து விளங்கிக் கொள்வோம்.

நிலச்சரிவினால் போக்குவரத்துப் பாதை தடைப்படல் !



உரு 4.13



உரு 4.14

இடிவிழுந்ததால் பல்கலைக்கழக மாணவி பலி !

சப்பாத்துத் தொழிற்சாலை தீக்கிரையாகியது !



உரு 4.15

நாட்டின் 20% நிலப்பகுதியில் நிலச்சரிவு ஏற்படும் அபாயம் !



உரு 4.16



உரு 4.17

வாய்க்காலில் விழுந்த சிறுமியின் சடலம் மகாவலியாற்றில் மிதந்தது !

அனர்த்தங்கள் மற்றும் விபத்துகள் நடைபெறும் இடங்களைக் குறிப்பாகக் கூற முடியாதெனினும் பின்வருவன அனர்த்தம் அல்லது விபத்து நிகழக்கூடிய இடங்களாகும்.

| | | |
|---|---|---|
| ★ வீடு | ★ வேலைத்தளம் | ★ ஆயுதக் களஞ்சியம் |
| ★ பாடசாலை | ★ நெடுஞ்சாலை | ★ நீர்த்தேக்கம் |
| ★ அயற்சூழல் | ★ தொழிற்சாலை | ★ கடல், நீர்நிலைகளில் நீராடுதல் |

விபத்துகள் எந்நேரத்திலும் நிகழலாம். எனினும், அனர்த்தங்கள் அல்லது விபத்துகள் ஏற்படும் என எண்ணி காலந்தாழ்த்துதலைத் தவிர்த்துக்கொள்ளல் வேண்டும். எம்மைச் சூழ எப்போதும் அனர்த்தங்கள், விபத்துகள் ஏற்படலாம் என்ற எண்ணத்துடன் விழிப்பாக இருந்து புத்திசாலித்தனமாக நடந்து கொள்ள வேண்டும்.

## விபத்துகள் நிகழும் சந்தர்ப்பங்கள்

கொஸ்கம - சாலாவ ஆயுதக் களஞ்சிய சாலை தீயினால் சேதம். 6கி.மீ சதுரப் பரப்பளவில் வசித்த மக்கள் வெளியேற்றம். (2016.06.05)



உரு 4.18 கொஸ்கம - சாலாவ ஆயுதக் களஞ்சிய வெடிப்பினாலேற்பட்ட அழிவு

வாகனத்தில் நசுங்கி மாணவர் பலி

கேகாலை - அரநாயக்க பிரதேசத்தில் நிலச்சரிவு ஏற்பட்டு பாரியளவில் உயிர் மற்றும் சொத்துக்கள் சேதம் (2016.05.18)

இத்தகைய செய்திகளை நீங்கள் கண்டும் கேட்டும் இருக்கலாம். இவ்வாறான நிலைமைக்கு நேரடியாக நீங்களும் முகங்கொடுக்க நேரிடலாம். பாடசாலை வளவிலும் இவ்வாறான எதிர்பாராத அனர்த்தங்கள் நிகழலாம். விசேடமாக பாட சாலை மாணவர்களும் பொதுமக்களும் அறிந்து கொள்ளும் முகமாக இவ்வாறான தலைப்பிடப்பட்ட செய்திகள் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுகின்றன.

அவ்வாறே புத்தாண்டு மற்றும் முக்கிய வைபவங்களை மகிழ்வுடன் கொண்டாடும் போது பட்டாசு, பூ வெடி, சக்கரவெடி, வான வெடி போன்றவற்றை மக்கள் பயன்படுத்துகின்றனர். இவற்றைப் பாதுகாப்பற்ற முறையில் கையாள்வதால் ஏற்படும் உடற்பாதிப்புகளைப் பற்றி அவ்வப்போது கேள்விப்படுகின்றோம்.

பல்வேறு தேவைகளுக்காக மின்சாரத்தைப் பயன் படுத்துகின்ற சந்தர்ப்பங்களில் அவதானமாகச் செயற்பட வேண்டும். சிறு பிள்ளைகள் இருக்கின்ற வீடுகளில் மின் செருகிகளை அவர்களது கைக்கு எட்டாத தூரத்தில் வைக்க வேண்டும். மருந்துப் பொருட்கள், சூடானவைகள், மின் உபகரணங்கள், விரைவில் உடையக்கூடிய பொருள்கள் ஆகியவற்றை அவர்களுக்கு எட்டாத இடத்தில் வைக்க வேண்டும். மாடி வீடுகளில் வசிக்கின்ற பொழுது சிறுவர்களின் விடயத்தில் அவதானமாக இருத்தல் அவசியம்.


உரு 4.19 நாய்க்கடிக்கு உள்ளாகும் ஒரு சந்தர்ப்பம்

அதிக மழை பெய்யும் காலங்களில் இடி மின்னல் தாக்கம் அதிகமாக இருப்பின், அதனால் சேதங்கள் ஏற்பட வாய்ப்புகள் உண்டு. அவ்வாறான சந்தர்ப்பங்களில் தொலைபேசிப் பாவனை, மின் உபகரணப் பாவனை என்பவற்றைத் தவிர்த்து மிக அவதானத்துடன் இருத்தல் அவசியம்.

அனர்த்தம் மற்றும் விபத்து தொடர்பாக கவனத்திற் கொள்கையில் குறிப்பிட்ட இடங்களில் நிகழும் விபத்துகள் அல்லது மிருகங்களினால், விசேடமாக பாம்பு போன்றவற்றினால் உண்டாகும் ஆபத்துகள் பற்றி கவனமாக இருக்க வேண்டும். பாம்புக் கடிக்கு உள்ளாகி மரணமடைவோர் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்லுகிறது. இரவு நேரங்களில் வெளியில் செல்லுகின்ற பொழுது அவதானத்துடன் செல்ல வேண்டும். அவ்வாறே வனவிலங்குகள் மற்றும் நாய் போன்றவற்றினாலும் ஆபத்துகள் ஏற்படலாம்.


உரு 4.20 யானையின் தாக்குதலுக்கு உள்ளாகும் சந்தர்ப்பமொன்று

இன்று யானை - மனித மோதல் இலங்கையில் அதிகரித்துள்ளது. அத்துடன் யானைகளால் தாக்குண்டு உயிரிழப்போர், காயமடைவோரின் தொகையும் அதிகரித்துச் செல்கிறது. எனவே, அவ்வாறான பிரதேசங்களில் வாழும் மக்கள் இந்த விபத்துகளிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ளும் முறைகளை அறிந்திருத்தல் அவசியமாகும்.

செயற்பாடு 4.2

- பக்க இலக்கம் 9, 10, 11 என்பவற்றில் குறிப்பிட்டுள்ளதும் புகைப்படங்கள் மூலம் காட்டப்பட்டுள்ளதுமான விபத்துக்கள் மற்றும் இடர்களைப் பின்வரும் தலைப்புகளின் கீழ் வகைப்படுத்துக

வீட்டுச் சூழலில் ஏற்படுபவை :-.................................................................

பாடசாலைச் சூழலில் ஏற்படுபவை :-.................................................................

வெளிச் சூழலில் ஏற்படுபவை :-.................................................................

வேலைத்தளச் சூழலில் ஏற்படுபவை :-.................................................................

வேறு சூழலில் ஏற்படுபவை :-.................................................................

- இலத்திரனியல் ஊடகங்கள் மற்றும் அச்சு ஊடகங்கள் மூலம் தேடியறிந்து இதுபோன்ற இடர்களை வகைப்படுத்தி மேற்படி அட்டவணையுடன் இணைக்கவும்.
- தற்காலத்தில் யானை - மனித மோதல் உக்கிரமடைந்துள்ளமைக்கு ஏதுவான காரணிகளைக் குறிப்பிடுக.

## உணவு மற்றும் மருந்துப்பொருட்களால் ஏற்படும் அனர்த்தங்கள்

★ உணவு மற்றும் மருந்துகள் மூலம் ஏற்படும் விபத்துகள் போன்று உணவு மற்றும் மருந்து வகைகள் ஆகியவற்றினை உட்கொள்வதால் ஏற்படக் கூடிய ஆபத்துகள் பற்றியும் கவனம் செலுத்தல் வேண்டும்.

★ உணவு நஞ்சாதல் காரணமாக வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படுவோர் மற்றும் இறப்பவர்கள் தொடர்பான தகவல்கள் பத்திரிகைகளில் வெளியிடப்படுகின்றன.



## உணவு நஞ்சடைவதற்கான காரணங்கள்

- உணவை உரிய முறையில் கழுவிச் சுத்தம் செய்யாமை
- காலவதியான உணவுகளைப் பயன்படுத்தல்
- உணவை உரிய முறையில் தயாரிக்காமை
- உணவுப் பொருள்களை விற்பனை செய்தலில் வியாபாரிகளின் முறைகேடுகள்

  (பழங்களைச் செயற்கையாகப் பழுக்கச் செய்தல், நீண்டநாட்கள் வைத்திருப்பதற்காக இரசாயனப் பொருள்களைப் பாவித்தல்)

அவ்வாறே இயற்கையான முறையில் தயாரிக்கப்படாத துரித உணவுகளையும் அவ்வப்போது உட்கொள்வதால் பல்வேறு ஆபத்துக்கள் மற்றும் அசாதாரண நிலைமைகள் உருவாகலாம்.

மருந்துப் பொருட்கள் உரியவாறு பொதி செய்யப்படாமையினாலும் அபாயகரமான மருந்துகளை பயன்படுத்துவதனாலும் கிருமிநாசினிகள் முறையாகக் களஞ்சியப் படுத்தப்படாமையினாலும் திடீர் விபத்துகள் ஏற்படலாம். சிறு பிள்ளைகள் இருக்கிற வீடுகளில் மருந்துப் பொருட்களை அவர்களது கைக்கு எட்டாதவாறு வைக்க வேண்டும். முதியோர்களுக்கும் சிறுவர்களுக்கும் மருந்துகளை கொடுக்கையில் வயதுவந்த ஒருவரால் அவை வழங்கப்படுமாயின் இவ்வாறான விபத்துகளைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

## மருந்துப் பொருட்களின் பாவனையின் போது கவனத்திற் கொள்ள வேண்டிய விடயங்கள்

- வைத்தியர் ஆலோசனைப்படி உட்கொள்ளல்
- மருந்தின் குறிப்பிட்ட அளவை மாத்திரம் எடுத்தல்
- குறிப்பிட்ட நேரத்தில் மருந்தை உட்கொள்ளல்
- குறித்த வெப்பநிலையில் அதனைப் பாதுகாப்பாக வைத்திருத்தல்
- மருந்தைப் பயன்படுத்த முன்னர் தரப்பட்ட அறிவுறுத்தல்களை கவனத்திற் கொள்ளல்
- காலாவதியன மருந்து தொடர்பாகக் கவனமாக இருத்தல்

## தீங்கிழைக்கக்கூடிய பழக்கவழக்கங்களினால் அனர்த்தங்கள், விபத்துக்கள் நேரிடலாம்

உதாரணம்:

- மதுபோதையில் வாகனம் செலுத்துதல்
- மனக்குழப்பத்துடன் வாகனம் செலுத்துதல்

  உ+ம் கோபம், கவலை, பதற்றம்
- கையடக்கத் தொலைபேசியைப் பயன்படுத்திய வண்ணம் வாகனம் செலுத்துதல்
- புகைத்தல், மதுபாவனை

இவ்வாறான காரணிகளினால் நிகழக்கூடிய அனர்த்தங்கள் விபத்துக்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் உயர்ந்து செல்கிறது. ஆகையினால் இவ்வாறான விபத்துகளைக் குறைத்துக் கொள்வதற்கு நாம் நல்ல சிந்தனையுடனும் புத்திசாலித்தனமாகவும் செயற்பட வேண்டும்.

**அனர்த்தம் மற்றும் விபத்துக்கள் தொடர்பில் செயலாற்றும் நிறுவனங்கள்**

- வைத்தியசாலை / அவசர விபத்துச் சேவை
- பொலிஸ் நிலையம்
- தீயணைப்புப் படை
- அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம்
- சென்.ஜோன்ஸ் அவசரப் படையணி
- வான், தரை மற்றும் கடற்படை
- சுகாதார சேவை
- தொடர்பாடல் ஊடகங்கள் (தொலைக் காட்சி, வானொலி, பத்திரிகை)

அனர்த்தம் அல்லது விபத்துகள் ஏற்படும்பொழுது குழப்பமடையாது சிந்தித்துச் செயலாற்ற வேண்டும். பெரும்பாலும் விபத்தின் பொழுது அதனைப் பார்ப்பதற்கு மக்கள் கூடுவார்கள்.

உ+ம்

வாகன விபத்தொன்றில் காயமடைந்தோரை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்வதுடன், பொலிஸாரினால் மேற்கொள்ளப்படும் விசாரணைகளுக்கு இடமளித்தல் வேண்டும். மக்கள் அவ்விடத்தில் கூட்டமாக கூடியிருப்பது மேற்படி செயல்களுக்குத் தடையாக அமையும். அவ்வாறே, அநேகமாக இயற்கையாக மற்றும் மனிதச் செயற்பாடுகளின் காரணமாக நிகழ்கின்ற அனர்த்தங்கள் ஒரே தடவையில் நிகழாது அவ்வப்போது நிகழலாம்.

உ+ம்

சுனாமி, மண்சரிவு, குண்டு வெடித்தல், யுத்தத்தளபாட மற்றும் ஆயுத களஞ்சிய சாலைகள் தீப்பிடித்தல் ஆகிய சந்தர்ப்பங்களில் அதனைப் பார்வையிடுவதற்காக மக்கள் ஒன்று கூடுவதனால் அங்கு செல்பவர்களும் இவ்வனர்த்தத்தினால் பாதிக்கப்படலாம். ஆகவே, அவசியமின்றி அவ்வாறான இடங்களுக்குச் செல்வதைத் தவிர்த்துக் கொள்ளல் வேண்டும்.

தொடர்பாடல் ஊடகங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதன்மூலம் விபத்துகளிலிருந்து பாதுகாப்புப் பெற்று அவதானத்துடன் இருக்கலாம். தினசரி வானிலை அறிக்கையைச் செவிமடுத்தல், இயற்கைச் சூழலின் நிகழ்வுகள் பற்றிய அறிவைப் பெற்றுக்கொள்ளல், நிலச்சரிவுக்குரிய அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாகச் செயற்படுதல் ஆகியவற்றின்மூலம் உயிர்ச்சேதங்களை மட்டுப்படுத்திக் கொள்ளலாம்.

விலங்குகளின் நடமாட்டம், அவற்றின் செயற்பாடுகள் பற்றியும் அவதானத்துடன் இருத்தல் வேண்டும். ஏனெனில், சுற்றடாலில் ஏற்படுகின்ற மாற்றங்கள் தொடர்பாக மனிதனை விட விலங்குகளுக்கு உணரும் ஆற்றல் அதிகம். தவளையின் ஒலிகள், புற்றிலிருந்து ஈசல் வெளிப்படல், மழைக்குருவியின் சஞ்சாரம் ஆகியவற்றுக்கான காரணங்களை நம் முன்னோர்கள் அறிந்து வைத்திருந்தனர்.

ஆகவே, தனக்கோ பிறருக்கோ அனர்த்தங்கள் ஏற்படின், உடனடியாகச் செயற்பட்டு சந்தர்ப்ப சூழலுக்குப் பொருத்தமான தீர்மானங்களை எடுக்கும் திறனை நாம் வளர்த்துக் கொள்ளல் வேண்டும். ஒவ்வொரு அனர்த்தத்தின் பொழுதும் தந்திரோபாயமாகவும் தெளிவான சிந்தனையுடனும் புத்திசாதுரியமாகவும் செயற்படுவதன் மூலம் அனர்த்தங்களை உரிய முறையில் முகாமைத்துவம் செய்யலாம்.

அதன்மூலம் நம் அனைவரினதும் உயிர்களையும் சொத்துகளையும் பாதுகாத்துக் கொள்யலாம். இதன்மூலம் சிறந்த வாழ்க்கை முறையொன்றினை வாழ்வதற்கும் உறுதியான பொருளாதாரத்தைக் கொண்ட ஒரு நாட்டினைக் கட்டியெழுப்புவதற்கும் எம்மால் இயலும்.

## மனிதச் செயற்பாடுகளால் உண்டாகும் அனர்த்தங்கள்

### வீதி விபத்துகள்

*வீதி விபத்துகள் பற்றிய பின்வரும் கவிதையை வாசிக்குக.*

எடுத்தவுடன் உனது
வாகனத்தை பறக்க விடாதே

கவனி வீதி விதிமுறைகளை
பின்பற்று சட்டத்தை

சாரதிகளின் கவனயீன கோர
விபத்தினால்

சோகத்திலும், துயரிலும்
ஆழ்ந்து - பல

உயிர்கள் ஆதரவின்றி
தவிக்கின்றன -ஆக

வாகனத்தை எடுத்திடு
பயணமும் சென்றிடு

செலுத்துக அவதானமாக
வாகனத்தை

தன்னையும் காத்து,
பிறரையும் காத்திடு

அவதானமும்,
பொறுமையுடனுமே!!!



உரு 4.21 வீதி விபத்து



உரு 4.22 முறையாகப் பாதையைக் கடக்காத சந்தர்ப்பம்

ஆசிரியருடன் இணைந்து இப்பாடலை தாளத்துடன் பாடி மகிழவும்

இலங்கையில், தற்பொழுது மனிதச் செயற்பாட்டின் காரணமாக நிகழும் அனர்த்தங்களாக வீதி விபத்துகளை குறிப்பிடலாம். அன்றாடம் நிகழும் வீதி விபத்துகளினால் உயிர்ப்பலிகள் அதிகம் ஏற்படுவதுடன் அதிகளவான எண்ணிக்கையினர் காயங்களுக்கு உள்ளாகின்றனர் என்ற செய்திகளை அன்றாடம் செவிமடுக்கின்றோம். வீதி விபத்துகளினால் சமூகத்திற்கு பயன்மிக்கவர்களை இழக்கின்றோம். இது நாட்டின் அபிவிருத்தியில் நேரடியான பாதிப்பை ஏற்படுத்துகின்றது. அவ்வாறே உயிரிழந்த மற்றும் அங்கவீனமடைந்து ஆதரவற்றிருக்கும் நபர்களுக்காக சமூகத்தினால் ஆற்றப்பட வேண்டிய பொறுப்புகளும் அதிகரித்துச் செல்கின்றன.




உரு 4.23 வீதி விபத்து

கீழ்வரும் புள்ளிவிவரங்களை நன்றாக கவனியுங்கள்

| இலங்கையின் வீதி விபத்துகள் பற்றிய தகவல்கள் (2010-2015) | | | | | |
|---|---|---|---|---|---|
| வருடம் | மரணங்களை ஏற்படுத்திய வாகன விபத்துகள் | பாரதூரமான வாகன விபத்துகள் | சிறு விபத்துகள் | வேறு | மரணமடைந்தோர் எண்ணிக்கை |
| 2010 | 2575 | 6124 | 12560 | 16390 | 2721 |
| 2011 | 2498 | 6965 | 13196 | 17589 | 2677 |
| 2012 | 2317 | 7209 | 14680 | 17930 | 2449 |
| 2013 | 2190 | 6870 | 13525 | 13294 | 2365 |
| 2014 | 2260 | 7071 | 12784 | 13854 | 2440 |
| 2015 | 2590 | 7719 | 13095 | 13514 | 2801 |

தகவல் :- போக்குவரத்து பொலிஸ் தலைமையகம் 2015

### வருடாந்தம் வீதி விபத்துகளால் மரணமடைந்தோரின் எண்ணிக்கை




மேற்படி தரவுகளுக்கேற்ப தொழிலுக்காக கல்வித் தேவைகளுக்காக அல்லது வேறு பல தேவைகளின் நிமித்தம் வீட்டை விட்டு வெளியேறிச் சென்ற மக்கள் வழியில் இவ்வாறான விபத்துக்கு உள்ளாகி இருக்கலாம். ஆகவே வீதி விபத்துகளைத் தவிர்த்துக் கொள்வதில் கவனஞ் செலுத்துவது காலத்தின் தேவையாக உள்ளது.

### உங்களுக்குத் தெரியுமா?

*2014 ஆம் ஆண்டு இலங்கையில் நாளொன்றுக்கு,*


- *வாகன விபத்துகள்* - 101
- *மரணமடைந்தோர்* - 7
- *காயமுற்றோர்* - 54
- *சொத்துகளுக்கான சேதம்* - 38
- *நட்டம்* - *20 பில்லியன்*

*வீதி விபத்துகள் ஏற்படப் பிரதான காரணமாகவுள்ள விடயங்களைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.*

- *சாரதிகளால் ஏற்படும் தவறுகள்*
- *பாதசாரிகளால் ஏற்படும் விபத்துகள்*
- *பாதையிலுள்ள குறைபாடுகள்*
- *பாவனைக்குதவாத வாகனங்களின் பயன்பாடு*

போன்ற காரணிகள் வீதி விபத்துகளுக்குப் பெரும்பாலும் ஏதுவாயுள்ளன.

- வீதி விபத்துகளில் 85% மனிதத் தவறுகளால் ஏற்படுகின்றன. மேற்படி வட்டவரைபினை அவதானிக்கும்போது இது நன்கு புலானாகின்றது.



உரு 4.24

## சாரதிகளினால் ஏற்படும் தவறுகள்


உரு 4.25 கையடக்கத் தொலைபேசியைப் பயன்படுத்தியபடி வாகனம் செலுத்துதல்

- ஒழுக்கமின்றி வாகனம் செலுத்துதல் (பாதை ஒழுங்குகளைப் பின்பற்றாது வாகனம் செலுத்துதல்)
- மதுபோதையில் வாகனம் செலுத்துதல்
- அனுமதிப் பத்திரமின்றி வாகனம் செலுத்துதல்
- வீதிச் சமிக்ஞை மற்றும் பொலிஸாரின் கட்டளைகளைப் பின்பற்றாதிருத்தல்
- அதிக வேகமாக வாகனம் செலுத்துதல்
- களைப்படைந்த நிலையில் வாகனம் செலுத்துதல்
- வாகனத்தை செலுத்தும்போது பிற வாகனங்கள் மற்றும் பாதசாரிகளைக் கவனத்திற் கொள்ளாமை
- வானிலையைப் பற்றி கவனம் செலுத்தாமை
  (உ+ம்: அதிக பனிமூட்டம் போன்ற நிலைகள்)
- வாகனத்தை செலுத்துகையில் கையடக்கத் தொலைபேசி பாவனை
- அளவுக்கதிகமான பயணிகளை ஏற்றிச் செல்லல்
- சாரதிகளிடையே காணப்படும் போட்டித்தன்மை
- சாரதியின் மனநிலை
- வீதி ஒழுங்குகள் பற்றிய அறிவின்மை

### பாதசாரிகளால் ஏற்படும் விபத்துகள்

- வீதிச் சமிக்ஞை மற்றும் வீதி ஒழுங்குமுறைகளைக் கவனிக்காமை
- வீதியின் வலப்பக்கமாக பயணஞ் செய்யாமை
- குழுக்களாகப் பாதையில் செல்லுதல்
- பாதையைக் கடக்கும்பொழுது மஞ்சள், வெள்ளை கோட்டுக் கடவையைப் பயன்படுத் தாதிருத்தல்
- வீதியில் கையடக்கத் தொலைபேசியைப் பயன்படுத்தல்



உரு 4.26 கையடக்கத் தொலைபேசியைப் பயன்படுத்தியவாறு மஞ்சள் கோட்டை கடக்கும் பாதசாரி

- இரவு நேரத்தில் கறுப்பு அல்லது இருளில் தெளிவாகத் தெரியாத கடும்நிறத்திலான ஆடைகளை அணிந்து செல்லல்

### விச்சக்கர வண்டியில் பயணம் செய்கையில் ஏற்படக்கூடிய விபத்துகள்

- குழுக்களாக துவிச்சக்கர வண்டியில் செல்லுதல்
- இரவு வேளைகளில் முன் விளக்கின்றி துவிச்சக்கர வண்டியைச் செலுத்துதல்
- துவிச்சக்கர வண்டியின் பின்னால் ஒளித்தெறிப்புக் கண்ணாடியைப் பொருத்தாது விடல்

### பாதையின் தன்மை

வீதி விபத்துக்கள் அதிகரித்துக் காணப்படுவதில் பாதையின் தன்மையும் காரணமாக அமைகின்றது.

- பாதை பழுதடைந்து அதில் நீர் நிரம்பிக் காணப்படல்
- எண்ணெய்க் கசிவுகள் காணப்படல்
- முன்னால் புலப்படாத வளைவுகள் காணப்படல்
- சமச்சீரற்ற வளைவுகள் காணப்படல்
- செப்பனிப்படுகின்ற பாதைகள் பூரணமாக திருத்தப்படாது காணப்படல்
- வீதியோரங்களில் பாரிய மரங்கள் காணப் படல்



உரு 4.27

- வீதிகளில் வெள்ளை, மஞ்சள் நிறக் கோடுகள் தெளிவாகப் போடப்படாமை
- தேவையான இடங்களில் வீதிச் சமிக்ஞைகள் காணப்படாமை
- வீதிகளில் வாகன நெரிசல்

## வாகனங்களின் பராமரிப்புத் தன்மை

நடைமுறையில் வீதி விபத்துகள் அதிகரித்துக் காணப்படுவதற்கு பழுதடைந்த, முறையாக பராமரிக்கப்படாத வாகனங்களை வீதிகளில் செலுத்துவதும் காரணமாக இருக்கின்றது. அவற்றுள் சில வருமாறு,

- முன் விளக்கு (Head light) முறையாக ஒளிராமை
- வாகன தடுப்பு (Brake system) ஒழுங்காக இயங்காமை
- மழைக் காலங்களில் துடைப்பான் (Wind screen wiper) இல்லாமல் வாகனத்தைச் செலுத்துதல்
- தேய்வுற்ற டயர்கள் காணப்படல் - ஒழுங்கான பராமரிப்பின்மை
- சமிக்ஞை விளக்கு (Signal light) இன்றி செல்லல்
- இயந்திரம் பழுதடைந்த நிலையில் வாகனத்தைச் செலுத்துதல்
- வாகனத்தின் பக்க ஆடிகளை (Side glass) அவதானிக்க முடியாதவாறு இருத்தல்

## வீதி விபத்துக்களைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கைகள்

பாதசாரிகளும் சாரதிகளும் வீதி ஒழுங்குகளைச் சரியாகக் கவனத்திற் கொண்டால் அநேக வீதி விபத்துகளைத் தவிர்க்கலாம்.


முன்னால்
நிறுத்தவும்


முன்னால்
வழி விடவும்


முன்னால்
சுற்று வளைவு


முன்னால் ஒளிச்
சமிக்ஞைகள்


முன்னால்
கீழ் சரிவுள்ள
அபாயப் பாதை


முன்னால்
மேல் சரிவுள்ள
அபாயப் பாதை


முன்னால்
வழுக்கும்
சிறு வீதி


முன்னால்
மண் சரிவுகள்
ஏற்படும் இடம்


முன்னால்
பாதசாரிகள்
கடவை


முன்னால்
சிறுவர்களின்
கடவை


முன்னால்
பாதையில்
வேலை


முன்னால்
பாதுகாப்பான
புகையிரதக் கடவை



முன்னால் பாது
காப்பற்ற புகை
யிரதக் கடவை



முன்னால்
பஸ் வண்டி
ஒழுங்கை



முன்னால் துவிச்
சக்கர வண்டி
ஒழுங்கை



முன்னால் துவிச்
சக்கர வண்டிக்
கடவை



முன்னால் விலங்
குகள் பாதையைக்
கடக்கக் கூடும்



முன்னால் வீதிக்கு
அருகில் விழக்கூடிய
ஓடத் துறை

உரு 4.28 எமது நாளாந்த வாழ்க்கையின்போது தேவைப்படும் வீதிக்குறியீடுகள்

- வாகனம் மற்றும் துவிச்சக்கர வண்டிகளைச் செலுத்தும்போது பெருந் தெருக்களில் நடந்து செல்லும் போதும் அனைவரும் வீதிக்குறியீடுகள் தொடர்பாகக் கூடிய கவனம் செலுத்துமிடத்து, வீதி விபத்துகளைக் குறைத்துக் கொள்ள முடியும். நீங்கள் பேருந்தில் அல்லது மோட்டார் வண்டியில் அல்லது கால்நடையாகச் செல்லக்கூடும் எச்சந்தர்ப்பமாயினும், நீங்கள் பாதையை நன்கு அவதானித்துச் செல்லல் வேண்டும்.
- அரச அனுசரணையுடன் அதிக நிதியைச் செலவு செய்து சாரதிகளினதும், பாத சாரிகளினதும் பாதுகாப்பைக் கருதி வீதிச் சமிக்ஞைப் பதாகைகள் மூடிய சுற்றுத் தொலைக்காட்சி (CCTV) பொருத்தப்பட்டிருப்பதை உங்களால் கண்டுகொள்ள முடியும். இதன்மூலம் அரசு எமது பாதுகாப்பை உறுதிசெய்ய எத்தனிக்கின்றது. இச்சமிக்ஞைகளை நன்கு கவனத்திற்கொண்டு அவற்றைப் பின்பற்றிப் பயனடைவது சிறந்த சாரதிகளினதும் பாதசாரிகளினதும் கடமையாவதுடன் இதன்மூலம் வீதி விபத்துகளை தவிர்க்க முடியும்.

## வீதி விபத்துகளைத் தவிர்ப்பதில் ஒவ்வொருவருக்குமுள்ள பொறுப்புகள்

| சாரதிகளின் பொறுப்புகள் | அரசின் பொறுப்புகள் | பொலிஸாரின் பொறுப்புகள் |
|---|---|---|
| வீதி விதிகளைச் சரியாகப் பின்பற்றல் | வீதிகளைச் சரியாகப் பராமரித்தல் | சாரதிகள், பயணிகள் ஆகியோருக்கு அறிவூட்டல் |
| வீதிச் சமிக்ஞைகளை சரியாகப் பின்பற்றுதல் | சாரதிப் பயிற்சியை முறையாக வழங்குதல் | தகுதியற்ற வாகனங்களை அகற்றுதல் |
| மதுபோதையில் வாகனம் ஓட்டாதிருத்தல் | வேகக்கட்டுப்பாட்டு எல்லைகள், சமிக்ஞைகள் ஆகியவற்றை வீதிகளில் நிறுவுதல் | |

| | | |
|---|---|---|
| வேகக் கட்டுப்பாட்டு எல்லைகளை மீறாது இருத்தல் | சாரதிகளின் கவனத்தை ஈர்ப்பதற்கான நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல் | |
| சேதமடைந்த பாதைகளில் கவனமாக வாகனங்களை செலுத்துதல் | | |
| மோட்டார் வாகனங்களில் பயணம் செய்யும்போது ஆசனப்பட்டி அணிதல் | | |
| மோட்டார் சைக்கிள் செலுத்தும்போது பாதுகாப்புத் தலைக்கவசத்தை அணிதல் | | |
| வாகனங்களைச் சரியாக பராமரித்தல் | | |
| வாகன விளக்குகளை சரியாகத் தொழிற்படச் செய்தல் மற்றும் இரவு வேளைகளில் முகப்பு வெளிச்சம், மங்கலான வெளிச்சங்களைத் தொழிற்படச் செய்தல் | | |

## புகையிரத விபத்து

தற்காலத்தில் மற்றுமொரு முக்கிய அம்சமாக நாம் கேள்விப்படுவது புகையிர விபத்துகளாகும். புகையிரத விபத்துகள் காரணமாக உயிரிழப்போரின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்லும் போக்கையே இன்று காண முடிகின்றது. புகையிரத விபத்துகளுக்குக் காரணமாகும் விடயங்கள் வருமாறு,



உரு 4.29 பாரிய புகையிரத விபத்து

- புகையிரதப் பாதைகளில் பாதசாரிகள் பயணித்தல்
- புகையிரதப் பாதைகளின் குறுக்கே உள்ள வீதிச் சமிக்ஞைகளை கவனிக்காது வாகனத்தைச் செலுத்துதல்
- புகையிரத பாதைகளில் ஏற்படக் கூடிய தொழினுட்பக் கோளாறுகள்
- புகையிரதக் கடவைகளில் பாதுகாப்புப்படலை அமைக்கப்படாமை
- புகையிரதப் பாதையின் இரு மருங்கிலும் பாதுகாப்பற்ற மக்கள் குடியிருப்புகள் காணப்படல்

## புகையிரத விபத்துகளைத் தவிர்த்துக் கொள்ளும் வழிமுறைகள்

- மிதிபலகையில் பயணிகள் பயணிக்காதிருத்தல்
- புகையிரதக் கடவைகளில் பாதசாரிகள் நடமாடாதிருத்தல்
- புகையிரதம் நிறுத்தப்பட முன்னர் பயணிகள் ஏறாமலும் இறங்காமலும் இருத்தல்
- புகையிரத சமிக்ஞைகளை முறையாகச் செயற்படுத்தல்
- புகையிரதக் கடவைகளை ஒழுங்காகப் பராமரித்துத் துப்பரவாக்கல்
- புகையிரதக் கடவைகளுக்கு குறுக்காக பாதுகாப்பு படலைகள் அமைத்தல்
- புகையிரதக் கடவைச் சமிக்ஞைகள் ஒழுங்காக இயங்குகிறதா என்பதைக் கட்டுப்பாட்டு அறையிலிருந்து அவதானித்தல்

## வீதி மற்றும் புகையிரத விபத்துகள் நேரும் சந்தர்ப்பங்களில் மேற்கொள்ள வேண்டிய வழிமுறைகள்

வீதி விபத்துகள் நிகழும் சந்தர்ப்பங்களில் சாரதிகளுக்கும் பொதுமக்களுக்கும் பொலிசாருக்கும் பாரிய பொறுப்புண்டு. வீதி விபத்துகள் ஏற்படும் சந்தர்ப்பங்களில் மேற்கூறிய அனைவரும் ஒன்றுபட்டு விரைவாகச் செயற்படுவதன் மூலம் உயிர்களைக் காப்பாற்றிக் கொள்ளலாம். எனவே, பொதுவாக விபத்துகள் நேரும் சந்தர்ப்பங்களில் மேற்கொள்ள வேண்டியவை,

- காயமடைந்தோரை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லல்
- விபத்து தொடர்பாக அண்மையிலுள்ள பொலிஸ் நிலையத்திற்கு இயன்ற விரைவில் தகவல் வழங்குதல்
- கலவர நிலை ஏற்படாத வண்ணம் செயற்படுதல்
- விபத்துக்குள்ளானவரின் பணம், பொருள் என்பவற்றைப் பாதுகாத்து பாதுகாப்புப் பிரிவினருக்கு அல்லது உடைமையின் உரிமையாளருக்கு அல்லது பாதுகாவலரிடம் ஒப்படைத்தல்

### செயற்பாடு 4.3

- இலங்கையில் வீதி விபத்துகள் நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் உள்ளன. இதற்கான காரணங்கள் மூன்றை எழுதுக.
- வீதி விபத்துகளைக் குறைப்பதற்கு நீர் முன்வைக்கும் ஆலோசனைகள் நான்கை எழுதுக.
- பின்வரும் A, B, C, D வீதிச் சமிக்ஞைகள் மூலம் வெளிப்படுத்தப்படும் அறிவுறுத்தல்களை எழுதுக.


A


B


C


D

## இரசாயனப் பொருள் பாவனையும், அதனால் ஏற்படும் விபத்துகளும்


அன்றாட வாழ்வில் வீட்டுத் தேவைகளுக்காகப் பல வகையான இராசாயனப் பொருள்கள் பயன்படுத்தப்படுகின்றன. விவசாய உற்பத்திகளுக்கும் தொழிற்சாலை மற்றும் உற்பத்திச் செயற்பாடுகளின் பொழுதும் இராசாயனப் பொருள்கள் பயன்படுத் தப்படுகின்றன. பாடசாலை மாணவர்களாகிய உங்களுக்கு விஞ்ஞான ஆய்வுகூடத்தில் இரசாயனப் பொருள்களைப் பயன்படுத்த வேண்டிய சந்தர்ப்பங்களும் ஏற்படும்.

இரசாயனப் பொருள்களைப் பாதுகாப்பற்ற முறையில் பயன்படுத்துகையில் அது உடல் ஆரோக்கியத்திற்கு தீங்கை உண்டாக்குவதோடு, அவை உடலினுள் சென்று மரணத்தை ஏற்படுத்திய சம்பவங்கள் பற்றியும் கேள்விப்பட முடிகின்றது.

களைக்கொல்லி மருந்துகள் மற்றும் பல்வேறு இராசாயனப் பொருள்கள் நச்சுத் தன்மை அடைந்து அனர்த்தங்கள் ஏற்படுகின்றன. அதன்மூலம் பாதிக்கப்பட்ட நபர்கள் தொடர்பான தரவுகள் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளன. இது தொடர்பாக கவனஞ் செலுத்துக.

| அனர்த்தத் திற்குரிய காரணம் | 2004 வருடம் | | 2005 வருடம் | |
|---|---|---|---|---|
| | வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டவர்கள் தொகை | மரணமடைந் தோர் தொகை | வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டவர்கள் தொகை | மரணமடைந் தோர் தொகை |
| களைக்கொல்லி நச்சுத் தன்மையாதல் | 16644 | 1281 | 16910 | 1270 |
| வீடுகளில் பயன் படுத்தப்படும் இராசாயனப் பொருள்கள் நச்சுத் தன்மையாதல் | 16978 | 226 | 17456 | 230 |

மூலம் - மருத்துவப் புள்ளி விபரவியல் அறிக்கை



## இராசாயனப் பொருட் பாவனையின்பொழுது அனர்த்தங்கள் நிகழும் விதம்

- பாதுகாப்பற்ற முறையில் களஞ்சியப்படுத்தல்
- உணவுப் பொருள்களுடன் ஒரே இடத்தில் களஞ்சியப்படுத்தி வைத்திருத்தல்
- பொருள்களின் பெயர்ச்சுட்டியை முறையாகக் காட்சிப்படுத்தாமை
- சிறுவர்களுக்கு எட்டக்கூடிய இடத்தில் வைத்தல்
- பயன்படுத்தும் முறை பற்றிய அறிவுறுத்தல்களைக் கடைப்பிடிக்காமை (கையுறை, தலைக்கவசம், பாதணி போன்றவற்றை அணியாமை)
- சிபார்சு செய்யப்பட்டவாறு கலவைகள் பயன்படுத்தாமை
- வெற்றுப் போத்தல், கழிவுப் பொருள்கள் என்பவற்றை நீர்நிலைகளில் போடல்
- தெளிப்பதற்கு பயன்படுத்தப்படும் தெளிகருவிகளை நீர்நிலைகளில் கழுவுதல்

## இராசாயனப் பொருள்கள் உடலினுள் செல்லும் முறைகள்

- தொடுகை மூலம் தோலினூடே செல்லுதல்
- சுவாசித்தலின் பொழுது
- வாய் மூலம் உடலுக்குள் செல்லல்
- கண்ணில் படுதல்
- உடலில் காணப்படும் காயங்களினூடாக
- உணவின் மூலம்

## இராசாயனப் பொருள்கள் மூலம் அனர்த்தங்கள் நிகழ்ந்தால் பின்பற்றப்பட வேண்டிய வழிமுறைகள்

இரசாயனப் பொருளைத் தெளித்தல் அல்லது வேறு முறைகளில் நஞ்சு உடலினுள் சென்று நோய்கள் ஏற்படுமாயின், பின்வரும் படிமுறைகளைப் பின்பற்றுக.

- அனர்த்தத்திற்கான காரணத்தை முறையாக அறிந்து கொள்ளல்
- பொருத்தமான முதலுதவிகளை வழங்குதல்
- இயன்றளவு விரைவாக வைத்தியரிடம் கொண்டு செல்லல்
- அனர்த்தத்தை உண்டாக்கிய இராசாயனப் பொருள் அடங்கிய போத்தல், உறை ஆகியவற்றை வைத்தியரிடம் சமர்ப்பித்தல்

இவற்றைக் கடைப்பிடிப்பதன் மூலம் சரியான சிகிச்சையை வழங்க வைத்தியரால் முடியும். இரசாயனப்பொருள்கள் சுவாசிக்கப்பட்டிருந்தால் அவ்விடத்திலிருந்து பாதிக் கப்பட்டவரை வெளியேற்றி விட வேண்டும். சுத்தமான காற்றோட்டமுள்ள நிலையில் சுவாசிப்பதற்கு வசதி ஏற்படுத்திக் கொடுப்பதுடன், நீரினால் நன்றாக கழுவிவிடவும் வேண்டும். நோயாளியைச் சிகிச்சைக்காக உடனடியாக வைத்தியரிடம் கொண்டு செல்வது சிறந்தது.

## இராசாயனப் பொருள்களினால் உண்டாகும் அனர்த்தங்களைத் தவிர்த்துக் கொள்வதற்குக் கடைப்பிடிக்க வேண்டியவை

இராசாயனப் பொருள்களினால் உண்டாகும் அனர்த்தங்கள் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்றன. ஆகவே இவற்றைத் தவிர்த்துக் கொள்வது காலத்தின் தேவையாக உள்ளது. அவ்வாறான விபத்துகள் ஏற்படுவதைத் தவிர்க்கும் பொருட்டு பின்பற்ற வேண்டிய செயல்முறைகள் பின்வருமாறு,



உரு 4.30

- பாதுகாப்பாகக் களஞ்சியப்படுத்துதல்
- பயன்படுத்துவதற்கு முன்னர் உறையில் தரப்பட்டிருக்கும் அறிவுறுத்தல்களை நன்கு வாசித்து விளங்கிக் கொள்ளல்
- சிறுவர்களுக்கு இலகுவில் எட்டக்கூடிய இடங்களில் வைக்காதிருத்தல்
- பொதி செய்யப்பட்ட உறைகளின் உள்ளே இருப்பது நஞ்சு என்பதற்கான அடையாளத்தை இட வேண்டும்



உரு 4.31

- அறிவுறுத்தல்களைச் சரியாகப் பின்பற்றல்
- பயன்படுத்தும் பொழுதும், தெளிக்கும் பொழுதும் அறிவுறுத்தல்களுக்கிணங்க கையுறை, தலைக்கவசம், பாதணி, வாயை மூடும் உறை என்பவற்றைப் பயன்படுத்தல்
- தேவையான அளவை மாத்திரம் கொள்வனவு செய்தல்
- பயன்படுத்திய இராசாயனப் பொருளின் வெற்றுப் போத்தல்களை வீட்டில் வைக்காதிருத்தல்
- வெற்றுப் போத்தல்களை நீர்நிலைகள் மற்றும் சூழலில் பாதிப்புகளை உண்டு பண்ணும் வகையில் போடாதிருத்தல்.

### செயற்பாடு 4.4

- பீடைக் கொல்லிகளைப் பாவிப்பதால் மனிதனுக்கும் சுற்றாடலுக்கும் ஏற்படும் தீமைகளைக் குறிப்பிடுக.
- இரசாயனப் பொருள் பாவனையினால் ஏற்படும் விபத்துகள் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்றன. இவற்றைக் குறைப்பதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகளைப் பட்டியற்படுத்துக.
- பயிர்ச் செய்கை நடவடிக்கைகளின்போது இரசாயனப் பதார்த்தங்களுக்கு பதிலாக நம்முன்னோர் பயன்படுத்திய உத்திகளைக் குறிப்பிடுக.

## வாழ்வதற்குத் தகுந்த வாழ்க்கைக் கோலத்திற்கு இசைவாக்கமடைதலும் நிலைத்து நிற்கும் அபிவிருத்தியின் முக்கியத்துவமும்

அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு அமைவாக இதுவரையில் பின்பற்றப்பட்டு வந்த பாரம்பரிய சிந்தனைகளிலிருந்து மீண்டு நவீன கண்ணோட்டத்துடன் சுற்றாடல் மற்றும் அபிவிருத்தி தொடர்பான விடயங்களை நோக்கும்பொழுது இயற்கை வளங்களை அதிகம் நுகர்வதற்கு அண்மைக் காலத்தில் ஏற்பட்ட கைத்தொழிற்புரட்சி, நவீனப்படுத்தல் போன்ற காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. அவ்வாறாயின் சமநிலையற்ற சமூக பொருளாதார நிலைமைகளுக்கு முன்னர் மனிதனது வாழ்க்கை முறையானது இயல்பாகவே நிலைத்து நிற்கும் அபிவிருத்தி எண்ணக்கருவுடன் தொடர்புபட்டதாக இருந்தது. எனினும், அபிவிருத்திச் செயற்பாடுகளின் பொழுது மனிதன் சுற்றாடலை மறந்து தனது தேவைகளை மாத்திரம் கருதிச் செயற்படுவதால் தற்போது சுற்றாடல் பல பாதிப்புகளை எதிர்கொண்டுள்ளது. இலங்கையில் இது முக்கிய பிரச்சினையாக உள்ளது.

அன்றைய இலங்கை கலாசாரத்தில் நிலைத்து நிற்கும் அபிவிருத்தியுடன் தொடர்புடைய வாழ்க்கை ஒழுங்கமைப்பொன்றை முன்னெடுத்துச் செல்லக்கூடிய தன்மையை கொண்டிருந்தது.

''தனக்கென வாழா பிறருக்குரியவன்''

எனும் இவ்வாறான பாடல்களின் உட்கருத்தும் நிலைத்து நிற்கும் அபிவிருத்தியையே குறிப்பிடுகின்றது எனலாம். இயற்கை வளங்களின் பயன்பாடு அவற்றைப் பாதுகாத்தல் போன்ற விடயங்கள் தொடர்பாகவும் பல்வேறு தொடர்பாடல் முறைகளை இதற்காக பயன்படுத்தியமை தொடர்பாகவும் இலக்கியங்கள் அறியத்தருகின்றன.

அந்த மரத்திலே
தேன்தோடை நிறையவே
முற்றி பழுத்து - நிலத்தில் வளைந்து
கிளைக்கு சுமை கூடியே
தங்கைக்கும் எனக்கும்
காய்கள் இரண்டு போதுமே
நிறைய பறிப்பது நல்லதல்லவே -நாம்
நல்ல பிள்ளைகளே

நாம் சிறுவர்களாக இருந்த காலங்களில் இவ்வாறான பாடல்களைப் பாடி இருப்போம். இத்தகைய பாடல்களின் மூலம் நிலையான அபிவிருத்திக்கான சிந்தனைகள் வெளிப்படுத்தப்படுவதனைக் காணலாம்.

## தாங்கக்கூடிய வாழ்க்கைக் கோலத்தையும் நுகர்வுக்கோலத்தையும் இனங்காணல்

தற்போதைய மனிதனின் தேவைகள் விரிவடைந்து காணப்படுகின்றன. இவற்றினை பூர்த்தி செய்து கொள்வதற்கு கிடைக்கின்ற வளங்கள் அரிது. ஆகவே, இருக்கின்ற வளங்களை எதிர்கால சந்ததியினருக்காகப் பாதுகாத்து வைப்பது எமது தலையாய கடமையாக இருக்கிறது. ஆகவே, நாம் அனைவரும் எமக்குத் தகுந்த வாழ்க்கை முறையொன்றினைப் பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும். **எமது அவசியத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள முயற்சி செய்கையில் தனது பொருளாதார வசதிக்கேற்ப பொருத்தமான வகையில் அவற்றை பூர்த்தி செய்து கொள்வதற்கு முயற்சிப்பது தகுந்த வாழ்க்கைக்கோலம் நுகர்வுக் கோலம் என்று குறிப்பிடப்படும்.**

நம் முன்னோர் எளிய வாழ்க்கைக்கும் நுகர்விற்கும் பழக்கப்பட்டிருந்தனர். அவர்கள் உணவு, உடை, உறையுள் போன்ற அடிப்படை தேவைகளில் திருப்தியுற்றனர். அவர்கள் அன்றாட செயற்பாடுகளின்போது எளிய கருவிகளை ஆயுதங்களாகப் பயன்படுத்தினர். எனினும், உலகமானது காலத்திற்குக் காலம் பல்வேறு மாற்றங்களுக்கு உட்படுகின்றது. மனிதர்களும் அவற்றிற்கு இசைவாக்கமுறுவர். பண்டைய காலத்தில் ஏற்பட்ட இத்தகைய மாற்றங்களுக்கேற்ப மனிதர்களும் தமது வாழ்க்கைத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு பல்வேறு மாற்றங்களை மேற்கொண்டனர். அவ்வாறான மாற்றங்களின்மூலம் அவர்களது வாழ்க்கைக் கோலத்திற்கும் சமூகத்திற்கும் பண்பாட்டிற்கும் எவ்வித பாதிப்புகளும் ஏற்படவில்லை.

அடிப்படைத் தேவைகளுக்கு மேலதிகமாக நம் முன்னோர் தமது தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதற்காக துவிச் சக்கர வண்டி, விறகு அடுப்பு போன்ற உபகர ணங்களை பயன்படுத்தினர். துவிச் சக்கர வண்டி அவர்களது குடும்பத்தின் பிரதான நண்பனாக இருந்தது. பிரயாணம் செய்யவும் பொருள்களை கொண்டு செல்லவும் தமது குடும்பத்தின் ஏனைய தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளவும் துவிச்சக்கர வண்டி பயன்படுத்தப்பட்டது.




உரு 4.32 துவிச்சக்கர வண்டியில் தொழிலுக்குச் செல்லல்

தற்காலத்தில் அபிவிருத்தி அடைந்த நாடுகள் தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டு சூழலுக்குப் பாதிப்புறாத ஒரு வாகனமாக துவிச்சக் கரவண்டியைப் பயன் படுத்துகின்றன. உதாரணமாக, ஜப்பான் நாட்டைக் குறிப்பிடலாம்.



உரு 4.33 துவிச்சக்கரவண்டியில் தமது குழந்தையைக் கொண்டு செல்லல்

ஜப்பானியர்கள் தமது அனேக பணிகளுக்கு துவிச்சக்கர வண்டியைப் பயன்படுத்து கின்றனர். துவிச்சக்கரவண்டியை உயர்ந்தோர், தாழ்ந்தோர் வேறுபாடின்றி அனைவரும் பயன்படுத்துகின்றனர்.

அவ்வாறே கடந்த நூற்றாண்டுகளில் மனிதன் தமது வயல் வேலைகளின் பொருட்டு பயன்படுத்திய வாகனமும் சூழலுக்குப் பங்கம் ஏற்படுத்தாத ஒரு வாகனமாக விளங்கியது. அவர்கள் அனேக விவசாய வேலைகளை இவ்வண்டியின் மூலமே செய்துகொண்டனர். பொருள்களை கொண்டு செல்லல், தமது பிரயாணங்களை மேற்கொள்ளல், விவசாயத் தேவைகளை நிறைவுசெய்தல் போன்றவற்றிற்கு இவ்வண்டி பயன்படுத்தப்பட்டது.



உரு 4.34 வயல் உழுதற்கும் விவசாயத் தேவைகாக பொருட்களை கொண்டு செல்லவும் பயன்படுத்தப்பட்ட இரு சில்லு உழவு இயந்திரங்கள்

## நிலைத்து நிற்கும் அபிவிருத்தி (Sustainable developmet)

*நிலைத்து நிற்கும் அபிவிருத்தி என்பது, '' எதிர்கால சந்ததியினருக்கு அவர்களது தேவைகளை நிறைவு செய்து கொள்வதற்கு எவ்வித இடையூறும் ஏற்படா வண்ணம் தற்கால சந்ததியினரின் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வது'' எனக் குறிப்பிடலாம்.*

மனிதர்களின் தேவைகள் பல்வேறுபட்டவை, அவற்றுள் முக்கியமானவை வருமாறு,

- உணவு, உடை, உறையுள்
- நீர், மின்சாரம்
- போக்குவரத்து
- கல்வி
- ஓய்வு மற்றும் பொழுது போக்குகளில் ஈடுபடல்
- சுகாதாரம் மற்றும் சுகாதாரப் பாதுகாப்பு தொடர்பான விடயங்கள்

ஆகவே, நாட்டின் ஒவ்வொரு பிரஜையும் தனக்குத் தகுந்த வாழ்க்கை முறைமையொன்றை ஏற்படுத்திக் கொள்வது தனக்கும் சமூகத்திற்கும் நாட்டிற்கும் பயனுள்ளதாக அமைவதுடன், அதன்மூலம் நிலைத்து நிற்கும் அபிவிருத்திக்குப் பங்களிப்பு வழங்கிய பிரஜை என்ற உணர்வையும் பெற்றிடலாம்.

நிலைத்து நிற்கும் அபிவிருத்தியியை ஏற்படுத்துவதற்கு நாம் அனைவரும் பங்களிப்பு நல்க வேண்டும். அதன்பொருட்டு கீழ்வரும் விடயங்களையும் நாம் கவனத்திற் கொள்ளல் வேண்டும்.

- ★ வளங்களை மிதமிஞ்சியவாறு பயன்படுத்தக் கூடாது
- ★ சூழலுக்கு இசைவாக வாழப் பழகுதல்
- ★ நாட்டின் சட்டதிட்டங்களுக்குக் கட்டுப்பட்டு செயற்படல்
- ★ கழிவுப் பொருட்களை உரிய முறையில் கையாளுதல்
- ★ பௌதீக வளங்களைப் பாதுகாத்தல்
- ★ சூழலுக்குப் பாதிப்பை ஏற்படுத்தாத மாற்று சக்தி மூலங்கள் தொடர்பில் கவனம் செலுத்துதல்
- ★ சிறந்த பிரஜையாக எப்பொழுதும் முன்மாதிரியுடன் செயலாற்றுதல்




உரு 4.35 முறையற்ற விதத்தில் கழிவுப் பொருட்களை அகற்றுதல்





உரு 4.36 முறையான விதத்தில் கழிவுப் பொருட்களை அகற்றுதல்

**வாழ்க்கை வட்ட முடிவு** **வாழ்க்கை நீடித்தல்** **புதிய வாழ்க்கை வட்டம்**




உரு 4.37




உரு 4.38

இக்காரணங்களுக்கு ஏற்ப செயற்படாத காரணத்தால் இன்று மனிதன் அதிகளவான நோய்களுக்கு ஆளாகியுள்ளான். எடுத்துக்காட்டாக,

- சிறுநீரக நோய்
- டெங்குக் காய்ச்சல்

போன்றவற்றைக் குறிப்பிடலாம். சிறியோர் முதல் பெரியோர் வரை இந்நோய்களுக்கு ஆளாவதைக் காணலாம். விவசாய நடவடிக்கைகளின்போது பயன்படுத்தப்படுகின்ற இரசாயனக் கிருமிநாசினிகளில் அடங்கியுள்ள 'கிளைக்கோசிக்' எனும் பதார்த்தமே உவர் வலயத்தில் பரவி வரும் சிறுநீரகப் பிரச்சினைக்கான காரணம் என்பது பொதுவான கருத்தாக உள்ளது. அடுத்து, கழிவுகளை ஒழுங்கான முறையில் அகற்றாமை டெங்கு நுளம்புகள் பெருகுவதற்கு காரணமாக உள்ளது.

இக்காரணங்களைத் தவிர்த்துக் கொள்வதற்குப் பொதுமக்களான எமக்கும் அரசுக்கும் பாரிய பொறுப்பு உள்ளது. எதிர்காலச் சந்ததியினரைப் பாதுகாப்பதற்காக நாமனைவரும் ஒன்றுபட்டு அப்பொறுப்பை ஒழுங்கான முறையில் நிறைவேற்ற வேண்டும். அதன்மூலமே நிலையான அபிவிருத்தியை ஏற்படுத்த முடியும்.

எமது முதியோர் ஒருபோதும் தம்மைப் பற்றி மாத்திரம் சிந்தித்துச் செயற்படவில்லை. அவர்கள் எப்போதும் எதிர்காலச் சந்ததியினரைக் கருத்திற் கொண்டே செயற்பட்டனர். தமக்குக் கிடைக்காத போதிலும் எதிர்காலத்தில் பிறக்கவிருக்கும் குழந்தைகளுக்குக் கிடைக்கும் பயன்கள் பற்றி அதிக அக்கறை செலுத்தினர். இதன்மூலம் அவர்களின் எதிர்பார்ப்பாக அமைந்தது யாதெனில், தாம் ஓரளவு அனுபவித்த பின்னர், எதிர்கால சந்ததியினருக்கும் அதனை மீதம் வைக்க வேண்டும் என்ற உன்னத எண்ணமாகும்.

## செயற்பாடு 4.5

- நிலைத்து நிற்கும் அபிவிருத்தி என்றால் என்ன?
- நிலையான அபிவிருத்திக்கு உங்களால் ஆற்றக்கூடிய பங்களிப்புகளைக் குறிப்பிடுக.
- நம் முன்னோர்கள் நிலைத்து நிற்கும் அபிவிருத்தி என்ற எண்ணக்கருவிற்கு ஏற்ப செயற்பட்ட முறைகளை அறிந்து, அவை பற்றிய தகவல்களைத் தேடிச் சுவர்ப்பத்திகையில் காட்சிப்படுத்துக.
- குறைந்த செலவில் போசணைமிக்க உணவு வேளையொன்றை எவ்வாறு தயார் செய்யலாம் என்பது பற்றி பெரியவர்களிடம் கேட்டறிந்த உணவுப் பட்டியலொன்றைத் தயாரிக்க (உங்களது வீட்டுச் சூழலில் இலவசமாக பெற்றுக்கொள்ளக் கூடிய பொருள்கள் பற்றி கவனம் செலுத்துக)
- துவிச்சக்கர வண்டி, ட்ரக்டர் வண்டி ஆகியன மூலம் கிடைக்கும் சேவைகள் தொடர்பாக இணையத்தளத்தைப் பயன்படுத்தித் தரவுகள், மற்றும் தகவல்களைச் சேகரித்து சிறு நூலொன்றை ஆக்குக.

## பொழிப்பு

⇨ எமது வாழ்க்கையில் இயற்கை அனர்த்தங்களுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலை ஏற்படலாம்.

⇨ மனித செயற்பாடுகளின் காரணமாக இயற்கை அனர்த்தங்களின் பாதிப்புகள் உக்கிர மடையலாம்.

⇨ இயற்கை அனர்த்தங்கள் ஏற்படக்கூடிய நிலைமைகளை இனங்கண்டு அதனால் ஏற்படக் கூடிய பாதிப்புகளைக் குறைப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகப் பிரஜைகள் கவனம் செலுத்த வேண்டும்.

⇨ வாழ்வின் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஏற்படும் ஆபத்துகளின் சேதங்களைக் குறைத்துக் கொள்ள முடியும்.

⇨ அனர்த்தங்கள் ஏற்பட்ட சந்தர்ப்பத்தில் புத்திசாதுர்யமாக நடந்து கொள்ளல் பிரஜைகளின் பொறுப்பும் கடமையுமாகும்.

- அனர்த்தங்கள் மற்றும் விபத்துக்கள் ஆகியன பற்றி அறிந்து இடர் முகாமைத்துவ செயன்முறைக்கு உதவுவதன் மூலம் நாட்டின் நிலைத்து நிற்கும் அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்யலாம்.
- தற்காலத்தில் வீதி விபத்துகள் இரசாயனப் பொருளின் மூலமான ஆபத்துகளும் அதிகரித்து வருகின்றன.
- வீதி விபத்துகள், இரசாயன பொருள்களினால் ஏற்படும் விபத்துகள் தொடர்பாக விளங்கிக் கொள்வதன்மூலம் அவற்றின் விளைவுகளில் இருந்து தப்பிக்கலாம்.
- விபத்துகள் மற்றும், இடர்கள் ஏற்பட்ட வேளைகளில் பாதிப்புற்றோருக்கு உதவுவது நற்பிரஜை ஒருவரது பொறுப்பும் கடமையுமாகும்.

# 5 பிரச்சினைகளைத் தீர்த்து சவால்களை வெற்றி கொள்வோம்

## அறிமுகம்


தனிப்பட்ட வாழ்க்கையைப் போலவே சமூக வாழ்க்கையிலும் மனிதன் பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுக்கிறான். அவற்றை வெற்றிகரமாக எதிர்கொள்வதற்கான சக்தியை அவனிடத்தே வளர்ச்சி பெறச் செய்வது முக்கியம்.

**இந்த அத்தியாயத்தைக் கற்பதனால் உங்களால்,**

- தற்காலப் பிள்ளைகளிடத்தேயுள்ள பிரச்சினைகளையும், சவால்களுக்கு வெற்றி கரமாக முகங்கொடுக்கும் ஆற்றலில் உள்ள குறைபாடுகளையும் இனங்காணவும்,
- மாணவர்களின் பிரச்சினைகளை இனங்கண்டு, பகுப்பாய்வு செய்து, ஆக்கத் திறன்மிக்க மாற்றுவழிகள் மூலம் சரியான தீர்மானங்களை மேற்கொள்ளவும் சவால்களை வெற்றிகொள்ளத் தேவையான ஆற்றலை விருத்தி செய்யவும்,

**முடியுமாக இருக்கும்.**

இயற்கையின் அடிப்படைச் செயற்பாடுகளாக உருவாக்கம், நிலைபேறு, அழிவு எனும் மூன்று அம்சங்களும் விளங்குகின்றன. இவை இவ்வுலகின் உயிருள்ள, உயிரற்ற அனைத்திற்கும் பொதுவானது.



உரு 5.1


பிரச்சினைகளும் சவால்களும் அவ்வாறானதே. பிரச்சினை என்பது இரு பக்கங்களைக் கொண்டது. அதாவது ஒருவருக்குப் பிரச்சினையான விடயம் மற்றவருக்குப் பிரச்சினையாக அமையாது. உதாரணமாக, ஆற்றைக் கடப்பது முயலுக்குப் பிரச்சினையான விடயமான போதிலும் ஆமைக்கு அது ஒரு பிரச்சினையான விடயமாக இருக்கவில்லை. அதேபோன்று, முயலுடன் ஓட்டப் பந்தயத்தில் ஈடுபடுவது ஆமைக்குப் பிரச்சினையான போதிலும் முயலுக்கு அது ஒரு பிரச்சினையின் விடயமாக அமையவில்லை. அதேபோன்று, பிரச்சனை என்பது, தனிநபர்களைப் பொறுத்தும் சந்தர்ப்பங் களைப் பொறுத்தும் வேறுபடலாம்.



உரு 5.2

பிரச்சினை என்பது, ஒரு செயற்பாட்டை அல்லது ஒரு நிலைமையை அல்லது ஒரு சந்தர்ப்பத்தை அடைவதற்குள்ள தடை எனக் குறிப்பிடலாம். குறித்த நேரத்தில் காணப்படும் நிலைமை மற்றும் தான் எதிர்பார்க்கும் விடயம் என்பவற்றை அவ்வாறே நிறைவேற்றுவதற்கு முடியாமற் போதல் மற்றும் தனக்கும் அவற்றுக்குமிடையிலான இடைவெளியே பிரச்சினையாகும் எனலாம்.

எனவே, பிரச்சினை என்பது மனித வாழ்க்கையின் ஓர் இயல்பான விடயமே. அத்துடன் தான் எதிர்பார்க்கும் விடயத்தை தான் நினைத்தவாறே நிறைவேற்றிக் கொள்ள முடியாமற் போவதால் பிரச்சினை என்பது அடிக்கடி உருவாகும்.




இதுபோன்ற பிரச்சினைகள் உங்களின் தனிப்பட்ட வாழ்க்கையிலும் பாடசாலை வாழ்க்கையிலும் குடும்ப வாழ்க்கையிலும் சமூக வாழ்க்கையிலும் தொழில் வாழ்க்கையிலும் அடிக்கடி ஏற்படலாம். அவ்வாறு ஏற்படுவதற்கான காரணம் யாதெனில் நாம் உண்மையான பிரச்சினைகளைச் சரியாக இனங்காணாது புரிந்துணர்வின்றி பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முற்படுவதனாலாகும்.


சில சந்தர்ப்பங்களில் பிரச்சினைக்குத் தீர்வு கிடைத்தாலும் அது பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வாக அமையாது. எனவே, அதே பிரச்சினைகள் மீண்டும் ஏற்படுவது தவிர்க்க முடியாததாக அமைகின்றது. மனித மனங்களில் ஏற்படுகின்ற தீராத ஆசைகள் மற்றும் அளவற்ற எதிர்பார்ப்புகள் காரணமாக எப்போதும் பிரச்சினைகளால் வாழ்நாள் முழுவதும் துன்பத்துக்குள்ளாகலாம். அவற்றைத் தீர்ப்பதற்கு உதவி செய்வதும் மிக முக்கியமானதாகும்.

## மாணவர்கள் முகங்கொடுக்க நேரிடும் பிரச்சினைகள்

- உணவும் போசணையும் தொடர்பான பிரச்சினைகள்
- பொருளாதார நெருக்கடிகள்
- தான் விரும்பியது கிடைக்காமை
- பரீட்சைகளில் சித்தியடையாமை
- பாதுகாப்பும் பராமரிப்பும் இல்லாமற் போதல்
- அன்பு கிடைக்காமை
- பாடசாலைகளில் வளப் பற்றாக்குறை
- விளையாடுவதற்கும் ஓய்வெடுப்பதற்கும் நேரம் கிடைக்காமை
- போட்டித்தன்மைமிக்க பரீட்சைகளுக்கு அடிக்கடி தோற்ற வேண்டியேற்படுதல்
- பாடசாலைச் சூழலில் ஏற்படும் மன உளைச்சல்


## பிரச்சினைகளுக்கான காரணங்களை இனங்காணல்

பிரச்சினை ஏற்பட்டிருக்கும்போது அதற்கான தீர்வைக் காண்பதும் அதில் செல்வாக்குச் செலுத்தியுள்ள காரணங்களை அறிவதும் முக்கியமானதாகும். பொதுவாக, பிரச்சினைகளுக்குத் தனிநபரும், அவரது துலங்கல் செயற்பாடும் காரணமாக அமைகின்றன. பிரச்சினையைப் பகுப்பாய்வு செய்வதன் மூலம் பிரச்சினைக்கான காரணங்களைக் கண்டறியலாம். பின்வரும் உருவில் காட்டப்பட்டுள்ள விதத்தில் எந்தவொரு பிரச்சினையையும் பகுப்பாய்வு செய்து அதில் செல்வாக்குச் செலுத்தியுள்ள காரணிகளை அறிந்து கொள்ள முடியும்.



இதற்கமைய, பிரச்சினை தொடர்பான காரணிகளைக் கண்டறிவதன்மூலம் மிக இலகுவாகக் குறிப்பிட்ட பிரச்சினைக்குத் தீர்வு காணலாம். பிரச்சினைக்கான காரணங்களைக் கண்டறியும்போது மாற்றுத் தீர்வுகளிலும் அவதானத்தைச் செலுத்த முடியும். ஒரு பிரச்சினைக்குப் பல்வேறு மாற்றுத் தீர்வுகள் காணப்படலாம். அவற்றுள் சிறந்த தீர்வைத் தெரிவு செய்வது முக்கியமானதாகும்.

இன்றைய சமூகத்தில் ஒரு பிரச்சினை ஏற்படும்போது சிலர், அதற்குப் பயப்படுதல், பயந்து ஓடுதல், விட்டு விலகல், பழிவாங்குதல் எனும் பிழையான துலங்கள்களை வெளிப்படுத்துவதைக் காணமுடிகின்றது. அதற்குக் காரணம் பிரச்சினை தொடர்பாக உணர்ச்சிவசப்படுதல் மற்றும் முறையற்ற ரீதியில் பிரச்சினையை எதிர்கொள்ளல் என்பனவாகும். எனவே, பிரச்சினை ஒன்று ஏற்படும்போது, அதனை முறையாகவும் ஆக்கபூர்வமாகவும் எதிர்கொள்வதற்கு நடவடிக்கையெடுத்தல் முக்கியமானதாகும். பிரச்சினை காரணமாக ஏற்படும் தாக்கத்தினைக் குறைத்துக் கொள்வதற்குப் பிரச்சினைக்கான மாற்றுவழிகள் மூலம் சரியான தீர்வுகளைப் பெற்றுக் கொள்ளலாம்.




## பிரச்சினைக்கான தீர்வைத் தேடுதல்

ஒரு பிரச்சினையிலிருந்து மீள்வதாயின், அதற்கான தீர்வைத் தேடுவது மிகவும் முக்கியமானதாகும். பிரச்சினைக்குத் தீர்வைத் தேடும்போது அதுபற்றிய போதிய புரிந்துணர்வும் தெளிவும் இன்றியமையாததாகும். அதனூடாகவே பொருத்தமான தீர்வை நாம் பெற்றுக் கொள்ள முடியும்.

உதாரணமாக, நீங்கள் பாடங்களில் குறைந்த புள்ளிகளைப் பெறுகின்றீர்கள் எனில் இப்பிரச்சனைக்கான தீர்வாக மேற்கொள்ளக் கூடிய செயற்பாடுகளைப் பின்வருமாறு முன்வைக்கலாம்.

தினசரி பாடசாலைக்குச் செல்லுதல்

↓

கற்றல் செயற்பாடுகளுக்குத் தயாராகச் செல்லுதல்

↓

ஆர்வத்துடன் பாடங்களில் பற்குபற்றல்

↓

சந்தேகங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ளல்

↓

விட்டுக்கொடுப்புடனும் அர்ப்பணிப்புடனும் செயற்படுதல்

↓

தனக்குப் பொருத்தமற்ற செயற்பாடு களிலிருந்து விலகுதல்

↓

கற்ற விடயங்களை மீண்டும் கற்றல்

↓

மீட்டல் பயிற்சிகளில் ஈடுபடுதல்

↓

பரீட்சையைப் பயமின்றி எதிர்கொள்ளல்

பிரச்சினையைத் தீர்க்கும்போது அதனைப் பகுப்பாய்வு செய்து முறையாகவும் ஆக்கபூர்வமாகவும் செயற்படுதல் முக்கியமானதாகும்.

**செயற்பாடு 5.1**

- உங்களுக்கு அல்லது நண்பர்களுக்கு ஏற்பட்டுள்ள பிரச்சினை ஒன்றைத் தெரிந்து அப்பிரச்சினைக்கான காரணத்தை அறிந்து கொள்ளுங்கள்.
- அப்பிரச்சினைக்குத் தீர்வாக மேற்கொள்ளக்கூடிய செயற்பாடுகளை மேலே உள்ள உருவில் குறிப்பிட்டவாறு குறித்துக் கொள்ளுங்கள்.
- அப்பிரச்சினைக்குரிய மாற்றுத் தீர்வை முன்வைத்து விளக்குங்கள்.

## சவால்களை வெற்றி கொள்வோம்

வாழ்க்கையின் இலக்குகளை அடைவதற்குள்ள பல்வேறு தடைகள் சவால்களாகும்

வாழ்க்கையில் ஏற்படும் சிரமங்கள் சவால்களாகும்



பரீட்சையும் எமக்கு ஒரு சவாலாகும்

விளையாட்டிலும் எமக்கு சவால்கள் ஏற்படுவதுண்டு



வறுமையை வெற்றி கொள்வதும் சவாலாகும்



இயற்கையை வெற்றி கொள்வதும் சவாலாகும்




எமக்குப் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் சவால்கள் ஏற்படுகின்றன.



நீங்கள் அனைவரும் கூறும் விடயங்கள் சரியானதே. அவ் எல்லா நிலைமைகளுக்கும் வெற்றி கரமாக முகங்கொடுப்பதன் மூலம் அனைத்து சவால்களையும் முறியடித்து வெற்றி பெறலாம்.






## சவால்களை வெற்றி கொண்ட நிக்ஸ் " Nick Vujicic"

பிறப்பிலே அங்கவீனராகப் பிறந்த திரு. நிக்ஸ் தனது வாழ்க்கையை வெற்றி கொண்ட விதத்தைப் பின்வரும் புகைப்படங்கள் அறியத் தருகின்றன.



உரு 5.3


உரு 5.4


உரு 5.5


உரு 5.6


உரு 5.7


உரு 5.8

**மன உறுதியின் மூலம் சவால்களை முறியடித்து வெற்றி பெற்ற ஒரு பாடசாலை மாணவனின் கதை இது.**

அது ஓர் அழகிய கிராமம். அங்கு பிறந்த ஒரு குழந்தை தனது மூன்றாவது வயதில் துரதிஷ்டவசமாக ஒரு விபத்தில் சிக்கிக் கொண்டது. ஆம்! அச்சிறுவனின் வீட்டிற்குப் பின்னால் உள்ள மேட்டில் இறப்பர் மரங்கள் வெட்டி வீழ்த்தப்படும் வேளை, அவ்வழியாகச் சென்ற அச்சிறுவன் மீது எதிர்பாராத விதமாக விழுந்த மரம், அவனின் கால்களைப் பறித்துக் கொண்டது. தன் கால்களை இழந்த போதிலும், அவன் கவலைப்படவில்லை. தனது கல்வியை வெற்றிகரமாக முடித்து நாட்டிற்குப் பயனுள்ள நல்லதொரு பிரஜையாவதே அவனது இலட்சியமாக இருந்தது. தனது குடும்பத்தையும் தாய் தந்தையரையும் கவனிக்க வேண்டும் என்ற கனவோடு ஒரு நாளைக்கு ஆறு மைல் தூரம் ஊன்று கோலின் உதவியுடனும் புத்தகப்பையின் சுமையுடனும் பாடசாலை சென்று வந்தான். பாடசாலையிலும், ஊரிலும் பிரபல்யமான ஒரு மாணவனாகத் திகழ்ந்த அவனுக்குப் பல்கலைக் கழகம் செல்லவும் வாய்ப்பு கிட்டியது. அவன் திறமையான பேச்சாளனாகவும், சிறந்த தலைமைத்துவப் பண்புள்ளவனாகவும் விளங்கினான். அங்கவீனர்களுக்கான விளையாட்டுப் போட்டிகளிலும் பங்குபற்றி பரிசுகளைப் பெற்றான். அவன் ஒரு முறை சிகிரியா மலையையும் ஏறிச் சென்று பார்வையிட்டான். பட்டப்படிப்பை முடித்து அரச ஊழியரான அவன் அங்கு தொழிற்சங்கத் தலைவனாகத் தெரிவாகித் தன் திறமைகளை வெளிப்படுத்தினான். தொழில் வாழ்க்கையை வெற்றிகரமாக முன்னெடுத்த அவன், தனது மனத் தைரியத்தால் தனக்கு நேரிட்ட துன்பகரமான நிகழ்வை மறந்து, தனக்கேற்பட்ட சவால்களை வெற்றிகரமாக எதிர்கொண்டு வாழ்க்கையையும் வெற்றி கொண்டான்.


**தினசரி வாழ்வில் எதிர்நோக்கும் சவால்கள்**

- பொருளாதாரக் கஷ்டங்களுக்கு மத்தியில் கல்வி நடவடிக்கைகளை வெற்றி கொள்ளல்
- பரீட்சைகளில் வெற்றி பெறுதல்
- தோல்விகளை வெற்றிகரமாக எதிர்கொண்டு தனது நோக்கங்களை அடைதல்
- வாழ்க்கையின் இலக்கை அடைதல்
- தடைகளைத் தகர்த்தல்
- தவறுகளைத் திருத்திக்கொள்ளல்
- சுற்றாடலைத் தூய்மையாக வைத்திருத்தல்
- முரண்பாடுகளற்ற வகையில் சமாதானமாக வாழ்தல்

மேற்கூறியவாறு தனிப்பட்ட வாழ்க்கையிலும் சமூக வாழ்க்கையிலும் நாம் பல்வேறு சவால்களை எதிர்கொள்ள நேரிடுகிறது. எனவே, அவற்றுக்கு வெற்றிகரமாக முகங் கொடுத்து தோல்வியைக் கண்டு துவண்டுவிடாது, அவற்றுக்கு சவால் விடுத்து வாழ்க்கையை வெற்றி கொள்வதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுவது மிக முக்கிய மானதாகும்.

## பிரச்சினை மற்றும் சவால்களை வெற்றிகரமாக எதிர்கொள்ளல்

''நான் தோல்வியடையவில்லை. மின்குமிழ் ஒன்றைத் தயாரிக்கக் கூடிய மற்றுமொரு முறையைக் கண்டுபிடித்துள்ளேன்.''




உரு 5.9

மேற்படிக் கூற்று, தோமஸ் அல்வா எடிசன் மின்குமிழைக் கண்டுபிடிப்பதற்காக மேற்கொண்ட பரிசோதனைகளில் *999* தடவைகள் தோல்வியடைந்திருந்தபோது, அவரது நண்பர் ஒருவர் ''நீ *1000* ஆவது தடவையும் தோற்கப் போகிறாயா?'' என்று கேட்ட கேள்விக்கான பதிலாக அமைந்தது.

**செயற்பாடு 5.2**

- எமது நாட்டில் வாழ்ந்த அல்லது வாழும் ஒருவர் இவ்வாறான சவால்களுக்கு முகங்கொடுத்து வெற்றி கொண்ட நபர் ஒருவர் பற்றிய தகவல்களைத் திரட்டி கதை ஒன்றை உருவாக்குங்கள்.
- அதன் மூலம் பெறத்தக்க முன்மாதிரியை விளக்குங்கள்.
- தினசரி வாழ்விலும் பாடசாலையிலும் குடும்பத்திலும் எதிர்கொள்ள நேரிடும் சவால்கள் சிலவற்றைப் பட்டியலிடுங்கள்.
- அவ்வாறான ஒரு சவாலை வெற்றிகரமாக முறியடிப்பதற்கான செயற் பாட்டை முன்வையுங்கள்.




மேற்கூறியவாறு சவால்களை வெற்றிகொள்வதற்கான மன வலிமையை சிறு பராயம் தொட்டே வளர்த்துக்கொள்வது முக்கியமானதாகும். சிறப்பாக உள ரீதியான ஆற்றல்களை மேம்படுத்திக்கொள்வது அவசியமானது. இவ்வாறான பண்புகளை வளர்த்துக்கொள்வதன் மூலம் தமது ஆளுமையை வளர்த்துக் கொள்ள முடியும். அர்ப்பணிப்புகள் மேம்படும்போது சவால்களுக்கு வெற்றிகரமாக முகங்கொடுப் பதற்கான சக்தியும் மேம்பாடடையும்.

## வாழ்க்கையின் பல்வேறு பிரச்சினைகள் மற்றும் சவால்களை வெற்றிகரமாக எதிர்கொள்ளல்

பல்வேறுவிதமான பிரச்சினைகளையும் அவற்றின் மூலமான சவால்களையும் வெற்றி கொள்வதற்கு ஆக்கபூர்வமான முறைகளைப் பயன்படுத்துதல் முக்கியமானதாகும். மனிதனின் அனைத்துக் கண்டுபிடிப்புக்களும் ஆக்கங்களும் சவால்களின் விளைவுகளாகும். தீயைக் கண்டுபிடித்தது முதல் நவீன தொழினுட்பம், விண்வெளிப் பயணங்கள் வரையிலான அனைத்து முயற்சிகளும் சவால்களின் விளைவுகளாகும்.


பின்வரும் புகைப்படங்கள் மனிதன் சவால்களை வெற்றி கொள்வதற்காக மேற்கொண்ட செயற்பாடுகளாகும்.



உரு 5.10



உரு 5.11



உரு 5.12



உரு 5.13



உரு 5.14



உரு 5.15



உரு 5.16



உரு 5.17



உரு 5.18

## சவாலை வெற்றி கொண்ட ஹொன்டா

1906 ஆம் ஆண்டு ஜப்பானில் பிறந்த திரு. சொயிசிரோ ஹொன்டா அவர்கள் இரண்டாம் உலகப் போரில் அழிவடைந்த ஜப்பான் நாட்டு மக்களுக்கு போக்குவரத்து முறையொன்றிற்கான எளிய சாதனம் ஒன்றை அறிமுகப் படுத்தினார். இதற்குக் காரணம் அவரது ஆக்கபூர்வமான மன ஆற்றலாகும். முழு நாடும் பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுக்க நேரிட்டதுடன் திரு. ஹொன்டா அவர்களும் பல்வேறு கவலைகள், தடைகள், பின்னடைவுகள் போன்றவற்றை அனுபவித்தார். ஆயினும், அவரால் அவற்றை வெற்றிகரமாக எதிர்கொண்டு முன்னேற முடிந்தது. அதற்குக் காரணம் அவரது மன வலிமையாகும். அவரது ஆக்கபூர்வமான படைப்பு இன்று ஜப்பானியருக்கு மட்டுமல்ல முழு உலகத்திற்குமே பயனுள்ளதாக அமைந்துள்ளது.




உரு 5.19



உரு 5.20

## எந்தவொரு பிரச்சினைக்கும் சவாலுக்கும் தீர்வு உண்டு


அதிகமான பிரச்சினைகள் மனிதனின் வெளிவாரியான செயற்பாடுகளாலே ஏற்படு கின்றன. தாம் செய்யும் செயல்களைச் சரியாக நிறைவேற்ற முடியாத சந்தர்ப் பங்களிலேயே பிரச்சினைகள் தோன்றுகின்றன.

சரியான நோக்கங்களோ இலக்குகளோ இன்றிச் செயற்படும்போது எந்தவொரு செயற்பாடும் தோல்வியிலேயே முடியும். ஏனெனில், அதற்கான உறுதியான அடித்தளமொன்று இன்மையாகும். ஒரு செயற்பாட்டை இயல்பாகச் செயற்பட விட்டுவிடாமல் அதனைச் சரியான பாதையில் கொண்டு செல்வதை நோக்காகக் கொள்வதன் மூலம் பிரச்சினைகளை வெற்றிகரமாகத் தீர்க்க முடியும். ஒரு பிரச்சினைக்கு ஒரு தீர்வு மாத்திரமல்ல; மாறாகப் பல்வேறு மாற்றுத் தீர்வுகள் காணப்படலாம். சிலர் சில பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியாமல் திண்டாடுவது பிரச்சினை பற்றிய தெளிவினைப் பெற்றுக் கொள்ளாமையினாலாகும். ஒரு பிரச்சினையைப் பல்வேறு கோணங்களிலிருந்தும் பார்ப்பதன்மூலம், அதற்கான மாற்றுத் தீர்வுகளைக் கண்டறியலாம்.

பொருளாதாரப் பிரச்சினைக்குள்ளான மாணவன் ஒருவன்,

- தனது கல்வியை இடைநிறுத்துவதா?
- ஏதேனுமொரு வழியில் பணத்தைத் தேடி, அப்பணத்தைக் கல்விக்குச் செலவிடுவதா? அல்லது பாடசாலையிலிருந்து இடைவிலகி வேலைக்குச் செல்வதா?
- உதவி செய்வதற்கான நிறுவனங்கள் அல்லது தனிநபர்களை அணுகி அவர்களிடமிருந்து உதவியைப் பெற்றுத் தனது கல்வியைத் தொடர்வதா?

எனும் வகையில் எந்தவொரு பிரச்சினையையும் தீர்ப்பதற்குத் தேவையான மாற்றுத் தீர்வுகளை அணுகமுடியும்.



உரு 5.21

எந்தவொரு பிரச்சினைக்கும் சவாலுக்கும் பல்வேறு தீர்வுகள் உண்டு. சவால் என்பது இன்பகரமான ஓர் அனுபவமல்ல. அது மிகவும் சிரமமானதொரு அனுபவமாகும். அவ்வனுபவத்திற்கு வெற்றிகரமாக முகங்கொடுக்கும்போது வெற்றியை இலகுவாக அடைய முடியும். ஒலிம்பிக் போட்டியில் இலங்கைக்குப் பதக்கம் ஒன்றைப் பெற்றுக் கொடுத்த பிரபலமான விளையாட்டு வீராங்கனை சுசந்திகா ஜயசிங்க அவர்கள் தனது எதிர்பார்ப்பை நிறைவேற்றிக் கொண்டது தனது சிரமமான பயிற்சி மற்றும் தியாகம் என்பவற்றாலாகும். இலங்கையின் கஷ்டப் பிரதேசமொன்றில் பிறந்து வளர்ந்து பொருளாதாரப் பிரச்சனைகளுக்கு மத்தியில் கல்வி கற்கும்போது ஒலிம்பிக் போட்டியில் கலந்து கொள்வதென்பது சுசந்திகாவிற்கு கனவாகவே இருக்கும். ஆனால், தெளிவான இலக்கும் உறுதியான இலட்சியமும் அர்ப்பணிப்பும் இருந்தால், எந்தவொரு சவாலையும் முறியடிப்பதற்கான ஆற்றல் கிடைக்கும் என்பதைச் சுசந்திகாவின் ஒலிம்பிக் வெற்றியின் மூலம் அறிந்து கொள்ளலாம்

மனிதனது நாளாந்த வாழ்க்கையில் அவன் பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுக்க நேரிடுகின்றான். அவ்வாறான சந்தர்ப்பங்களில் தப்பியோடல், பயப்படுதல் ஆகியன தனி மனித ஆளுமைக்கும் சமூக ஆளுமைக்கும் பங்கமேற்படுத்தும் விடயங்களாகின்றன.

- இல்லை, முடியாது என்று எதுவுமில்லை. அச்சொற்களுக்கு அடிமையானால் என்னால் முடியாது எனும் கருத்து மனதில் ஆழப்பதிந்து அதன்மூலம் எதிர் மறையான சிந்தனைகளே ஏற்படும்.
- எனவே சவால்களை எதிர்கொள்ளும்போது என்னால் முடியும் எனும் நம்பிக்கை மிகப் பிரதானமானது. உதாரணமாக எமது பாடசாலையில் ஐம்பது வீதமான

மாணவர்கள் ஆண்டு தோறும் கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் சித்தியடைவதில்லை. இவ்வாறான மாணவர்கள் இப்பாடம் கடினமானது; என்னால் முடியாது; நினைவில் வைத்துக் கொள்ள முடியவில்லை; ஆங்கிலத்தில் பேச முடியவில்லை எனும் எதிர் மறையான சிந்தனைப் போக்குள்ளவர்களாகவே காணப்படுகின்றனர். அதன்மூலம், அவர்களின் பரீட்சைப் பெறுபேறுகளும் குறைவடைகின்றன. எனவே என்னால் முடியாது எனும் மனப்பாங்கை மாற்றி என்னால் நன்றாகக் கணிதம் செய்ய முடியும் என்னால் நன்றாக ஆங்கிலம் பேச முடியும் எனும் நேர்ச் சிந்தனையுடன் செயற்படுவார்களாயின் மிகவும் இலகுவாகப் பரீட்சையில் சித்தியடைய முடியும். எனவே, எந்தவொரு பிரச்சினைக்கும் தீர்வு உண்டு என்பதை இதன்மூலம் விளங்கிக்கொள்ளல் வேண்டும்.

**செயற்பாடு 5.3**

- நீங்கள் அடிக்கடி முகங்கொடுக்க நேரிடும் பிரச்சினை அல்லது சவால் ஒன்றைத் தெரிவுசெய்து அதற்கான மாற்றுத் தீர்வுகளைக் குறிப்பிடுக.
- உங்கள் மனதிலிருக்கும் இயலாது, முடியாது எனும் எதிர்மறை எண்ணங்களை விட்டு, என்னால் சிறப்பாகச் செயல்பட முடியும் எனும் நேர்மறைச் சிந்தனையை வளர்ப்பதற்கான வாசகங்களை எழுதுக.

**வாழ்க்கையை வெற்றிகரமானதாக உருவாக்குவதற்கு பிரச்சினைகளையும் சவால்களையும் மாற்றியமைக்கும் வழிகள்**

- உளத்திடத்தை வளர்த்தல் → நோக்கமொன்றை அடைவதற்கான உறுதியை ஏற்படுத்திக் கொள்ளல்
- பல்வேறுபட்ட ஆக்கங்களை உருவாக்கல் → புத்தாக்கங்களை உருவாக்குதல்
- தவறுகளைத் திருத்திக் கொள்ளல் → தனிநபர் நடத்தைகள், சமூக நடத்தைகள் மூலம் ஏற்படும் பிரச்சினைகளை இனங்காணல்
- மாற்றுத்தீர்வுகள் தொடர்பான ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளல் → சிரமமான வேளையில் தனிநபர் ரீதியிலான பிரச்சினைகளுக்குத் தீர்வு

## செயற்பாடு 5.4

- சவால்கள் அல்லது பிரச்சினைகள் சிலவற்றைக் குறிப்பிட்டு அவற்றை வெற்றிகொள்ள மேற்கொண்ட நடவடிக்கைகளைக் கீழே உள்ள அட்டவணையில் பூரணப்படுத்துக.

| சவால்கள் / பிரச்சினைகள் | தீர்வு |
|---|---|
| | |

## செயற்பாடு 5.5

- பாடசாலை மாணவர்கள் எதிர்நோக்கும் பல்வேறு விதமான பிரச்சினைகள் சவால்கள் பற்றிய பத்திரிகைச் செய்திகளை அடிப்படையாகக் கொண்டு அந்நிலைமைகளிலிருந்து மாணவர்களை மீட்பதற்குச் செய்ய வேண்டிய செயற்பாடுகள் பற்றிக் கலந்துரையாடுக.

### பொழிப்பு

- ⇨ பிரச்சினைக்கான தீர்வின்போது அதனைப் பகுப்பாய்வு செய்து விமர்சன ரீதியாகவும் ஆக்கபூர்வமாகவும் செயற்படுதல் முக்கியமானதாகும்.
- ⇨ வாழ்க்கையின் இலக்குகளை வெற்றிகொள்வதற்கான பல்வேறு தடைகள் சவால்கள் எனப்படும்.
- ⇨ வாழ்க்கையில் ஏற்படும் பல்வேறு பிரச்சினைகளுக்கும் சவால்களுக்கும் வெற்றிகரமாக முகங்கொடுத்தல் அவசியமாகும்.
- ⇨ எந்தவொரு பிரச்சினைக்கும் சவாலுக்கும் தீர்வு உண்டு.
- ⇨ பிரச்சினைகள், சவால்கள் என்பவற்றை வாழ்க்கையின் வெற்றிக்காகப் பயன் படுத்தும் முறைகளை அறிந்து கொள்வது முக்கியமானதாகும்.

# 06 வேலை உலகிற்குப் பிரவேசிப்போம்

## அறிமுகம்

இன்று, கல்வி என்பது தனிநபர் வாழ்க்கையில் செல்வாக்குச் செலுத்தும் பிரதான சாதனமாகத் திகழ்கின்றது. கல்வி தனிநபரின் திறமைகளை வளர்த்து அவர்களை எதிர்காலத் தொழில் வாழ்க்கைக்கு தயார்ப்படுத்துகிறது.

**இந்த அத்தியாயத்தைக் கற்பதனால் உங்களால்,**

- வேலை உலகுக்கான வரைவிலக்கணங்களை அறிந்து கொள்ளவும்,
- தொழில் மேன்மையுடன் நடந்து கொள்ளலின் முக்கியத்துவத்தை விளங்கிக் கொள்ளவும்,
- பயிற்சி பெற்ற உழைப்பின் முக்கியத்துவத்தை அறிந்து கொள்ளவும்,
- சிறந்த உழைப்பாளியொருவரின் பண்புகளை விளங்கிக் கொள்ளவும்,

**முடியுமாக இருக்கும்.**

''நான், எனது விருப்பிற்கமைய தொழில்செய்ய விரும்புகின்றேன். நான் தொழில் மூலம் பணத்தை மட்டும் எதிர்பார்க்கவில்லை. வெவ்வேறு தொழில்களைப் புரிவதன் மூலம் சமூகத்திற்கு சேவையாற்றுவதுடன் புதிய விடயங்களைக் கற்றுக் கொள்ளவும் விரும்புகின்றேன் இன்று ஒவ்வொருவரினதும் வாழ்வில் செல்வாக்குச் செலுத்துகின்ற பிரதான ஒன்றாக கல்வி விளங்குகிளன்றது.''

மேற்படி கூற்றானது தான் விரும்பும் தொழில் பற்றி தரம் 8 மாணவரிடம் கேட்டபோது கிடைத்த விடைகளுள் ஒன்றாகும். இப்பதிலில் பொதிந்துள்ள கருத்து யாது? தொழிலின் மூலம் நிறைவேற்ற எதிர்பார்க்கப்படும் நோக்கங்கள் மூன்றாகும். அவற்றை உங்களால் இனங்காண முடிந்ததா?

நீங்கள் எதிர்காலத்தில் செய்ய விரும்பும் தொழில் எது என்று கேட்டால் உங்கள் விடை யாது? பொதுவாக மாணவர் கூறும் விடைகளைப் பின்வருமாறு அட்டவணைப்படுத்தலாம்.


உரு 6.1 ஆசிரியர்


உரு 6.2 பொறியியலாளர்


உரு 6.3 சட்டத்தரணி


உரு 6.4 வைத்தியர்


உரு 6.5 தாதி


உரு 6.6 இராணுவ வீரர்


உரு 6.7 எழுதுவினைஞர்


உரு 6.8 விமானி


உரு 6.9 வர்த்தகர்

உங்கள் வகுப்பு நண்பர்கள் எதிர்பார்க்கும் தொழில்களை அட்டவணைப்படுத்துங்கள். விவசாயி, தொழிலாளி என்று உடலை வருத்தி செய்யும் வேலைகளைத் தெரிவு செய்வோரின் தொகை மிகவும் குறைவானதென்பதை அறிந்து கொள்வீர்கள். ஆயினும், அவ்வாறான உழைப்பாளர்களே சமூகத்திற்கு முக்கியமானவர்களாவர்.

சமூகத்தில் பல்வேறு தொழில்கள் காணப்பட்ட போதிலும் இன்று அதிகமானோரின் தெரிவாக அமைவது சமூகத்தில் உயர்வாகக் கருதப்படும் தொழில்களாகும். ஆயினும், அனைத்து தொழில்களும் சமூகத்திற்கு இன்றியமையாதவையாகும். இங்கு கவனிக்கத்தக்க விடயம் தொழில்மூலம் கிடைக்கும் வருமானம், அந்தஸ்து என்பவற்றை விட அதன்மூலம் சமூகத்திற்கு ஆற்றப்படும் சேவையாகும். வேலை உலகு பற்றிய இப்பாடத்தின் மூலம் நாம் சமூகத்திற்கு சேவையாற்றக் கூடிய தொழில் வாய்ப்புகள் பற்றி அறிந்துகொள்வோம்.

**வேலை உலகும் அதன் பல்வகைமையும்**

'' வேலை என்பது மனிதன் வாழும் கலையின் பிரதான பண்பாகும்.'' தனிநபரொருவரர் தனது தொழிலுக்கும் தினசரி நிறைவேற்றும் உண்மையான செயற்பாடுகளுக்கும்

இடையிலான தொடர்பே வேலை உலகாகும்.'' என்பது டிச்லர் (Teichler, 1999) என்பவரின் கருத்தாகும்.

வேலை உலகு பற்றிய இன்னும் சில வரைவிலக்கணங்கள் வருமாறு,

> " வேலை உலகு என்பது தற்போது பணியாற்றும் அல்லது பணியாற்ற எதிர் பார்க்கும் அனைவருக்குமான சந்தர்ப்பமாகும்.''
>
> (Rooney, 2001)

> " தனிநபர் தொடர்பு கொள்ளக்கூடிய அல்லது இருக்கின்ற தொழிற்துறைகளில், விவசாயப் பண்ணைகளில், தொழிற்சாலைகளில் காணப்படும் வேலை வாய்ப்புகளே வேலை உலகாகும். "
>
> (Soanes, 2004)

சமூகத்தில் நிலவும் அனைத்து வேலை வாய்ப்புகளும் வேலை உலகு எனப்படுகிறது என்பது மேற்படி வரைவிலக்கணங்கள் மூலம் தெளிவாகின்றது. சமூகத்தில் தொழிற்துறைகளையும் வேலை வாய்ப்புகளையும் உங்களால் உருவாக்க முடியுமா? உதாரணமாகப் பின்வரும் உருவை அவதானியுங்கள். உங்களால் அதனை மேலும் நீடிக்க முடியுமா? அதற்கு சமூகத்தில் நிலவும் பல்வேறு தொழில்களைப் பற்றிய அறிவு அவசியமாகின்றது.

**வேலை உலகின் பல்வேறு தொழில்கள்**

**விவசாயத்துறை**
- பயிர்ச்செய்கை
- மீன்பிடித்தொழில்
- கொழுந்தெடுத்தல்
- இறப்பர் பால் வெட்டுதல்
- கொப்பரா தயாரித்தல்

**சுயதொழில்**
- அழகுக்கலை
- சிறு வியாபாரம்
- ஆடை தயாரித்தல்
- பூக்கன்று விற்பனை
- உணவு வகை தயாரித்தல்
- கையடக்கத் தொலை பேசி திருத்துதல்

**கைத்தொழில்**
- வாகனம் திருத்தல்
- ஆடை தைத்தல்
- தொலைக்காட்சி, கணினி திருத்துதல்.
- கணினி தரவுகளை நிரை படுத்தல்
- விமானமோட்டுதல்

**சேவைகள்**
- போக்குவரத்து சேவை
- அஞ்சல் சேவை
- சுகாதாரச் சேவை
- வியாபாரம்
- தொலைத்தொடர்புச் சேவை
- நீர் வழங்கல் சேவை

மேற்படி தொழிற்துறைகளில் அதிகளவிலான வேலைவாய்ப்புகள் காணப்படுவதுடன் அதிகளவான ஊழியர்கள் ஈடுப்பட்டுள்ளனர் என்பதையும் நீங்கள் புரிந்திருப்பீர்கள். ஒரு நிறுவனத்தை எடுத்துக் கொண்டால் அதற்குள் பாரியளவில் வேலைவாய்ப்புகள் நிலவுவதை அவதானிக்கலாம்.

ஆடை தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை அவதானிக்கும்போது அங்கு முகாமையாளர், எழுதுவினைஞர், இயந்திரம் பழுது பார்ப்பவர்கள், உணவக சேவையாளர், மின்சார நீர்வழங்கல் சேவையாளர்கள், மேற் பார்வையாளர், சாரதிகள், வாகன நடத்துநர்கள், தரப்பரிசோதகர் என்று ஆடை தைக்கும் தொழிலாளர்களை விட அதிகளவானோர் பணியாற்றுகின்றனர்.



உரு 6.10 ஆடை தயாரிக்கும் தொழிற் சாலையில் பணியாற்றுவோர்

இந்நிறுவனத்தின் சிறப்பான செயற்பாட்டிற்கு அங்கு பணியாற்றும் ஊழியர்கள் அனைவரும் திறமையுடன் தமது பணிகளைச் செய்வது அவசியமாகும்.

வேலை உலகில் பல்வகைமை நிலவுவதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். அவ்வாறான பல்வகைத் தன்மைக்கான காரணங்கள் சிலவற்றையும் நாம் இனங்காண முடியும்.

இலங்கையில் சில தொழிற்துறைகள் குறிப்பிட்ட பிரதேசங்களில் மட்டும் சிறப்புற் றிருப்பதை அவதானிக்க முடியும்.

➢ **பிரதேசங்களுக்கிடையிலான வேறுபாடுகளும் வளங்களும்**

- நுவரெலியா - மரக்கறி வகைகளும் பூக்களும்
- காலி, மாத்தறை - மீன்பிடித் தொழில்
- அநுராதபுரம், அம்பாறை - நெற்பயிர்ச் செய்கை
- வேவல்தெனிய - பிரம்புக் கைத்தொழில்
- கஜுகம - மரமுந்திரி (கஜு) வியாபாரம்


உரு 6.11 பிரம்புக் கைப்பணிப் பொருட்கள்

மேலும், பாரம்பரியமான சில தொழிற்துறைகள் ஒரு சில குறிப்பிட்ட பிரதேசங் களுக்கு உரியனவாக இருப்பதையும் காணலாம்.

➢ **பாரம்பரியமான கைத்தொழில்கள்.**

- பிலிமதலாவ - பித்தளைப் பொருட்கள்.
- அம்பலாங்கொட- முகமூடிகளும் பொம்மலாட்டக் கைப்பணியும்


உரு 6.12 முகமூடி

• மொலகொட - களிமண் சார்ந்த உற்பத்திப் பொருட்கள்

வேலை உலகில் நிலவும் தொழில்களை மூன்று துறைகளாக வகுக்கலாம். அவையாவன

➢ **தொழிற்துறைகள்**

- அரச மற்றும் அரச உதவி பெறும் துறை
- தனியார் துறை
- சுயதொழில்கள்



உரு 6.13 சுயதொழில்களில் ஈடுபடுவோர்

தமது தொழிலை செய்யும்போது தனிநபர் தமது சக்தியை செலவிடும் வகையின் அடிப்படையில் தொழில்களை வகைப்படுத்தலாம்.

➢ **சக்தியை பிரயோகிக்கும் தன்மையின் அடிப்படையில்**

- அதிகளவில் மூளை உழைப்பை வழங்குபவர்கள்.

  (ஆசிரியர்கள், வைத்தியர்கள், பொறியியலாளர்கள், நிருவாக உத்தியோகத்தர்கள்)

- அதிகளவில் உடல் உழைப்பை வழங்குபவர்கள்.

  (விவசாயிகள், தொழிலாளிகள், தச்சர், மேசன்கள், சுத்திகரிப்பு தொழிலாளிகள்)



உரு 6.14 பொறியியலாளர்



உரு 6.15 விவசாயம் செய்வோர்

வேலை உலகென்பது எமது வாழ்க்கைக்கு உதவும் சேவை களையும் பணிகளையும் வழங்கும் சகல துறைகளையும் உள்ளடக்கியதென்பதை மேற்படி அட்டவணைகளின் மூலம் விளங்கிக் கொண்டிருப்பீர்கள். அவற்றுள் தொழிற் பல்வகைமை காணப்படுகின்றது. நாம் தொழில்களைத் தெரிவு செய்யும்போது அப்பல்வகைமையைக் கருத்திற்கொள்ள வேண்டும். பின்வரும் உரையாடல் மூலம் நீங்கள் வேலை உலகு பற்றி மேலும் விளக்கம் பெறலாம்.

சந்திரன் : நாம் செய்யும் வேலையின் பெறுமதிக்கு பணம் வழங்கப்படுமாயின் அது தான் தொழில் என்று நான் கருதுகின்றேன்.

நிர்மலா : ஆயினும், கொடுப்பனவுகள் இல்லாத வேலைகளும் இருக்கின்றனவே, பாருங்கள் அம்மா வீட்டில் செய்யும் வேலைகளுக்குப் பணம் வழங்கப் படுவதில்லையே!

வாணி : ஆமாம்! நாங்கள் பாடசாலையில் படிக்கும் வேலைக்கும் பணம் வழங்கப் படுவதில்லையே. எனது தாத்தா ஓய்வுபெற்ற ஆசிரியர் ஒருவர். அவர் ஒரு முதியோர் இல்லத்தில் சம்பளம் இன்றி வேலை செய்கின்றார். அதனைப் பொதுநலப் பணி என்கிறார்கள்.

நிர்மலா : பல்வேறு வகைப்பட்ட வேலைகள் காணப்படுகின்றன. அவற்றைத் தொழில் என்றும் சுயதொழில் என்றும் வகைப்படுத்தலாம்.

நிர்மலா : சிலர் நீலநிறக் கழுத்துப்பட்டி வேலை, வெள்ளை நிறக் கழுத்துப்பட்டி வேலை என்கின்றனர். அது என்ன?

வாணி : ஓ... அது செய்யும் வேலையைப் பொறுத்தது. தொழிற்சாலைகளில் பணி யாற்றும் தொழிலாளர் மற்றும் மேசன்மார் போன்றோரின் வேலை நீல நிறக்கழுத்துப்பட்டி வேலை எனப்படும்.

நிர்மலா : ஆமாம் நானும் அதனைக் கேள்விப்பட்டிருக்கின்றேன். அலுவலகங்களில் வேலை செய்பவர்களின் வேலை வெள்ளை கழுத்துப்பட்டி அல்லது வெள்ளைக் ஆடை வேலை எனப்படும்.

சந்திரன் : அதாவது நீலக் கழுத்துப்பட்டி வேலை என்பது தமது கரங்களால் ஏதேனுமொரு உற்பத்தியில் ஈடுப்படுவோரைக் குறிப்பதற்காகும். அப்படித்தானே?

வாணி : ஆம், மற்றுமொரு வகையில் வேலைகளை உடல்சார் வேலை, மூளை சார் வேலை எனவும் வகைப்படுத்தலாம்.

**செயற்பாடு 6.1**

- நீங்கள் வாழும் பிரதேசத்தில் மேற்கொள்ளப்படும் பல்வேறு வகை வேலைகளைப் பட்டியலிடுங்கள். அவற்றுள் நீர் விரும்பும் வேலைகளுக்கு முன்னுரிமை கொடுத்து ஒழுங்குபடுத்தி மீண்டும் பட்டியலொன்றைத் தயாரிக்க.

### தொழிற்பற்றுடன் செயற்படுவோம்

உழைப்பை உடல் உழைப்பு, மூளை உழைப்பு என இரண்டாக வகைப்படுத்தலாம். தமக்குரிய வேலையை அர்ப்பணிப்புடனும் திறமையுடனும் செய்வது மிக முக்கியமானதாகும். தமக்குரிய வேலையை மகிழ்ச்சியுடனும் விருப்பத்துடனும் செய்வதே அர்ப்பணிப்பு எனப்படும்.



உரு 6.16 வயலில் நாற்று நடும் பெண்கள்

இன்னும் இலகுவாகக் கூறுவதாயின், தனது தொழிலைப் பற்றி தான் ஈடுபாட்டுடன் இருத்தல் அர்ப்பணிப்பாகும். நபர் ஒருவர் அர்ப்பணிப்புடன் செய்யும் வேலை வெற்றியளிப்பதால், வெளிச் சமூகத்தாலும் அந்த நபரும் அவர் தொழிலும் மதிக்கப்படுவதைக் காணலாம். நகரச் சுத்திகரிப்புத் தொழிலாளரைப் பாருங்கள். அவர்கள் அப்பணியைச் செய்யாவிட்டால் நகரவாசிகளால் வாழ முடியாமல் போய்விடும். எனவே, அர்ப்பணிப்பு என்பது பொறியியல், வைத்தியத்துறைகளைப் போலவே சாரதி, நகர சுத்திகரிப்பு, கைத்தொழில், விவசாயம் எனும் சகல தொழிற் துறைகளிலும் காணப்படுகின்றது. இங்குள்ள இரு படங்களையும் அவதானித்து அத்தொழில்களின் முக்கியத்துவத்தை விளங்கிக் கொள்ளுங்கள்.

அர்ப்பணிப்பு தொடர்பில் சிந்திக்கும் போது மேற்படி தொழிற்பாடுகள் இரண்டின் மூலமும் பாரிய சமூகப் பணிகள் நிறைவேற்றப்படுவதை அவதானிக்கலாம். எந்தத் தொழிலை மேற்கொண்டாலும் அது நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான தொழில் என்ற வகையில் நாம் பெருமைப்படலாம். ஆயினும், சில தொழில்களைப் பொறுத்த வரையில் அது தொடர்பான அறிவும் சிறப்புப் பயிற்சியும் அவசியமானதாகும்.



உரு 6.17 நகர சுத்திகரிப்புத் தொழிலாளர்கள்

அவ்வாறான தொழில்களை எல்லோராலும் செய்ய முடியாதென்பதையும் கவனத்திற் கொள்ள வேண்டும். தொழிலொன்றைத் தெரிவுசெய்யும்போது தொழிலின் தன்மை, சீருடை, சம்பளம் என்பவை பற்றி மட்டுமல்ல, தன்னுடைய ஆற்றல் மற்றும் அத்தொழிலின் மூலம் சமூகத்திற்கு வழங்கக்கூடிய சேவைகள் பற்றியும் கருத்திற் கொள்ள வேண்டும்.

இலங்கையில் இன்று நிலவும் பாரிய பிரச்சினையாகக் காணப்படுவது வேலை இன்மையாகும். ஆயினும், வேலை உலகில் எத்தனையோ தொழில்கள் காணப்ப டுகின்றன. இதற்குக் காரணம் யாதெனில், தொழிற் பற்றில் காணப்படும் குறைபாடு காரணமாக, சில தொழில்களில் ஈடுபடுவதற்குத் தனி நபர்கள் விருப்பம் கொள்வ தில்லை என்பதாகும். குறிப்பாக, அதிகளவானோர் அரசாங்க அலுவலகங்களில் தொழில் புரிவதையே விரும்புகின்றனர். ஆயினும், கைத்தொழில் சார்ந்த துறைகளில் வேலை வாய்ப்புகள் காணப்படுவதை தினசரி பத்திரிகை விளம்பரங்கள் மூலம் அறிய முடிகின்றது.

**செயற்பாடு 6.2**

- உங்களுக்கு அருகில் உள்ள நூல்நிலையத்துக்குச் சென்று ஞாயிற்றுக் கிழமை பத்திரிகை ஒன்றில் காணப்படும் வேலை வாய்ப்புகளை அரசதுறை, தனியார் துறை, சேவைத் துறை எனும் வகையில் அட்டவணைப்படுத்துக.

மனிதர்கள் வேலை செய்வது ஏன் எனும் கேள்விக்கு ஜோன் பொஸ்டர் மற்றும் சிமோ பொஸ்டர் என்போர் 2014 ஆம் ஆண்டில் வழங்கிய பதில் முக்கியமானது. இதன்மூலம் தொழிற்பற்றின் முக்கியத்துவத்தை அறியலாம்.

பணம் சம்பாதிப்பதற்கு, அனுபவம் பெறுவதற்கு, தகுதியடைவதற்கு, சமூகத்திற்குப் பயனளிப்பதற்கு, இரசனையுடன் ஏதாவதொன்றை செய்வதற்கு, நேர முகாமைத்துவத்திற்கமைய, ஏனையோருடன் இணைந்து பணியாற்றுவதற்கு வேலை செய்வோம்.

**(John foster and simo foster 2014)**

தான் செய்யும் தொழில் பற்றிய தெளிவை ஏற்படுத்திக் கொள்வதன் மூலம் அதிக திருப்தியுடனும் மகிழ்ச்சியுடனும் வேலை செய்ய முடியும். தொழிற்பற்றுடன் வேலை செய்யும் பொழுது அடையக்கூடிய பயன்கள் தொடர்பாகப் பார்ப்போம்.

### தொழிற்பற்றுடன் செயற்படுவதால் ஏற்படும் பயன்கள்

**தொழில் தருநருக்கு**

★ தனது நிறுவனத்தின் புகழை மேலோங்கச் செய்தல்

★ நிறுவனம் தொடர்பாக பொது மக்களிடம் நன்மதிப்பைப் பெறுதல்

★ போட்டி நிறுவனங்களுடன் செயற்படுத்துவதை இலகு படுத்துதல்

★ தொழிலாளரை உற்சாகப்படுத்துதல்

★ நிறுவனத்தின் மூலம் அடையும் இலாபத்தை அதிகரித்தல்

**சேவை பெறுநருக்கு**

★ தமது தேவைகளை இலகுவாக நிறைவேற்றிக் கொள்ளல்

★ சமூகத்தில் வினைதிறன் ஏற்படல்

★ மனதை சமநிலைப்படுத்தல் மற்றும் நிறுவனத்தின் மீது விருப்பத்தை ஏற்படுத்தல்

★ நம்பிக்கையைக் கட்டியெழுப்புதல்

**தொழில் செய்பவருக்கு**

- ★ தனது தொழில் பற்றிய மதிப்பு ஏற்படல்
- ★ தொழிலைப்பற்றி மேலும் கற்றுக்கொள்ள ஆர்வமேற்படல்
- ★ செய்த வேலையைப் பற்றிய திருப்தியும் மகிழ்ச்சியும் ஏற்படல்
- ★ தனது நிறுவனம் பற்றிய அக்கறையுடன் கடமை புரிய முடிதல்
- ★ தனது பணியை உயர் தரத்துடன் செய்வதற்கு முயற்சித்தல்

## எல்லாத் தொழில்களும் சமூக முன்னேற்றத்திற்கு ஏதுவாகும்

ஒரு நாட்டின் அபிவிருத்திக்கு அந்நாட்டின் சகல துறைகளும் சமமாக அபிவிருத்தியடைதல் அவசியமாகும். கைத்தொழில், விவசாயம், சேவைகள் எனும் சகல துறைகளிலுமுள்ள தொழில்கள் மூலம் சமூக அபிவிருத்திக்குப் பங்களிப்பு செய்யப்படுகின்றது. சமூக முன்னேற்றம் என்பது சமூகத்தின் முன்னோக்கிய பயணம் அல்லது வளர்ச்சியைக் குறிக்கும். அதனை ஓரிரு தொழில்களால் மாத்திரம் நிறைவேற்ற முடியாது. சமூகமொன்றின் அபிவிருத்திக்காக ஆற்றப்பட வேண்டிய சேவைகள் சில வருமாறு,

**சமூக முன்னேற்றத்திற்காக நிறைவேற்றப்பட வேண்டிய தேவைகள்**

- ★ மனிதனின் அடிப்படைத் தேவைகள் (உணவு, உடை, வீடு)
- ★ உட்கட்டமைப்பு வசதிகள் (நீர், மின்சாரம், தொலைபேசி, பாதை)
- ★ ஓய்வு நேரத்தைப் பயனுள்ள வகையில் கழிப்பதற்கான வசதிகள்.
- ★ பாதுகாப்பு, சமாதானம் என்பவற்றைப் பேணுதல்
- ★ கல்வி, சுகாதார, போக்குவரத்துச் சேவைகள்.
- ★ வாழ்வாதாரத்திற்கான வருமானம் ஈட்டும் வழிகள்.

மேற்படி தேவைகளை நிறைவுசெய்து கொள்வதற்குப் பல்வேறு நபர்களும் பங்களிப்புச் செய்கின்றனர். அவ்வாறான குழுக்களிடையே உதவி ஒத்தாசை நிலவாவிட்டால் அது சமூக இருப்புக்கும் சமூக முன்னேற்றத்திற்கும் தடையாக அமையும்.

சமூக முன்னேற்றத்திற்கு உயர்நிலை அதிகாரிகள் முதல் பல்வேறு குழுக்களினதும் உழைப்பு பெற்றுக்கொள்ளப்படுகிறது. அவ்வாறான சேவைகளைச் செயற்திறனுடன் பெற்றுக் கொள்வதற்கு இக்குழுக்கள் ஒரேயளவில் பங்களிப்பைச் செய்கின்றன. எனவே, பேதங்களின்றி எல்லோருடைய சேவைகளையும் மதித்துச் செயற்படுவது சமூக முன்னேற்றத்திற்கு இன்றியமையாதது. தனது விருப்பம், தகுதி, ஆற்றல் என்பவற்றுக்கேற்ப தனக்குப் பொருத்தமான தொழிலைத் தேர்ந்தெடுப்பதன் மூலம் தனது தொழிலை சமூகத்திற்குப் பயனுள்ள வகையில் மேற்கொள்ள முடியும்.

*நகர சுத்திகரிப்புத் தொழிலாளர், ஒரு நாள் தமது கடமைகளில் ஈடுபடாவிட்டால் அந்நகரின் நிலைமை என்னவாகும்? அத்தொழிலாளர் முக்கியமற்றவர்கள் என்று எம்மால் கூற முடியுமா?*

**செயற்பாடு 6.3**

- உமது பிரதேசத்தில் காணப்படும் தொழில்கள் சிலவற்றையும் அவற்றால் சமூகத்திற்கு ஆற்றப்படும் சேவைகளையும் அட்டவணைப்படுத்துக.

### பயிற்றப்பட்ட ஊழியத்தின் முக்கியத்துவம்

"உழைப்பு" என்பது உற்பத்திக் காரணிகளுள் ஒன்றாகக் கருதப்படுகிறது. உழைப்பிற்காக வழங்கப்படும் பிரதிபலன் சம்பளம் எனப்படும். குறிப்பிட்டதொரு வேலையை தரமாக நிறைவு செய்வதற்கு தனிநபரால் வழங்கப்படும் பங்களிப்பே உழைப்பு எனலாம்.

உழைப்பில் கல்வியால் நாம் பெற்ற அறிவு, மனப்பாங்கு, திறமை என்பன செல்வாக்குச் செலுத்தும். உழைப்பு பயனுடையதாய் அமைவதற்கு அறிவு, திறன், மனப்பாங்கு ஆகிய மூன்றும் அடிப்படைகளாக அமையும்.

உழைப்பை இரண்டாக வகைப்படுத்தலாம்.

**உடல் உழைப்பு**

- அதிகளவில் உடலை வருத்தி செய்யப்படும் வேலை உடலுழைப்பு எனப்படும்.
- சாரதி வேலை, விவசாய வேலை, பாரம் சுமத்தல், கொழுந்தெடுத்தல், மீன்பிடித்தல் கைத் தொழிற்சாலை வேலைகள் முதலியன.

**மூளை உழைப்பு**

- அதிகளவில் மூளையை அல்லது சிந்தனையைப் பிரயோகித்து செய்யும் வேலை மூளை உழைப்பு எனப்படும்.
- ஆசிரியர், வைத்தியர், சட்டத் தரணி, பொறியியலாளர், திட்டமிடல் அலுவலர், நிர்வாக உத்தியோகத்தர் முதலியன.

இதேபோன்று, உழைப்பைப் பயிற்சியுடனான உழைப்பு, பயிற்சியற்ற உழைப்பு எனவும் இரண்டாக வகைப்படுத்தலாம். பயிற்சியுடனான உழைப்பு (பயிற்றப்பட்ட ஊழியம்) என்பது விஷேட திறன்களுடன் கூடிய பயிற்சி பெற்ற தொழிலாளரைக் குறிக்கும். கல்வியின் அறிவை வளர்த்துக் கொள்வதன் மூலம் மாத்திரம் தொழிற்பயிற்சியைப் பெற்றுவிட முடியாது. அதற்காக அவ்வத்தொழில்களுக்குரிய பயிற்சியைப் பெற்றிருத்தல் அவசியமாகும். ஒவ்வொரு தொழிலுக்குமான தேர்ச்சிகளையும் தொழிற்பயிற்சியையும் பெற்றுக் கொள்வது தொழிற்பயிற்சி எனப்படும்.

பின்வரும் உதாரணங்களை அவதானியுங்கள்.

- ஆசிரியர்களுக்கும் கற்பித்தல் தொடர்பான பயிற்சி வழங்கப்படுவதுடன் சேவைக்காலத்தில் இடையிடையே பயிற்சி வழங்குவதும் உண்டு.

- வைத்தியராவதற்கான கல்விக்கு மேலதிகமாக வைத்தியசாலையில் சிரேஷ்ட வைத்தியரின் கீழ் பயிற்சி வழங்கப்படுதல்.

- சாரதிகளுக்கான அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவதற்கு முன்னர் அதற்கான விசேட பயிற்சியைப் பெறுவதும் செய்முறைப் பரீட்சையில் சித்தியடைவதும் அவசியமாகும்.

உடலுழைப்பிற்குப் பயிற்சி தேவையில்லை எனப் பலரும் கருதலாம். ஆயினும் தொழிற்சாலைகளில் இயந்திர சாதனங்களுடன் வேலை செய்வதற்கான பயிற்சியை வழங்குவதன் மூலம் தொழிலாளரின் செயற்திறனை மேம்படுத்த முடியும்.

## தொழிற்பயிற்சி இரண்டு முறைகளில் வழங்கப்படும்

1. சேவைக்கு முன்னரான பயிற்சி

   தொழிலுக்கு சேர்த்துக் கொள்வதற்கு முன்னர் வழங்கப்படும்.

   உதாரணம் : வீட்டு மின்னினைப்பு வேலைக்காக தொழினுட்பக் கல்லூரி யில் வழங்கப்படும் பயிற்சி, கற்பித்தலுக்கான தேசிய கல்வியியற் கல்லூரிகளில் வழங்கப்படும் பயிற்சி

2. சேவைக்காலப் பயிற்சி - தொழிலுக்குச் சேர்த்துக் கொண்ட பின்னர் வழங்கப்படும்.

   உதாரணம் : மோட்டார் வாகனம் திருத்தும் வேலைக்காக பயிற்சிபெற்ற ஒருவரின்கீழ் வேலைக்கமர்த்துதல், ஆசிரியர், வைத்தியர் களுக்கு சேவையாற்றும்போது காலத்திற்குக் காலம் வழங்கப் படும் பயிற்சி ஆகியன.

வேலையுலகில் சில தொழில்களுக்கு விசேடமான பயிற்சி தேவைப்படும். பயிற்சியைப் போன்றே அனுபவமும் பழக்கமும் அப்பயிற்சியின்போது முக்கியத்துவம் பெறும். உதாரணமாக, விமானமோட்டுதல், விண்வெளிப் பயணம், சத்திரசிகிச்சை செய்தல், தொழிற்சாலைகளில் நவீன தொடர்பாடல், தொழினுட்பத்தைப் பிரயோகித்தல்.

வேலையுலகில் தொழில்களுக்காக பயிற்சி பெற்ற தொழிலாளர்களின் பால் கவனம் ஈர்க்கப்படுகின்றது. சம்பளத்தைப் பெற்றுக் கொண்டாலும் பயிற்சி பெறாத தொழிலாளரை விட பயிற்சி பெற்ற தொழிலாளரின் சம்பளம் அதிகமாகக் காணப்படும். எனவே தொழிற்பயிற்சி என்பது முக்கியமானது. வேலை செய்வதற்குப் பழக்குதல் அல்லது பயிற்சியளித்தல் மூலம் ஒருவருக்கு தனது நிறுவனத்தில் தன்னை முக்கியமானவராக அடையாளப்படுத்திக் கொள்ள முடியும்.


வேலை உலகை வெற்றி கொள்வதற்கான பயிற்சிகளை வழங்கும் பல்வேறு நிறுவனங்களும், பயிற்சி நெறிகளும் இலங்கையில் காணப்படுகின்றன. தற்போது கைத்தொழிற்துறையின் பயிற்சிகளை வகைப்படுத்துவதற்காக (NVQ) 3 ஆம் நிலையிலிருந்து 7 ஆம் நிலைவரை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத்தகுதியைப் பாடசாலைப் பருவத்திலும் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன.

**தொழிற் பயிற்சி நிறுவனங்கள்**

- ★ தொழிற்பயிற்சி அதிகார சபை
- ★ தேசிய தொழிற்பயிற்றுனர் சபை
- ★ தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்
- ★ தொழினுட்பக் கல்லூரிகள்
- ★ உயர் தொழினுட்ப நிறுவனங்கள்
- ★ விதாதா நிலையங்கள்
- ★ நெனசல (அறிவகம்)
- ★ ஹோட்டல் பாடசாலை

**பயிலக்கூடிய தொழிற்பயிற்சி நெறிகள்**

- ★ மின்சார வேலை
- ★ நீர்க்குழாய் பொருத்துநர்
- ★ தச்சுத் தொழில்
- ★ திட்டவரைபடம் தயாரித்தல்
- ★ கணினிப் பயிற்சி
- ★ ஆங்கிலமும் வேறு மொழிகளும்
- ★ உணவுத் தயாரிப்புத் தொழினுட்பம்
- ★ வீட்டு அலங்காரம்
- ★ அழகுக்கலைப் பயிற்சிகள்




உரு 6.18 தொழிற்பயிற்சி தொடர்பான பத்திரிகை விளம்பரம்

மேலே குறிப்பிடப்பட்டுள்ளவை அரச நிறுவனங்களுள் சிலவாகும். இவற்றுக்கு மேலதிகமாகத் தனியார் நிறுவனங்களாலும் தொழிற்பயிற்சிப் பாடநெறிகள் நடாத்தப் படுகின்றன.

உதாரணம் :

- தனியார் தொழினுட்பக் கல்லூரி
- பார வாகனங்களைப் பயிற்றுவிக்கும் நிறுவனங்கள்
- அழகுக் கலை, உணவு தயாரிக்கும் கலை தொடர்பான பயிற்சி வழங்கும் நிறுவனங்கள்.
- கணினிப் பயிற்சி நிறுவனங்கள்
- ஆங்கில மொழிப் பயிற்சிக் கல்வி நிறுவனங்கள்
- செயலாளர், வரவேற்பாளர் பயிற்சிளை வழங்கும் நிறுவனங்கள்


**செயற்பாடு 6.4**

- உமது பிரதேசத்திலுள்ள தொழிற்பயிற்சி வழங்கும் நிறுவனங்கள் யாவை ?
- அந்நிறுவனங்களால் வழங்கப்படும் பயிற்சி நெறிகளின் வகைகள் யாவை ?
- பத்திரிகைகளின் உதவியுடன் தொழிற்பயிற்சி வழங்கும் நிறுவனங்கள் மற்றும் அவற்றால் வழங்கப்படும் பாடநெறிகள் என்பவற்றை அட்டவணைப்படுத்துக.

## சிறந்ததோர் உழைப்பாளியின் பண்புகள்

நாட்டை அபிவிருத்தி செய்யும் பிரதான காரணியாக விளங்குவது ஊழியப்படையாகும். எனவே, உழைப்பாளியிடம் நல்ல பண்புகளை விருத்தி செய்து, அவரின் அர்ப்பணிப்பு, மனப்பாங்கு ஆகியவற்றின் மூலம் அவரது தொழிற் பங்களிப்பை உச்சநிலையில் வைத்துக்கொள்ள முடியும்.

உழைப்பாளியிடம் காணப்பட வேண்டிய நல்ல பண்புகள் தொடர்பாக பல்வேறு கருத்துகள் முன்வைக்கப்பட்டுள்ளன. அவற்றுள் பிரதானமான கருத்துக்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன. அவை தவிர உழைப்பாளியிடம் காணப்பட வேண்டிய வேறு பண்புகள் சிலவும் இங்கு குறிப்பிடப்பட்டுள்ளன.




உரு 6.19

இவை தவிர உழைப்பாளியிடம் காணப்பட வேண்டிய மேலும் சில பண்புகளும் கீழே தரப்பட்டுள்ளன.

குறிப்பிட்ட நேரத்திற்கு வேலைக்குச் சமூகமளித்தல், முழுமையான வேலை நேரம் வரை நிறுவனத்தில் இருத்தல், அர்ப்பணிப்பு, திருப்தியுடன் பணியாற்றல், கடமை, பொறுப்புகளை முறையாக நிறைவேற்றல், ஒத்துழைப்பு, ஒற்றுமை, தொழில் அபிவிருத்தி, தலைமைத்துவத்தை மதித்தல், நிறுவனத்தின் சட்டதிட்டங்களையும், மரபுகளையும் மதித்தல், தனிப்பட்ட மற்றும் அரசியல் வாழ்க்கையைத் தொழிலுடன் தொடர்பு படுத்திக் கொள்ளாமை.

**செயற்பாடு 6.5**

- *சிறந்த ஊழியர் ஒருவரிடம் காணப்பட வேண்டிய பண்புகளைப் பட்டியலிடுக.*

## வேலைத்தளத்தின் எதிர்பார்ப்புகள்

*வேலை உலகு செயற்படும் இடமே வேலைத்தளம் எனப்படும் அல்லது தொழில் செய்யும் இடம் என்றும் கூறுவர்.*

| | | | |
|---|---|---|---|
| *உதா :* | *வைத்தியர்* | - | *வைத்தியசாலை* |
| | *ஆசிரியர்* | - | *பாடசாலை* |
| | *தொழிலாளி* | - | *தொழிற்சாலை* |

*வேலைத்தளமொன்றில் தொழில்தருநர் அங்கு தொழில் புரிவோரிடம் தனது நிறுவனத்திற்கு இலாபம் ஈட்டித் தருவதை மட்டும் எதிர்பார்ப்பதில்லை. மாறாக தனது சேவை பெறுநரின் தேவையை உச்ச அளவில் நிறைவேற்றுவதையும் எதிர்பார்க்கின்றார். ஏனைய எல்லாவற்றையும் விட தற்போது வேலையுலகு விரைவாக மாற்றமடைந்து வருகின்றது. முன்னரைவிட உத்தியோகத்தர், ஊழியர்களிடம் எதிர்பார்த்த விடயங் களும் மாற்றமடைந்துள்ளது.*

*கார்ல் டி.ஜெரல்ட் என்பவர் உத்தியோகத்தர் அல்லது ஊழியர் ஒருவரிடம் எதிர்பார்க்கும் தேர்ச்சிகளை அவற்றின் முக்கியத்துவத்திற்கேற்ப பின்வருமாறு ஒழுங்குபடுத்தியுள்ளார்.*

1. விமர்சன ரீதியான சிந்தனையும் பிரச்சினைகளைத் தீர்த்தலும்
2. தொடர்பாடல் சாதனங்களைப் பயன்படுத்தல்
3. குழுவாகச் செயற்படுதலும், ஒத்துழைப்பு வழங்குதலும்
4. ஆக்கபூர்வமான செயற்பாடுகளும் புதிய கண்டுபிடிப்புகளில் ஈடுபடலும்
5. பல்வகைமைக்கு ஏற்பச் செயற்படல்
6. தலைமைத்துவப் பண்புகளை வளர்த்துக் கொள்ளல்
7. வாய்மொழித் தொடர்பாடலை வளர்த்துக் கொள்ளல்
8. வேலைக்குரிய ஒழுக்க விதிகளைக் கடைப்பிடித்தல்
9. ஒழுக்கத்தைக் கடைப்பிடித்தல்
10. எழுத்து மூலமான தொடர்பாடலை வளர்த்துக் கொள்ளல்
11. சுயகட்டுப்பாடு / வாழ்க்கைக்கான கல்வி
12. வெளிநாட்டு மொழிகளில் தேர்ச்சி

(Carl D. Jerald, 2009)

இங்கு ஊழியரின் உள்ளம், நடத்தை ஆகிய இரண்டிலும் மாற்றம் ஏற்பட வேண்டும் என்பது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதேபோன்று வேலைத்தள ஊழியரிடம் எதிர்பார்க்கும் விடயங்கள் பின்வருமாறு,

வெளித்தோற்றத்தைச் சிறப்பாகப் பேணுதல், உரிய நேரத்திற்குச் சமூக மளித்தல், குறிப்பிட்ட நேரம் வரை வேலை செய்தல், வேலைத்தளத்தின் முன்னேற்றத்திற்கு அர்ப்பணிப்புடன் ஈடுபடல், செயற்றிறன், பெற்றுக் கொள்ளும் சம்பளத்திற்கு உரிய பணியை உச்சளவில் நிறைவேற்றல்

இவை தொடர்பாக பற்றி உங்களுக்கு அருகில் அமைந்துள்ள அரச அல்லது தனியார் துறை நிறுவனத் தலைவர் ஒருவரைச் சந்தித்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

## ஊழியர்களின் உரிமைகளும் பொறுப்புகளும்

பொருட்கள் சேவைகளினது உற்பத்திச் செயற்பாடு நிலைபெறுவது தனிநபரிடம் ஏற்படும் மகிழ்ச்சி மற்றும் தனிநபரின் தேவைகள் பூர்த்தியாவதன் அடிப்படையிலாகும். தனிநபரிடம் மகிழ்ச்சியை ஏற்படுத்துவதாயின், ஊழியர்களின் உரிமைகளைப் பெற்றுக்கொடுத்தல் கட்டாயமானதாகும். கார்ல்மார்க்ஸ் மற்றும் மாஸ்லோ முதலிய அறிஞர்களின் கருத்துப்படி, தனிநபர்களின் தனிப்பட்ட தேவைகள் பூர்த்தியாகும்போதே சிறந்த உற்பத்திகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

ஊழியர் உரிமைகள் என்பது ஊழியர் தமது தொழிலை மேற்கொள்வதற்குத் தேவையான அடிப்படைகள் எனலாம். ஊழியர் உரிமைகளைப் பாதுகாப்பது தொடர்பில் இலங்கையில் பல்வேறு பொறிமுறைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அவற்றுள் சில வருமாறு,

- ஊழியர் சேமலாப நிதியச் சட்டம்
- பெண்கள், சிறுவர்கள், இளைஞர்களை வேலைக்கமர்த்துவதற்கான சட்டம்
- பெண்களை சுரங்கத் தொழிலில் ஈடுபடுத்துவதற்கான சட்டம்
- சம்பள நிர்ணய சபை, பிரசவ விடுமுறைஅனுமதிகளும் தொழிற் சங்க நடவடிக்கைகளுக்கான ஒழுங்குகளும்.
- கடைகள் மற்றும் காரியாலய ஊழியர் தொடர்பான சட்டம்
- இலங்கை வெளிநாட்டுச் சேவைகள் சட்டம்

மேற்படி சட்டதிட்டங்கள் மூலம் ஊழியர் உரிமைகளைப் பாதுகாப்பது தொடர்பில் விசேட வேலைத்திட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

அதிக சந்தர்ப்பங்களில் ஊழியர் தமது உரிமைகளைப் பெற்றுக்கொள்வது தொடர்பில் போராட்டங்களில் ஈடுபடுவதைக் காணலாம். உரிமைகளைப் பெற்றுக் கொள்வதைப் போலவே, ஊழியர் தமது பொறுப்புகளைச் சரிவர செய்ய வேண்டும். தமது கடமைகளையும் பொறுப்புகளையும் சரிவர நிறைவேற்றும்போது உரிமைகளும் கிடைக்கப்பெறும் என்பதை மறக்கக் கூடாது. அவ்வாறான சில உரிமைகளும் கடமைகளும் பின்வருமாறு,

| உரிமைகள் | கடமைகள் |
| --- | --- |
| • கௌரவத்துடன் தொழிலில் ஈடுபடல் | • உரிய நேரத்திற்கு சமூகமளித்தல் |
| • அடிப்படை உரிமைகளைப் பெற்றுக்கொள்ளல் | • தொழிலுக்கு ஏற்ற வகையிலான தோற்றத்துடன் இருத்தல் |
| • பாதுகாப்பான வேலைத்தளம் | • நல்ல பண்புகளைக் கடைப் பிடித்தல் |
| • சுத்தமானதும் மகிழ்ச்சிகரமானது மான வேலைத்தளம் | • உத்வேகத்துடன் உழைத்தல் |
| • வேலைக்குத் தேவையான கருவி களையும் சாதனங்களையும் பெற்றுக்கொள்ளல் | • குழுவின் அங்கத்தவர் எனும் வகை யில் வேலை செய்தல் |
| • உணவு இடைவேளை | • தேவையான உழைப்பை உரிய வகையில் பெற்றுக் கொடுத்தல் |
| • தொழிலுக்கு ஏற்ற பயிற்சி | • வேலைத்தளத்தின் கௌரவத்தைப் பாதுகாத்தல் |
| • விடுமுறைகளைப் பெற்றுக் கொள்ளும் உரிமை | • வேலைத்தளத்தில் சொத்துக்களை பாதுகாத்தல் |
| • தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடல் | • ஒத்துழைப்புடனும் பொறுப் புடனும் கடமையாற்றல் |
| • தகுதிக்கேற்ப பதவி உயர்வு பெறுதல் | |

**செயற்பாடு 6.6**

- அலுவலக ஊழியர்கள் தமது கடமைகளை நிறைவேற்றுவதன் முக்கியத்துவம் எனும் தலைப்பில் சுவர்ப்பத்திரிகைக்கு கட்டுரை ஒன்று எழுதவும்.

## தனிப்பட்ட தொழிற் பண்புகளை வளர்த்துக்கொள்ளல்

வேலை உலகில் ஒத்துழைப்புடன் செயற்படுவதைப் போலவே தனிப்பட்ட வகையிலும் தமது செயலாற்றுகையினை மேம்படுத்திக் கொள்வது அவசியமாகும். செயலாற்றுகை என்பது தமது திறமைகளை உயரிய மட்டத்தில் வெளிக்கொண்டு வரும் வகையில் செயற்படுவது ஆகும். இதில் மிகவும் முக்கியமானது தனது ஆற்றல், திறமை, இரசனை என்பவற்றுக்குப் பொருத்தமான தொழிலைத் தேர்ந்தெடுப்பதாகும்.

தற்போது செயலாற்றுகை உயர் மட்டத்தில் பேணுவதற்காக மரபு ரீதியான முறைகளுக்குப் பதிலாக நவீன தொழினுட்ப முறைகளைப் பயன்படுத்துவதே சிறந்தது. ஊழியர்கள் தொழிற் பண்புகளை வளர்த்துக் கொள்வதும் முக்கியமானது. வேலை உலகு எதிர்பார்க்கும் தொழில் திறமைகளை இனங்காண்பதோடு தன்னிடமுள்ள திறமைகளையும் இனங்கண்டு செயற்படுத்துவதும் கட்டாயமானதாகும்.


**தற்காலத்தில் ஊழியர் ஒருவர் வளர்த்துக்கொள்ள வேண்டிய பண்புகள்**

- குழு மனப்பான்மையுடன் செயற்படல்
- பல்வேறு மொழிகளிலும் பணியாற்றல்
- தலைமைத்துவப் பண்புகளை வளர்த்துக்கொள்ளல்
- முன்வைக்கும் ஆற்றல்
- பகுப்பாய்வு செய்யும் ஆற்றல்
- சிறந்த ஆளிடைத்தொடர்பை ஏற்படுத்திக்கொள்ளல்
- உயர்ந்த மட்டத்தில் ஆளுமையைப் பேணல்
- முடிவெடுத்தலும் பிரச்சினைகளை இனங்காணலும்
- ஏனையோரின் கருத்துகளை செவிமடுத்தலும் சகித்தலும்.
- நவீன தொழினுட்பக் கருவிகளைப் பயன்படுத்தல்



உரு 6.20 கணினிகளுடன் வேலை செய்யும் குழுவினர்

தனிப்பட்ட ரீதியில் தொழிற்பண்புகளை வளர்த்துக் கொள்வதற்கான பல்வேறு கற்றல் முறைகளும் காணப்படுகின்றன.




தென் புளோரிடா பல்கலைக்கழகம் 2014 ஆம் ஆண்டு வெளியிட்டுள்ள மேற்படி கற்றல் முறைகளை இலங்கையில் உள்ள ஊழியர்களும் தமது தனிப்பட்ட தொழில் பண்புகளை மேம்படுத்திக் கொள்வதற்காகப் பிரயோகிக்க முடியும்.

## சேவை பெறுநர்களைத் திருப்திப்படுத்துவதற்கான வழிவகைகள்

சேவை பெறுநர் எனப்படுபவர் ஒரு நிறுவனத்தின் சேவைகளைப் பெற்றுக் கொள்ளும் நபராவார். சேவை பெறுநர் தான் பெற்ற சேவையின் மூலம் அடையும் திருப்தியே அந்நிறுவனத்தின் வளர்ச்சிக்குக் காரணமாயமையும். விசேடமாகத் தனியார் நிறுவனங்கள் சேவை பெறுநரின் திருப்தி பற்றி அதிக கவனம் செலுத்துகின்றன. அதற்குக் காரணம், திருப்தியடைந்த சேவை பெறுநர் தொடர்ந்தும் நிறுவனத்துடன் இணைந்திருப்பது அதன் வளர்ச்சிக்கு உதவும் என்பதனாலேயாகும்.

தொலைபேசி நிறுவனங்களின் சேவை பெறுநர்களை நோக்கின், அந்நிறுவனத்தின் கட்டணங்கள் உயர்ந்தாலும், சேவை பெறுநர் அந்நிறுவனத்தைக் கைவிடாமைக்கான காரணம் அந்நிறுவனத்தினால் அவர் அடைந்த திருப்தியாகும்.

அது சேவை பெறுநர் திருப்திக்கான சான்றிதழாகும். அதேபோன்று, வாழ்த்துக் கடிதங்கள் கிடைக்கப் பெறுதல், பாராட்டு வைபவங்களை ஏற்பாடு செய்தல், அந்நிறுவனத்தைப் பிரபல்யப்படுத்தல் முதலியனவும் சேவை பெறுநரின் திருப்தியின் வெளிப்பாடுகளாகும்.

சேவை பெறுநரைத் திருப்திப்படுத்தக் கூடிய ஒன்பது வழிகள் தொடர்பாக ஜெரி கிரகரி என்பவர் 2013 ஆம் ஆண்டில் குறிப்பிட்டுள்ளார்.

1. சேவை பெறுநரை உங்கள் தலைவராகக் கருதுங்கள்
2. சேவை பெறுநரின் திருப்தியை மதிப்பீடு செய்யுங்கள்
3. சேவை பெறுநரிடம் நம்பிக்கையைக் கட்டியெழுப்புங்கள்
4. சேவை பெறுநரினால் ஏற்பட்ட பிழைகளை மறந்து விடுங்கள்
5. சேவை பெறுநரின் எதிர்பார்ப்புகளைப் பட்டியலிடுங்கள்
6. சேவை பெறுநரை சரியான முறையில் ஆய்வு செய்து அறிந்து கொள்ளுங்கள்
7. மின்னஞ்சல் (E Mail) ஊடாக அவர்களுடன் கொடுக்கல் வாங்கல் செய்யுங்கள்
8. சேவை பெறுநருடன் சமூக வலைத்தளங்களின் ஊடாக தொடர்பு கொள்ளுங்கள்
9. சேவை பெறுநரிடம் பொய்யுரைப்பதைத் தவிர்த்துக் கொள் ளுங்கள் (Jerry Gregoire, 2013)

சேவை பெறுநரைத் திருப்தியடையச் செய்யக் கூடிய மேலும் சில வழிமுறைகளும் காணப்படுகின்றன.

எப்போதும் பொறுப்பேற்கும் நிலையிலிருத்தல், நேரடியாக கருத்துப் பரிமாற்றம் செய்தல், உடன் பதில்களை வழங்குதல், நேரான அனுபவங்களைப் பெற்றுக்கொடுத்தல், தனிப்பட்ட வகையில் உதவுதல், சேவை பெறுநரின் பக்கத்திலிருந்து சிந்தித்தல், சேவை பெறுநரின் கருத்துகளைச் செவிமடுத்தல், அவர்கள் மகிழும் விதத்தில் அவர்களைக் கவனித்தல்.

சில நிறுவனங்களில் சேவை பெறுநரை மதிக்கின்ற வகையிலான வாசகங்களை காட்சிப்படுத்தியிருப்பதை அவதானிப்பீர்கள். அவைகூட சேவை பெறுநரை திருப்திப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்படுகின்ற ஒரு நடவடிக்கையாகும்.

**செயற்பாடு 6.7**

- நீர் சேவை வழங்குகையில் உங்கள் சேவைபெறுநரைத் திருப்திப்படுத்துவதற்கு மேற்கொள்ளும் நடவடிக்கைகளைப் பட்டியலிடுக.
- பல்வேறு நிறுவனங்களிலும் காட்சிப்படுத்தப்பட்டுள்ள சேவை பெறுநரை மதிக்கும் வாசகங்களைத் திரட்டுங்கள். நீங்களும் அவ்வாறனதொரு வாசகத்தை உருவாக்குங்கள்

## வருமானமீட்டலும் வாழ்க்கைக் கோலமும்

வேலையுலகு தொடர்பாக வினவுகையில், அதிகமானோரின் விருப்பமாக அமைவது வைத்தியர், பொறியியலாளர் முதலிய தொழிற்துறைகளாகும். அதற்கான காரணம் அத்தொழில்கள் மூலம் அதிக வருமானம் ஈட்டப்படுவதும் அவை சமூகத்தினால் மதிக்கப்படுவதுமாகும். எனவே வேலை உலகில் வருமானம் என்பது பிரதான காரணியாக விளங்குகின்றது. தொழிலொன்றுக்கு விண்ணப்பிக்கும்போது கூட முதலில் நோக்குவது சம்பளத்தின் அளவையே. அதற்குக் காரணம், நல்ல வருமானம் கிடைத்தாலே வாழ்க்கைத் தரத்தை மேல்நிலையில் வைத்து சிறப்பாக வாழ முடியும் எனும் எண்ணமாகும்.

கிடைக்கும் வருமானத்தின் அடிப்படையிலான சாதக, பாதக நிலைகள் வருமாறு,

| | |
|---|---|
| **சாதகங்கள்** | ஊழியரின் செயற்றிறன் அதிகரித்தல், தொழில் திருப்தி ஏற்படல், வள விரயம் குறைவடைதல், ஊழியர்களின் திருட்டு, ஊழல் என்பன குறைவடைதல், நிறுவனத்துடன் நெருக்கமாக இருத்தல். |

| | |
|---|---|
| **பாதகங்கள்** | அதிக விடுமுறை எடுத்தல், வேலைகள் தாமதமாதல், ஆர்ப்பாட் டங்கள் செய்தல், நிறுவனத் தகவல்கள் வெளியாருக்கு வழங்கப் படுதல், திருடுவதற்குத் தூண்டப்படுதல், விரைவாகக் சே வையிலிருந்து விலகுதல், நிறுவனத்தின் முன்னேற்றத்தில் ஆர்வமின்மை |

அதிகளவில் சம்பளம் கிடைக்கும்போது ஊழியர் நிறுவனத்துடன் நெருங்கிய தொடர்பை மேற்கொள்வதுடன், அவரின் ஆளுமை, நிலைப்பாடு முதலிய தொழிற் பண்புகளை மேம்படுத்திக் கொள்ளவும் நடவடிக்கைகளை மேற்கொள்வார். அதேபோன்று வாழ்க்கைச் செலவிற்குப் போதிய சம்பளம் கிடைக்காத போது திருட்டு, இலஞ்சம், ஊழல் முதலிய குற்றச் செயல்களில் ஈடுப்படுவதற்கான வாய்ப்புக்களுமுண்டு. அது அவரையும் நிறுவனத்தையும் பாதிப்பதாக அமையும். வாழ்க்கைச் செலவுக்குப் போதுமான சம்பளத்தை வழங்குவது நிறுவனத்தின் பொறுப்பாகும். அவ்வாறே கிடைக்கும் சம்பளத்தைக் கொண்டு தனது வாழ்க்கைக் கோலத்தைச் சரியாக அமைத்துக் கொள்வது ஊழியரின் கடமையாகும்.

## பொழிப்பு

- வேலையுலகு பல்வகைப்பட்டது.
- சகல தொழில்களும் சமூகத்திற்கு முக்கியமாகின்றன.
- தொழில்களில் உயர்வு, தாழ்வு எனும் பேதம் கிடையாது.
- தொழிற்பற்றுடன் வேலை செய்யும்போது திருப்தி ஏற்படுகின்றது.
- எல்லாத் தொழில்களும் சமூக முன்னேற்றத்திற்குக் காரணமாக அமைகின்றன.
- தொழிலுக்கு உழைப்பு முக்கியமானது. அதிலும் பயிற்சியுடனான உழைப்புக்கு கேள்வி நிலவுகின்றது.

- உழைப்பாளி நல்ல தொழிற் பண்புகளை வளர்த்துக் கொள்ளல் வேண்டும்.
- வேலைத்தளத்தின் எதிர்பார்ப்புகள் மீதும் கவனம் செலுத்த வேண்டும்.
- ஊழியர் ஒருவர் அவரது உரிமைகள், பொறுப்புகள், தொடர்பாக அறிந்திருத்தல் வேண்டும்.
- தனிப்பட்ட வகையில் தரக் கணிப்பை மேம்படுத்திக் கொள்வது நிறுவனத்திற்கும் எமக்கும் நன்மையளிக்கும்.
- சேவை பெறுநர்களைத் திருப்திப்படுத்துவது ஊழியரின் கடமையாகும்.
- தொழில்மூலம் கிடைக்கும் வருமானம் ஊழியர்களின் வாழ்க்கையை மேம்படுத்திக் கொள்வதில் செல்வாக்குச் செலுத்தும்.

## ஒப்படை

1. நீங்கள் எதிர்காலத்தில் மேற்கொள்ள எதிர்பார்க்கும் வேலைக்கு ஏற்ப அதற்கான தொழிற்துறையைத் தெரிவு செய்யுங்கள்.
2. உங்கள் பாடசாலைத் தொழில் வழிகாட்டல் ஆசிரியருடன் கலந்துரையாடி நாம் வளர்த்துக் கொள்ளக் கூடிய தொழிற்பண்புகளை இனங்கண்டு பட்டியல் ஒன்றைத் தயார் செய்யுங்கள்.
3. நீங்கள் எதிர்பார்க்கும் தொழிலின் மூலம் சமூகத்திற்கு ஆற்றக்கூடிய சேவைகள் உள்ளடங்கும் வகையில் சுவர்ப்பத்திரிகைக்கு கட்டுரை ஒன்று எழுதுங்கள்.